விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 13 திங்கட்கிழமை (27.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 191

# விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த எனது வெற்றி நினைவுகள் மழுங்கடிக்கப்படுகிறது

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டு வந்த தனது ஆட்சிக்காலம் தொடர்பான பொதுமக்களின் நினைவுகளைத் துடைத்தெறிய மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தற்போதைய அரசாங்கம் முயற்சிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## சீனிக்கான வரியை அதிகரிக்க யோசனை

(கொழும்பு)

சீனி உற்பத்தி தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள வரி வீதத்தை அதிகரிக்க அமைச்சரவையில் யோசனை ஒன்றை முன்வைக்கவுள்ளதாக, அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

· தொற்றா நோய்கள் மக்களுக்கு ஏற்படுவதை கட்டுப்படுத்தவே இந்த 24ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.போதனாவில் மருத்துவர்கள் காலவரையற்ற பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் காலவரையற்ற பணிப்புறக்கணிப்பை மேற்கொள்வதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை அரச வைத்திய சங்கத்தினர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில்,

யாழ்.வைத்தியசாலை சத்திர சிகிச்சை கூடத்தின் பொறுப்புத் தாதி, பெண் வைத்தியர் ஒருவரின் கடமையைச் செய்வதற்கு இடையூறு விளைவித்தமைக்கும் வைத்தியரை அச் 23ஆம் பக்கம் பார்க்க....

## பாலத்தில் மோதுண்டு மோ.சைக்கிள் விபத்து

### ஒருவர் பலி; இருவர் படுகாயம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சியில் மோட்டார் சைக்கிளொன்று பாலத்தில் மோதி விபத்துக்குள்ளானதில், ஒருவர் பலியானதுடன் இருவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 24ஆம் பக்கம் பார்க்க....

## போதைப்பொருள் பாவனை யாழ்ப்பாணம் முதலிடம்



(கொழும்பு)

போதைப்பொருள் பாவனையில் முதலாம் இடத்தில் யாழ்ப்பாணமும், இரண்டாம் இடத்தில் நுவரெலியா மாவட்டமும், மூன்றாம் 24ஆம் பக்கம் பார்க்க....

## கொத்துக்குண்டை நான் வீசவில்லை

### குற்றச்சாட்டை மறுத்து கோத்தா பேச்சு

(கொழும்பு)



தாம் பாதுகாப்புச் செயலாளராகப் பதவி வகித்த காலத்தில், இலங்கை படைகளால் கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்படவில்லை என முனனாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

த கார்டியன்நாளிதழ்எழுப்பியுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பாக பதிலளித்துள்ள அவர், நான் பாதுகாப்புச் செயலாளராகப் பணியில் இருந்த காலத்தில், கொத்துக்குண்டுகள் கொள்வனவு செய்யப்படவில்லை.

எனது காலத்தில் கொத்துக்குணடுகள் பயன்படுத்தப்படவில்லை என்று உறுதியாக கூற முடியும். வெளியிடப்பட்டுள்ள் சில ஒளிப்படங்களை மாத்திரம், சான்றாக கருத முடியாது. இந்தக் குற்றச்சாட்டுக்கு ஏனைய ஆதாரங் 23ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (உ/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
கணக்கீடு I

உள்ளே...

## இராணுவ தடுப்பு அகற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை இராணுவ தடுப்பு அரண் (வீதித்தடை) 26 வருடங்களின் பின்னர் நேற்றைய தினம் முற்றாக அகற்றப்பட்டதுடன் காங்கேசன்துறை புகையிரதநிலை 24ஆம் பக்கம் பார்க்க....

காணாமல் போனோர் ● காணி விடுவிப்பு


## நல்லூர் ஆலயமுன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தக்கோரியும் வடக்கில் காணிவிடுவிப்பு மற்றும் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தியும் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்ட வண்ணம் உள்ளார்கள் என்பதை சர்வதேசத்திற்கு தெரியப்படுத்தும் நோக்கிலும் பல்வேறு சமூக அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கவனயீர்ப்பு போராட்டங்கள் இன்று காலை யாழ்.நல்லூர் ஆலய முன்றலில் முன்னெடுக்கப்படவுள்ளது. 24ஆம் பக்கம் பார்க்க....

## இந்தியாவுடனும் சீனாவுடனும் சம அளவில் நல்லுறவு - ரணில்

(கொழும்பு)



உலகப் பொருளாதார நெருக்கடி சவாலை வெற்றிகொள்வது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதற்காக இந்தியாவுடனும் சீனாவுடனும் சம 24ஆம் பக்கம் பார்க்க....

# நகுலேஸ்வரம் கடற்பகுதியில் இறங்குதுறை அமைக்கப்படும்

## ஆரம்ப கட்ட நிகழ்வு நேற்று

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கென கீரிமலை நகுலேஸ்வரம் கடற்பகுதியில் இறங்குதுறை அமைப்பதற்கான இடத்தினை அடையாளப்படுத்தும் ஆரம்ப கட்ட நிகழ்வு நேற்றைய தினம் நகுலேஸ்வரம் பகுதியில் நடைபெற்றுள்ளது.

மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு சொந்தமான 160 ஏக்கர் காணியை அமைச்சரவைப் பத்திரம் மூலம் அரசு பெற்றுக் கொண்டது. இந்த அரசகாணியில் நலன்புரி நிலையங்களில் உள்ள காணிகள் அற்ற 350 குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு வீட்டுத் திட்டம் வழங்குவதற்கும் மீள்குடியேற்ற அமைச்சு நிதி ஒதுக்கியுள்ளது.

இந்த நிலையில் அப்பகுதியில் 100 குடும்பங்களுக்கு வீடு அமைப்பதற்கான தொழில்நுட்ப உதவிகள் அனைத்தையும் இராணுவத்தினர் மேற்கொள்வதற்கு முன்வந்துள்ளனர். குறித்த பகுதியில் சனசமூக நிலையம், பொலிஸ் நிலையம், விளையாட்டு மைதானம உட்பட பொதுவான சேவை நிலையங்கள் அமைக்கப்பட்டு இது ஒரு மாதிரிக் கிராமமாக உருவாக்கப்படவுள்ளது. மேற்படி பகுதிகளில் துப்புரவுப் பணிகளை நேற்றைய தினம் இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

குறித்த கிராமத்தில் 99 வீதமானவர்கள் மீனவ குடும்பங்களாக இருப்பதனால் அப்பகுதியில் அதாவது கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் கடல் வழிப்பாதை வழங்கப்பட்டு அங்கு இறங்குதுறை மற்றும் ஓய்வு மண்டபம் என்பன அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் அக்குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளாக மீன்பிடி படகுகள் மற்றும் வலைகள் வழங்குவதற்கு மீள்குடியேற்ற அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் நேற்றையதினம் குறித்த இறங்குதுறை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நிகழ்வு வடபிராந்திய கடற்படைத் தளபதியால் ஆரம்பிக்கப்பட்டதுடன், இராணுவத் தளபதி, நில அளவையாளர்கள், அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

வலி வடக்கில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தில் மிக முக்கியமாக இருக்கும் மயிலிட்டி துறைமுகத்தை விடுவிக்குமாறு பலராலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கும நிலையிலேயே அப்பகுதியை விடுவிக்காமல் குறித்த இறங்குதுறை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (செ-9)

# பொலிஸ் உயரதிகாரிகளுக்கு அவசரமாக இடமாற்றம்!

(கொழும்பு)

பொலிஸ் உயரதிகாரிகள் சிலருக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் 3 பேர், பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் இருந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நுவன் வேதிசிங்க சிலாபத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அதேவேளை, சிலாபத்தில் கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சந்தன அத்துகோரல கல்கிஸைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கல்கிஸையில் கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜனக குலதிலக அதிவேக நெடுஞ்சாலையின் போக்குவரத்து பிரிவுக்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

கொழும்பு தெற்கு பொலிஸ் அத்தியட்சகராக இருந்த நிஷாந்த சொய்ஸா கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் உதவி பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய ஆர்.எல்.ரன்தெனிய, கொழும்பு தெற்கு உதவி பொலிஸ் அத்தியட்சகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என அறியக்கிடைத்துள்ளது. (செ-12)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 31 . 07 . 1957



விண்ணில் 29 . 05 . 2016

அமரர் **பிரான்சிஸ் வின்செற் ரவீந்திரன்**

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக நாளை (28.06.2016) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் அன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

கைதடி தெற்கு,
கைதடி.

- குடும்பத்தினர்

(5055)



## நினைவஞ்சலி நிகழ்வு அழைப்பு



அமரர்

**மாணிக்கம் சுப்பிரமணியம்**

(சமூக புரவலர், வித்தியாதானக் கீர்த்தி)

**தலைவர் :**
உயர்திரு அ.பஞ்சலிங்கம்
(முன்னாள் அதிபர் யா/கொக்குவில் இந்துக்கல்லூரி
யாழ்.இந்துக் கல்லூரி)

**காலம் :**
28.06.2016 செவ்வாய்க்கிழமை
மாலை 3.00 மணி

**இடம் :**
சுப்பிரமணியம் மண்டபம்
(யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

அன்னாரின் நினைவேந்தல் நிகழ்விற்கு அஞ்சலி செலுத்த அனைவரையும் அழைக்கின்றோம்.

- நினைவஞ்சலி ஏற்பாட்டாளர்கள்

(சி-5031)



**வலம்புரி**
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## 31-ம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



அமரர்

**M.A பஞ்சநாதன் J.P**

(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி அதிகாரி)

மண்ணுலகில் 13.12.1942

ஸ்ரீ வைகுண்டத்தில் 28.05.2016

கண்ணீருக்கு தடை போட்டதுபோல
உம் நினைவுகளுக்கு தடை
போட முடியவில்லை
நினைவுகளை மட்டும் நிறையவே
தந்துவிட்டு நீர் எங்கு சென்றீரோ!

கடந்த 28.05.2016 சனிக்கிழமை ஸ்ரீ வைகுண்டப் பேறுபெற்ற எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு எல்லா வகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதிவரை இணைந்து நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (27.06.2016) திங்கட்கிழமை காலை 11.30 மணியளவில் நாவலர் வீதியில் அமைந்துள்ள T.C.T மண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

69B, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(5054)



## மரண அறிவித்தல்



**பொன்னையா நல்லம்மா**

கச்சாய் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா நல்லம்மா அவர்கள் நேற்று 26.06.2016 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை -நாகமுத்துவின் அன்பு மகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு தம்பதியினரின் அன்பு மருமகளும், பொன்னம்மா, திரவியநாயகம் (ஓய்வுபெற்ற அதிபர்-அல்லாரை அ.த.க வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம், வாரித்தம்பி, அருணாச்சலம், சின்னத்தம்பி, கனகம்மா ஆகியோரின் மைத்துனியும், மனோகரன் (ஜேர்மனி), மகாராணி (ஜேர்மனி), மகாநிதி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும், அருளானந்தம் (ஜேர்மனி), பரமேஸ்வரன் (ஜேர்மனி), திலகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும், கமலாதேவி (ஜேர்மனி), கமலேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான யோகராசா, யோகரத்தினம் மற்றும் கமலாசினி (அதிபர்-அல்லாரை அ.த.க வித்தியாலயம்), கமலரஞ்சிதம் (ஜேர்மனி), யோகேஸ்வரன்,கமலரதி (ஜேர்மனி), யோகேந்திரன் (ஜேர்மனி), யோககீதன் (ஜேர்மனி), கமலறூபி (ஜேர்மனி) ஆகியோரின் சிறிய தாயாரும், கந்தராசா, கருணைராசா, யோகநாதன், லோகநாதன், சோதிநாதன், ரவிக்குமார், லிங்கேஸ்வரி, விமலராணி ஆகியோரின் பாசமிகு மாமியும், ஆரணி, நாராணி, தாரணி, தர்சினி, தெய்வீகன், சாமினி, காலஞ்சென்ற சஞ்சயன், எழிலி, தேனுகா, அபிராம், சுகிர்தா, உமாகரன், மதுசன், ராகவி, ரக்ஷனன், சௌந்தர்யா, சுருதிகா, ரதீபன், சுதர்சனா, அபிராமி, தாமீரன், ரக்ஷனா, அனுசா, சாய்ராம், சகிராம், ஈழராம் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.06.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று திருவுடல் கச்சாய் தெற்கு எறியால்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

தகவல் :குடும்பத்தினர்.

(C-5033)

தொ.பே : 021 205 0705, 077 969 8947

# போதைப்பொருள் பாவனையை ஒழிக்க நாம் மனட்சாட்சிக்கு விரோதமில்லாமல் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

போதைப் பொருளிலிருந்து விடுதலைபெற்ற ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தில் எச்சரிக்கையைப்பார்க்கிலும் முன்மாதிரியே மேலானது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இதற்கான பொறுப்பை நிறைவேற்றுவதற்கு தமது மனச்சாட்சிக்கு ஏற்ப எல்லோரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நுவரெலியா புதிய நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற போதைப் பொருளிலிருந்து விடுதலைபெற்ற நாடு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஆறாவது கட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

போதைப்பொருளை ஒழித்துக்கட்டுவதற்காக முன்னெடுக்கப்படும் எல்லா நிகழ்ச்சித் திட்டங்களையும் எதிர்காலத்தில் முறையாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார். (இ-5)

## மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் இ.போ.சவில் பாரிய மோசடி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்காக சுங்கத்தீர்வையின்றி பேருந்து உதிரிப் பாகங்கள் இறக்குமதி செய்து அவற்றை தனியாருக்கு விற்பனை செய்து, கோடிக் கணக்கில் அரச நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளின்மூலம்தெரியவந்து ள்ளது.


இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்ட மா அதிபர், ஆலோசனை வழங்கியுள்ளார்.

2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்காக சுங்கத் தீர்வை இன்றி வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்து அவற்றை தனியாருக்கு விற்பனை செய்துள்ளதுடன், போக்குவரத்துச் சபை பேருந்துகளுக்காக கூடிய விலையில் உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய முன்னாள் இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைவர் உள்ளிட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளது. இந்தசம்பவத்துடன் தொடர் புடைய சந்தேக நபர்கள் விரைவில் கைது செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## அரசு - கூட்டமைப்பு ஏன் பேச வேண்டும்

### வாசுதேவ கேள்வி



(கொழும்பு)

இலங்கையின் ஒற்றையாட்சியை கைவிடுவது தொடர்பில் அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ள நிலையில் எதற்காக இருதரப்பினருக்கிடையே புதிதாக பேச்சுவார்த்தைகள் எனக் கேள்வியெழுப்பும் மகிந்த ஆதரவு எம்.பி. வாசுதேவ நாணயக்கார.

இந்தியாவை மீறி புலம்பெயர் அமைப்புக்களின் தேவையை நிறைவேற்ற கூட்டமைப்பு முயற்சிக்கிறது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவுடன் ரணில் விக்கிரமசிங்கவுடனும் இரகசியமான பேச்சுவார்த்தைகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நடத்தியது. இதற்காகவே இன்று அரசாங்கத்திற்கு சம்பந்தன் ஆதரவு வழங்கு கின்றார் என் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## அரசின் உறுதிமொழியில் நம்பிக்கையில்லை-விதுர



வற்வரி குறித்த அரசாங்கத்தின் உறுதி மொழியில் நம்பிக்கையில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறு மற்றும் மத்திய தர கைத்தொழிலாளர்களது வற்வரியை குறைப்பதாக அரசாங்கம் அளித்த வாக்குறுதி குறித்து எவ்வித நம்பிக்கையையும் வைக்க முடியாது.

இது மற்றுமொரு மக்களை ஏமாற்றும் வாக்குறுதியாகவே கருதப்பட வேண்டும்.

அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றும் தெளிவான திட்டங்களோ அல்லது செயன்முறையோ அரசாங்கத்திடம் கிடையாது.

கள்வர்களை பிடிப்பதாக அறிவித்த அரசாங்கம் இது வரையில் எந்தவொரு கள்வரையும் பிடிக்கவில்லை.

தனியார் வைத்தியசாலைகளுக்கான வரி குறைக்கப்படும் என கூறிய போதிலும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. நெல்லை 50 ரூபாவிற்கு கொள்வனவு செய்வதாக கூறிய அரசாங்கம் அந்த முயற்சியில் தோல்வி கண்டுள்ளது.

தேயிலை, இறப்பர்போன்ற துறைகளுக்கு மிகவும் துர்ப்பாக்கியமான ஓர் நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் தெளிவான திட்டமற்ற நிலையே இதற்கான காரணமாகும். இன்று ஜனாதிபதியின் வேடத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே ஏற்று நடிக்கின்றார் என விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார். (இ-5)

## துறைமுகங்களின் நட்டத்துக்கு மத்தியில் இரண்டு புதிய கப்பல்கள் கொள்வனவு

சர்வதேச சரக்கு போக்குவரத்து சந்தை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் சீனாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட இரண்டாவது கப்பலும் இலங்கைக்கு வரவுள்ளது.

எம்வி சிலோன் பிரின்சஸ் என்ற இந்தக் கப்பல் 7.5 மில்லியன் டொலர்களுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த வருடமும் சிலோன் ப்ரீஸ் என்ற கப்பல் கொள்வனவு செய்யப்பட்டது. இந்த இரண்டு கப்பல்களுக்கும் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் 35 மில்லியன் டொலர்களை செலுத்தியுள்ளது.

இவையாவும் பொதுமக்களின் வரிப்பணத்தில் செலுத்தப்பட்ட தொகை என்றும் இந்த கப்பல் கொள்வனவு உடன்படிக்கை என்பதால் தற்போதைய அரசாங்கத்துக்கு இந்த உடன்படிக்கையை இரத்துச்செய்ய முடியவில்லை.

அம்பாந்தோட்டை துறைமுகம் பாரிய நட்டத்தை எதிர்கொண்டுள்ள நிலையில் கொழும்பு துறைமுகமும் நிதியோட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் புதிய கப்பல்களின் கொள்வனவு பாரிய பிரச்சினையை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## ஜனாதிபதி மைத்திரி தலைமையில் மது ஒழிப்பு விழிப்புணர்வுக்கூட்டம்



(கொழும்பு)

நாட்டு மக்களின் எதிர்கால நலன் கருதி ஜனாதிபதி ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி செயலகத்தின் அதிகாரிகளின் ஏற்பாட்டில் மதுவுக்கு முற்றுப்புள்ளி என்ற அடிப்படையில் நாடளாவிய ரீதியில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் மது ஒழிப்பு தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் கூட்டமொன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் பழனி திகாம்பரம், நுவரெலியா மாவட்ட மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள், பொலிஸ் நிலைய உயர் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மது ஒழிப்பு தொடர்பாக கலை, கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது. (இ-5)

## ஆளுநர் குறித்து அவதானம்

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

மத்திய வங்கி ஆளுநர் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளால், அவரை மீண்டும் நியமிக்காது இருக்க அவதானம் செலுத்தியுள்ளதாக, அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதிலிருந்து நல்லாட்சி அரசாங்கத்தின் வேறுபாடு தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

## அமைச்சர் விஜயதாச பதவி விலக தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பில் கடுமையாக வெறுப்படைந்துள்ள நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்ய போவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது.

இன்னும் சிறிது காலம் பொறுமையாக இருந்து விட்டு, தீர்மானம் ஒன்றை எடுக்க உள்ளதாக அமைச்சர் தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



விஜயதாச ராஜபக்ஷ அமைச்சர் பதவியில் இருந்து விலகினால், அது அரசாங்கத்தின் இருப்புக்கு நன்மையளிக்காது என அமைச்சர்கள் சிலர் அரசாங்கத்தின் உயர் மட்ட தரப்பினருக்கு விளக்கியுள்ளதாக தெரிய வருகிறது. (இ-5)

## தற்போதைய அரசாங்கத்திற்கு நிதி எதுவுமே கிடைக்கவில்லை

### அமைச்சர் நிமால் தெரிவிப்பு

புதிய அரசாங்கம் தற்போது மேற்கொண்டு வரும் எந்த திட்டமாக இருந்தாலும் அதற்கான அனைத்து பணமும் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் கிடைத்தவை என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு நிதி எதுவும் கிடைக்கவில்லை எனவும் அனைத்து நிதியும் கடந்த அரசாங்கத்திற்கு கிடைத்தவை எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் ஆரம்பித்துள்ள திட்டங்கள் கடந்த அரசாங்கத்தின் மட்டத்திற்கு வராது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# வலம்புரியின் செய்திக்கு

# வ.மா.சபை அவைத் தலைவர் விளக்கம்

வலம்புரி பத்திரிகையில் 24.05.2016 மற்றும் 25.05.2016 ஆகிய திகதிகளில் வெளியான செய்திகள் தொடர்பில் வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அவர்களினால் அனுப்பி வைக்கப்பட்ட விளக்கக் கடிதம் இங்கு அப்படியே பிரசுரிக்கப்படுகிறது.

பிரதம ஆசிரியர்,
வலம்புரி,
யாழ்ப்பாணம்.

*அன்புடையீர்,*

தங்களது வலம்புரி நாளிதழில் 24.05.2016 மற்றும் 25.05.2016 ஆம் திகதிகளில் வடக்கு மாகாணசபை சம்பந்தமாக பின்வரும் தலைப்புக்களில் வெளிவந்த செய்திகள் தொடர்பாக வடக்கு மாகாணசபையின் 26.05.2016 ஆம் திகதிய அமர்வில் கருத்துப் பரிமாறப்பட்டது.

01) 24.05.2016: **"அதிகாரவரம்பை மீறி ஆளுநர் செயற்படுகிறார் - அவர் தலைமையிலான கூட்டங்களை வடக்கு உறுப்பினர்கள் புறக்கணிக்க முடிவு"** இவ்வாறான புறக்கணிப்பு எதையும் மாகாண சபை உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாக எடுக்கவில்லை.

02) 25.05.2016 **"விலகினார் ஆளுநர் நடத்தினார் சுமந்திரன்"** சம்பந்தப்பட்ட 24.05.2016 ஆம் திகதிய கூட்டம் யாழ்ப்பாணம் நகர அபிவிருத்தி தொடர்பானது என்பதால் வடக்கு மாகாணசபையின் யாழ் மாவட்ட உறுப்பினர்களே அழைக்கப்பட்டனர். இவர்கள் 16 பேரில் 8 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இப்படியிருக்க 38 உறுப்பினர்களில் 7பேர் மட்டுமே கலந்து கொண்டிருந்த நிலையில் ஏனைய 31 உறுப்பினர்களும் கூட்டத்தினை புறக்கணித்துள்ளனர் என்பது உண்மை நிலைக்கு மாறானது.

24.05.2016 ஆம் திகதிய செய்தியின்படி அமைச்சர்களும், உறுப்பினர்களும் புறக்கணிப்பு முடிவொன்றை எடுத்திருந்தால் 7 பேர் கலந்து கொண்டிருக்க முடியாது.

மேலும், அந்தக் கூட்டத்தலைமையிலிருந்து ஆளுநர் விலகவுமில்லை. சுமந்திரன் தலைமை தாங்கவுமில்லை. கூட்டத்தில் ஆளுநருக்கு இடது புறமாக நானும் எனக்கு இடது புறமாக சுமந்திரனும் அமர்ந்திருந்தோம். ஆளுநரே முழுமையான கூட்டத்துக்கு தலைமை தாங்கினார்.

மேலே குறிப்பிட்ட கருத்துப் பரிமாற்றலின் பின்பு நடைமுறை விதிகளின்படி இந்தவிடயம் சபை நடவடிக்கை குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டு அதன் கருத்துக்கள் 14.05.2016 ஆம் திகதிய அமர்வில் அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் மேற்படி விடயங்களைச் சுட்டிக்காட்டி பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

(அ) இந்த இரண்டு செய்திகளும் தவறான தகவல்களின் அடிப்படையில் அமைந்துள்ளன.

(ஆ) இவை மாகாணசபை உறுப்பினர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியில் உறுப்பினர்கள் பற்றியும் தவறான புரிதலை ஏற்ப டுத்துவதாக அமைந்தன.

(இ) முக்கியமான செய்திகளை செய்திகளாகவும் அவற்றின் உண்மைத்தன்மையினை ஆராய்ந்து உறுதி செய்து கொண்டு வெளியிடுவது முரண்பாடுகள் தவிர்க்கவும் பரஸ்பர நல்லெண்ணத்தை பேணவும் உதவும்.

(ஈ) இவை பற்றி பத்திரிகை ஆசிரியருக்கு எழுதுவது எனவும் எமது இந்தக் கருத்தை முழுமையாக பிரசுரிக்குமாறு கோருவது.

இந்த நாட்டிலுள்ள மாகாணச்சபைகள் நாட்டின் இரண்டாம் நிலை சட்ட வாக்க அமைப்பு என்பதனையும் அவற்றுக்கு குறிப்பிட்ட சிறப்புரிமைகள் உண்டென்பதையும் கருத்திற் கொண்டு செய்திகள் வெளியிடப்படுவதை உறுதிப்படுத்துமாறு தங்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி

சீ.வீ.கே சிவஞானம்.
அவைத்தலைவர்,
வடக் மாகாணசபை.

# கடமை நிறைவேற்று அதிபர்களை நிரந்தரமாக்க பிரதமர் தலைமையில் விசேட குழு

(கொழும்பு)

இலங்கை பூராகவும் உள்ள கடமை நிறைவேற்று அதிபர்களை நிரந்தரமாக்குவது தொடர்பில் ஆராய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விசேட குழு ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அமைக்கப்பட்டுள்ளது.

வழமையில் கடமை நிறைவேற்று அதிபர்கள் நிரந்தரமாக்கப்பட்டு வரும் ஒழுங்கு முறை புதிய அதிபர் பிரமாணக் குறிப்பினால் தடைப்பட்டு போயிருந்தது.

இந்நிலையில் கடமை நிறைவேற்று அதிபர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற கோரிக்கை பாராளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் எழுப்பப்பட்டதை அடுத்து கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் தலைமையிலான விசேட குழுவை ஜனாதிபதி அமைத்தார்.

இக்குழுவில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் உள்ளிட்ட அமைச்சர் இடம் பெற்றுள்ளனர். (செ)

# பயணச்சீட்டின்றி தனியார் பேருந்தில் பயணிப்போருக்கு அபராதம் விதிக்கப்படும்

(கொழும்பு)

பயணச்சீட்டின்றி தனியார் பஸ்களில் பயணிக்கும் பயணிகளிடம் தண்டப்பணம் அறவிடுவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சரின் ஆலோசனைக்கமைய இதனை நடைமுறைப்படுத்தவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் எம்.பீ.ஏ. ஹேமச்சந்திர குறிப்பிட்டார்.

தற்போது தனியார் பஸ்களில் பயணச்சீட்டுக்களை வழங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ள போதிலும் சில பஸ்களில் இது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

இந்நிலையில் இப்புதிய வேலைத்திட்டத்திற்கமைய. பயணச்சீட்டுக்களை வழங்குமாறு பயணிகளால் நடத்துநருக்கு அழுத்தம் விடுக்கப்படுவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் கூறினார்.

புதிய சட்டத்திற்கமைய பயணச்சீட்டின்றி பயணிக்கும் பயணியொருவர் பஸ் கட்டணத்தைப் போன்று இரு மடங்கு பணத்தை செலுத்த வேண்டும் என்பதுடன் 2ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு மேலதிகமாக குறித்த பஸ் நடத்துநரின் அனுமதிப்பத்திரமும் மூன்று மாதங்களுக்கு இடைநிறுத்தப்படும் என தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் கூறினார்.

இந்த சட்டத்தை உள்ளடக்கி விரைவில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சட்டத்தில் புதிய சீர்த்திருத்தங்களைக் கொண்டுவரவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (செ-12)

# மொடல் அழகியை அரவணைத்த தோனி





பாகிஸ்தான் மொடல் நடிகை மத்ரா மொகமது இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் தோனியை பற்றி மனம் திறந்து பேசியுள்ளார்.

முன்னதாக பாகிஸ்தான் மொடல் குவாண்டில் பலூச், இந்திய கிரிக்கெட் வீரர் விராட் ஹோலியை காதலிப்பதாக வீடியோ ஒன்றை வெளியிட்டார். அனுஷ்கா சர்மாவை விட்டு விடுமாறும் அவர் அழுது வெளியிட்ட வீடியோ இணையத்தில் வைரல் ஆகியிருந்தது.

இந்த நிலையில் பாகிஸ்தான் மொடல் நடிகை மத்ரா மொகமது இந்திய அணித்தலைவர் தோனி காட்டிய அன்பால் கிளின் போல்ட் ஆகிவிட்டதாக தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில், இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்த போது இரு அணி வீரர்களும் தங்கி இருந்த ஹோட்டலில் நான் இரவு உணவு அருந்தச் சென்றேன்.

அப்போது சாப்பிட்டுக் கொண்டிருந்த பாகிஸ்தான் வீரர்களிடம் ஆட்டோகிராஃப் வாங்க சென்றேன். ஆனால் அவர்கள் எனக்கு ஆட்டோகிராப்ஃப் போட மறுத்துவிட்டனர்.

நான் மீண்டும் மீண்டும் கேட்டதால் அவர்கள் என்னை கடுமையாக திட்டி அனுப்பி விட்டனர். இதனால் நான் மன வேதனையடைந்தேன். இதை எல்லாம் இந்திய அணித் தலைவர் தோனி பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது என்னை அழைத்த தோனி, ஆறுதல் கூறிவிட்டு எனது தொப்பியில் ஆட்டோகிராஃப்போட்டுக் கொடுத்தார். பிறகு என்னை அருகில் அமர வைத்து சிறிது நேரம் உரையாடினார் என்று நினைவு கூர்ந்தார். (87)

# ரொனால்டோவின் ஆக்ரோஷ ஆட்டம்; போர்த்துக்கல் வெற்றியை உற்சாகமாக கொண்டாடிய கிறிஸ் கெய்ல்

ஐரோப்பிய கால்பந்து தொடரில் நேற்று நடந்த குரோஷியா அணிக்கு எதிராக போர்த்துக்கல் பெற்ற வெற்றியை மேற்கிந்திய தீவுகள் அணியின் கிரிக்கெட் வீரர் கிறிஸ் கெய்ல் உற்சாகமாக கொண்டாடியுள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி ஆட்டக்காரரான கிறிஸ் கெய்ல், போர்த்துக்கல் அணியின் தலைவரும், ரியல் மாட்டிரிட் கிளப் அணியின் நட்சத்திர ஆட்டக்காரருமான கிறிஸ்டியானோ ரொனால்டோவின் தீவிர ரசிகர்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற போட்டியை தனது வீட்டில் போர்த்துக்கல் ரசிகர்களுடன் கண்டுகளித்தார்.

அப்போது ஒவ்வொரு முறையும் ரொனால்டோ பந்தை எதிரணி கோல் கம்பத்தை நோக்கி கொண்டு செல்லும் போதெல்லாம், போர்த்துக்கல்! கிறிஸ்டியானோ ரொனால்டோ! என கத்தி சந்தோஷத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

போர்த்துக்கல் அணி வெற்றி பெற்ற பின் போர்த்துக்கல்!.. போர்த்துக்கல்!.. ரொனால்டோ!!! என்று சத்தம் போட்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இந்த வீடியோவை தனது பேஸ்புக் இணைய தளத்தில் வெளியிட்டுள்ளார். இது தற்போது வைரலாக மாறி வருகிறது. (87)



# காணிகளை ஆர்வத்துடன் பார்த்த வலி. வடக்கு மக்கள்



வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளில் தமது இருப்பிடங்களை பார்வையிடுவதற்காகவும் தமது காணிகளை அடையாளப்படுத்துவதற்காகவும் பொதுமக்கள் நேற்றைய தினம் ஆவலுடன் சென்றிருந்தனர். வலி. வடக்கு பகுதியில் நேற்று முன்தினம் 201.3 ஏக்கர் காணி பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டதுடன். காங்கேசன்துறை புகையிரத நிலையமும் விடுவிக்கப்பட்டது. விடுவிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதற்காக நேற்றைய தினம் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அந்தவகையில் கட்டுவன் ஜே/ 238 கிராமசேவகர் பிரிவு மற்றும் குரும்பசிட்டி ஜே/242 கிராமசேவகர் பிரிவு உட்பட்ட 126 ஏக்கரும். வறுத்தளைவிளான் ஜே/241 கிராமசேவகர் பிரிவில் 12 ஏக்கரும். காங்கேசன்துறை ஜே/234 கிராமசேவகர் பிரிவில் 63.3 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

## உலக பல்கலைக்கழக தரப்படுத்தல்

உலக பல்கலைக்கழக தரப்படுத்தலில் கொழும்பு, பேராதெனிய. மொறட்டுவ இலங்கையில் முன்னிலை வகிக்கிறது. உயர் கல்வி அமைச்சு வெளியிட்ட தகவலின் படியின் வருமாறு அமைகிறது. கொழும்பு பல்கலைக்கழ கம்- 2146. பேராதெனிய பல்கலைக்கழகம்- 2479. மொறட்டுவ பல்கலைக்கழகம்- 2497. ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்- 3091. களனி பல்கலைக்கழகம்- 3194. றுகுணு பல்கலைக் கழகம்- 3483. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- 7225. ரஜரட்ட பல்கலைக்கழகம்- 8995. சப்ரகமுவ பல்கலைக்கழகம்- 10799. கிழக்கு பல்கலைக்கழகம்- 11154 . வயம்ப பல்கலைக்கழகம்- 11793. ஊவா வெலச பல்கலைக்கழகம்- 14725. தென்கிழக்கு பல்கலைக்கழகம்- 8324. (இ)

## தபால் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த எச்சரிக்கை

தமது தொழில் தொடர்பான பிரச்சினைகளுக்கு வாக்குறுதி அளித்ததன் படி தீர்வுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரியவில்லையென தபால் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து தெரிவிக்கின்றன.

குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்காக அதிகாரிகள் பெற்றுக்கொண்ட கால அவகாசம் எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாக குறித்த தொழிற்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளரான சின்தக பண்டார தெரிவித்தார்.

இதேவேளை குறித்த பிரச்சினைகள் தொடர்பில் எதிர்வரும் வியாழக்கிழமை மீண்டும் கலந்துரையாடலை மேற்கொள்ள உள்ளதாகவும் அதற்கான தீர்வுகள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் ஜூலை மாதம் 4 ஆம் திகதியில் இருந்து வேலை நிறுத்தப்போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## நாரம்மலயில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதி

குருநாகல், நாரம்மல பிரதேசத்தில் நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் காயமடைந்த ஒருவர் ஆபத்தான நிலையில் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக நாரம்மல பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பிரதேசத்தில் மரண வீடு ஒன்றுக்கு வந்த சிலர் அங்கு சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த சூதாட்டத்தில் மனித கொலைச் சம்பவம் ஒன்றுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர் ஒருவர் கலந்து கொண்டிருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றது.

பொலிஸார் குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்து சந்தேக நபரைக் கைது செய்ய முற்பட்ட போது சந்தேக நபர் தப்பியோட முயற்சித்ததுடன். கான்ஸ்டபிள் ஒருவரிடமிருந்து கைத்துப்பாக்கியை பறித்த போது அத் துப்பாக்கி எதிர்பாராத வகையில் வெடித்துள்ளது.

சந்தேக நபர் பலத்த காயங்களுக்குள்ளாகியதையடுத்து அவர் உடனடியாக குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## 750 மில்லியன் ரூபா செலவில் புத்தளத்தில் விமான நிலையம்

புத்தளம் பாலாவியில். புதிய உள்நாட்டு விமான நிலையம் ஒன்றை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த விமான நிலையக் கட்டுமானப் பணிகளுக்கு 750 மில்லியன் ரூபா செலவிடப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய விமான நிலைய கட்டுமானப் பணிகளுக்காக 26 ஹெக்டேயர் நிலம் சுவீகரிக்கப்படவுள்ளது.

உள்நாட்டு விமான நிலையங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இந்த புதிய விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது.

முன்னதாக மட்டக்களப்பில் உள்ள உள்நாட்டு விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் புத்தளம். பாலாவியில் சிறியதொரு ஓடுபாதையுடன் கூடிய விமான தளம் அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பகுதியில் இலங்கை விமானப்படை தற்போது தளமிட்டுள்ளது.

அந்த ஓடுபாதையைப் புனரமைத்தே புதிய விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது. (இ-5)

அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
நீங்கள் அறிந்த
- செய்திகள்
- புகைப்படங்கள்
- நிகழ்வுகள்
- பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.
VIBER செயலி இல
076 636 3378
Viber

## ஆயுதக்களஞ்சிய வெடிப்பால் ஏற்பட்ட கழிவுகளை அகற்ற 22லட்சம் தேவை

(கொழும்பு)

அவிசாவளை கொஸ்கம. சாலாவ இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியசாலை வெடிப்பினால் பிரதேசத்தில் ஏற்பட்ட கழிவுகளை அகற்றும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வேலைத் திட்டம் மேல் மாகாண நிர்வாக திணைக்களத்திற்கு இராணுவம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாகாண மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி இத்திட்டத்திற்காக 22 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும்.பெக்கோ மற்றும் டிப்பர் வாகனங்களை பயன்படுத்தி நாளொன்றுக்கு 50 தொன் கழிவுகள் அகற்றப்படவுள்ளதாக மாகாண மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-5)

## இராசி பலன்

27.06.2016
(ஆனி 13, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
சப்தமி முற்பகல் 11.12 மணிவரை
பூரட்டாதி காலை 7.08 மணிவரை
உத்தரட்டாதி பின்னிரவு 5.43 மணிவரை
சுபநேரம் 11.55-1.25 மணிவரை
இராகுகாலம் 7.25-8.55 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | சூரி புத சுக் |
| கேது | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் பூரம் | | குரு ராகு |
| | சனி | செவ் | |

**மீனம்** திட்ட மிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றமொன்று ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, புதியவர்களின் நட்பு இடம் பெறலாம், கோபத்தைக் குறைப்பது நல்லது.

**மேடம்** மன அமைதி கூடும் நாள், தேகாரோக்கியத் தில் கவனம் தேவை, வழக்கத் தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும்.

**இடபம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், வாகன சுகமுண்டு, பணப் புளக்கம் அதிகரிக்கும் நாள், செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

**கும்பம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவுவேறலாம், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், பொது வாழ்வில் மரியாதை கூடும், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** கோவத்தை குறைத்துக் கொள்வது நல்லது, நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,திடீர் பயணங்கள் கைகூடும்.

**மகரம்** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், இளைய சகோதர வழியில் இனிய செய்தி ஒன்று வந்து சேரலாம்.

**சிம்மம்** வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், நட்பொன்று பகையாகலாம், வழிபாட்டால் மகத்தவம் காண வேண்டியநாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**தனுசு** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**விருச்சிகம்** தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்த சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**துலாம்** தலைமைப் பதவிகள் உங்களைத்தேடி வரலாம், நன்மைகள் நடைபெறும் நாள், விருந்தினர் வருகையுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.

**கன்னி** செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், திருமண முயற்சிகள் கைகூடும் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

# சித்திரவதைக்கு முற்றுப்புள்ளி வலியுறுத்தி யாழில் பேரணி

## 30 ஆம் திகதி இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

**சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக் கும் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக எதிர்வரும் 30 ஆம் திகதி சித்திரவதைக்கு முற்றுப்புள்ளி எனும் தொனிப் பொருளில் யாழில் பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சர்வதேச ரீதியாக நினைவு கூறப்படும் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் தினம் ஒவ்வொருவருடமும்ஜூன்மாதம் 26 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனை அனுஷ்டிக்கு முகமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நாடளாவிய ரீதியில் பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.

அந்த வகையில் இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயம் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9.00-நண்பகல்12.00 வரை பேரணி நிகழ்வு ஒன்றினை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இலங்கைமனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தில் இருந்து ஆரம்பமாகும் சித்திரவதைக்கு முற்றுப்புள்ளி எனும் கருப் பொருளை வலியுறுத்தும் நோக்கிலான இப்பேரணி, யாழ். பொலிஸ் நிலைய வழியினூடாக வைத்தியசாலை வீதியை அடைந்து பின்.கே.கே. எஸ். வீதியினூடாக சென்று யாழ்ப்பாணம் பொது நூலக முன்றலில் நிறைவுபெறவுள்ளது. பேரணியின் முடிவில் சித்திரவதைக்கு முற்றுப்புள்ளிஎனும் தொனிப் பொருளில் சில நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

எனவே பேரணி ஆரம்பிக்கும் இடமான இல-01, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக் குழு அலுவலகத்திற்கு காலை 08.45 மணிக்கு தாங்களும், தங்களது நிறுவன பிரதிநிதிகள் சகிதம் வருகை தந்து இந் நிகழ்வு சிறப்புற நடைபெற தங்களது ஒத்துழைப்பை நல்குமாறும் சித்திரவதையற்ற சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப ஒன்றிணையுமாறும்அவர்மேலும் அறிவித்துள்ளார். (இ)




## உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிறப்புரிமை அட்டை வழங்கும் நிகழ்வு

உள்நாட்டுஇறைவரித்திணைக் களத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தினால் சிறந்த வரி செலுத்துநர்களுக்கான சிறப்புரிமை அட்டைவழங்கும் நிகழ்வு நாளை 28 ஆம் திகதி பி.ப 2.00 மணியளவில் நடத்துவதற்குதிட்டமிடப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலாளர் என். வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வதுடன், எமது வரி நிர்வாகத்திற்குட்பட்ட பிராந்தியத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 37 சிறந்த வரி செலுத்துநர்கள் சிறப்புரிமைச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர் என உள் நாட்டு இறைவரித்திணைக்கள யாழ். பிராந்திய உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ)


## யாழ்ப்பாணம்—காங்கேசன்துறை
## பயணிகள் சிற்றூர்தி சேவை 26வருடங்களின் பின் ஆரம்பம்

யாழ்ப்பாணம் தொடக்கம் காங்கேசன்துறை வரையிலான (இலக்கம் 769) பயணிகள் சிற்றூர்தி சேவை கடந்த 26 வருடங்களின் பின்னர் நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.வலி.வடக்கு பகுதியில் கடந்த 26 வருடங்களின் பின்னர் பகுதிபகுதியாக தனியார் காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் 201.3 ஏக்கர் காணி பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் காங்கேசன்துறை புகையிரத நிலையமும் விடுவிக்கப்பட்டது.

அந்த வகையில் காங்கேசன்துறை வரையிலான தனியார் சேவையும் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

தெல்லிப்பழை , மாவிட்டபுரத்தில் இருந்து இதுவரை காலமும் தமது சேவைகளை வழங்கி வந்ததுடன் தற்போது காங்கேசன்துறை புகையிரத நிலையத்துக்கு பின்புறமாக உள்ள பகுதியில் இருந்து முழுநேர சேவையை தாம் ஆரம்பித்துள்ளதாக தனியார் சிற்றூர்தி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.




இது வரை காலமும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தமது சேவைகளை வழங்கி வந்ததாகவும் இனி தொடர்ச்சியாக பயணிகள் சேவையை மேற்கொள்வோம் என மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். (இ-9)

## வடமராட்சி பகுதி மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

வெளிமாவட்டத்தில் இருந்து அத்துமீறி வடமராட்சி கடற்பரப்பில் கடலட்டை தொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர்களினால் வடமராட்சி கடல் பகுதியில் கரைவலை மற்றும்ஏனைய வலைகள்மூலம் தொழிலில் ஈடுபட்டுவந்த தொழிலாளர்களின் வலைகள் அத்துமீறி தொழிலில் ஈடுபடுகின்ற வெளி மாவட்ட மீனவர்களின் செயற்பாட்டால் சேதமாக்கப்பட்டு வந்தன. மிக நீண்ட காலங்களாக நிலவி வந்த இந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இணைந்து மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் வடமராட்சி மீனவர் சங்க. சமாச மற்றும் சம்மேளன பிரதிநிதிகளையும் வெளி மாவட்ட மீனவப் பிரதிநிதிகளையும் இணைத்து இந்த கலந்துரையாடல்இடம பெற்றது.


மேற்படி கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மீனவ சங்க பிரதிநிதிகள் தங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தெளிவாக எடுத்து விளக்கினர். இந்த பாதிப்புக்களை வெளி மாவட்ட மீனவர்களும் ஏற்றுக்கொண்டனர். இங்கு கருத்து தெரிவித்த அங்கஜன் இராமநாதன். வெளிமாவட்டத்தில் இருந்து வருகை தந்து கடலட்டை தொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்கள் மீன்பிடி அமைச்சினால் வழங்கப்பட்டவாறு ஐந்து கடல் மைல் தொலைவிற்கு அப்பாலும் அதே வேளை இரவு வேளைகளில் இந்த தொழிலினை மேற்கொள்ள முடியாது என்ற இணக்கப்பாட்டுடன் இப்பிரச்சினைக்கு வடமராட்சி மீனவர்களின் பிரச்சினைக்கு பாதிப்பு இல்லாத வகையில் சுமுகமான ஒரு தீர்வு எட்டப்பட்டதாகவும் எதிர்காலத்தில் இப்படியான பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு கண்டு வடமராட்சி மீனவர்கள் இந்த கடலட்டை பிடிக்கும்தொழிலை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளினை தான் விரைந்து மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார். (இ-5)

## பொன்னம்பலம் வீதியை புனரமைப்பு செய்யுங்கள்

(அராலி)

சாவகச்சேரி வடக்கு பிரதேசத்திற்கு உட்பட்ட மற வன் புலோ பொன்னம்பலம் வீதி சுமார் எண்பது ஆண்டுகளுக்கு மேலாக திருத்தப்படாமல் காணப்படுகின்றது. இக் கிராமத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இக்கிரா மத்தில உள்ள சிறு வீதிகள் எவையும் பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

குறிப்பாக இவ் வீதியின் ஊடாக. நோயாளர்களை வைத்தய சாலைக்கு கொண்டு செல்ல முடியாமலும் மிக வும் கஷ்டப்படுவதாக அப்பகுதி சமூக அமைப்பினரால்தெருவிக் கப்படுகின்றது. மழைகாலங் களில் வெள்ள நீர் மூன்று அடி அளவில் தேங்கி நிற்பதால போக்குவர த்து செய்யும்மக்கள் பல சிரமங்களை எதிர் கொள்கின்றனர் 2010 ஆம்ஆண்டு இவ் வீதி திருத்தப்படுவதாக தெரிவித் திருந்தும் இன்னமும் திருத்தப்படாது இருப்பது மக்களை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளது. இவ்வீதி புனரமைப்பு தொடர்பாக அங்குள்ள பொது அமைப்பினர் கூறு கையில். கடந்த ஐந்து ஆண்டுகளாக பல அமைப்புக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளோம். எனினும் இன்னமும் புனரமைப்ப தற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்படவில்லை. எனவே இப் பிரதேச மக்க ளின்அவல நிலையினைக் கருத்தில் கொண்டு விரை வாக மறவன்புலோ பொன்னம்பலம் வீதியினை புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரி களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்என்றனர். (இ-91)








யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமைக்கப்படவுள்ள வடமராட்சி கிழக்கு உடுத்துறை பாரதி சனசமூக நிலையத் திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் மற்றும் பருத் தித்துறை பிரதேச சபைச் செயலாளர் ஸ்ரீ பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்து சிறப்பித்தனர்.

# ஜப்பான் விமான நிலையத்தில் மகிந்தவுக்கு உடற்சோதனை



ஜப்பானுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு, நரிடா (Narita) விமான நிலையத்தில் உடல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பத்து நாள் பயணமாக ஜப்பான் சென்றிருந்த மகிந்தராஜபக்ஷ, கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு திரும்பினார்.

கொழும்பு திரும்புவதற்காக டோக்கியோவின் நரிடா விமான நிலையத்துக்குச் சென்ற மகிந்த ராஜபக்ஷவை, இரண்டாவது முனையத்தில் இருந்த பாதுகாப்பு அதிகாரி குண்டுகள் மற்றும் உலோகப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் கருவியைக் கொண்டு உடல் பரிசோதனையை மேற்கொண்டார்.

முன்னர், இலங்கை பிரதமராக இருந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்க மத நிகழ்வு ஒன்றில் பங்கேற்பதற்கு ஜப்பான் சென்றிருந்த போதும் விமான நிலையத்தில் தடுக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மகிந்த ராஜபக்ச ஜப்பானுக்கான தனிப்பட்ட பயணத்தை மேற்கொள்ளும் போது, இராஜதந்திர நெறிமுறை உதவிகளை வெளிவிவகார அமைச்சிடம் கோரியிருந்தார். எனினும், இலங்கை வெளிவிவகார அமைச்சு அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்ட நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலேயே அவர் இந்தப் பயணத்தை மேற் கொண்டிருந்தார். (இ-5)

# உக்ரேனுடன் குற்றவாளிகளை பரிமாற்றம் செய்ய உடன்பாடு

## உதயங்க கைதாக வாய்ப்பு; மகிந்தவுக்கு மேலும் சிக்கல்

(கொழும்பு)

**இலங்கையில் தேடப்படும்- உக்ரேனில் மறைந்திருக்கும் குற்றவாளிகளை கொழும்பிடம் கையளிப்பதற்கு வசதி செய்யும் உடன்பாடு ஒன்று இலங்கைக்கும் உக்ரேனுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டுள்ளது. உக்ரேனுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, நேற்றுமுன்தினம் கீவ்வில், உக்ரேன் வெளிவிவகார அமைச்சர் பாவ்லோ லிம்கின்னைச் சந்தித்து நடத்திய பேச்சுக்களின் போதே இதற்கான உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.**



இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுக்களின் முடிவில், குற்றவியல் விவகாரங்கள் தொடர்பாக பரஸ்பரம் சட்ட உதவிகளைப் பரிமாறிக் கொள்வதற்கும், தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளைப் பரிமாறிக் கொள்வதற்கும் இணங்கும் உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையில் தேடப்படும்குற்றவாளிகள்- உக்ரேனில் மறைந்திருந்தால் அவர்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு அரசாங்கம்கோர முடியும்.

பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள, ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவரும், மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனருமான உதயங்க வீரதுங்க தற்போது உக்ரேனில் மறைந்து வாழ்வதாக கூறப்படும் நிலையில் அவரை இலங்கைக்கு கொண்டு வரும் நோக்கிலேயே இந்த உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (இ-5)

## இலங்கை இராணுவத் தளபதியின் பதவிக்காலத்தை நீடிக்க தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன் கேணல் கிருசாந்த டி சில்வாவின் பதவிக்காலத்தை மேலும் நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே கிருசாந்த டி சில்வா முதலாவது சேவை நீடிப்பு அடிப்படையில் கடமையாற்றி வருகின்றார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் அவரது சேவை நீடிப்புக்காலம் பூர்த்தியாகவுள்ளது.

மேலும் ஆறு மாத காலத்திற்கு சேவை நீடிப்பு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சேவைவ் நீடிப்பு வழங்கப் படாவிட்டால் கடமையாற்றி வரும் மூன்று மேஜர் ஜெனரல்களில் ஒருவருக்கு சேவை மூப்பு அடிப்படையில் இராணுவத் தளபதி பதவி வழங்கப் படவுள்ளது.

சேவை மூப்பு அடிப்படையில் மிகவும் அதிகளவு சேவை மூப்புக் கொண்டவராக மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ்காணப்படுகின்றார். அடுத்தபடியாக மேஜர் ஜெனரல்களான சுமேத பெரேரா மற்றும் சன்ன குணவர்தன ஆகியோர் காணப்படுகின்றனர். மேஜர் ஜெனரல் சன்ன குணவர்தனவிற்கு இராணுவத் தளபதி பதவியை வழங்குமாறு ஆளும் கட்சியின் சிலர் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா:25செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L/அரசதொழில்<br>தொ.இ: B/5996 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 47செவ் 1 இல்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/5649 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 74<br>உயரம்: 176cm<br>தகைமை/தொழில்:MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/5998 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 10<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/5650 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 65செவ் 4 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: 8 ஆம் தரம்/ சொந்தத்தொழில்<br>தொ.இ: B/6000 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 49 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்:AAT<br>தொ.இ: G/5655 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 24 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B.COM/ வங்கியாளர்<br>தொ.இ: B/851 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம் கேட்டை<br>கி.பா: 22<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L/ சொந்தத்தொழில்<br>தொ.இ: G/5662 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005,021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு வருபவர்களிடம் அவதானமாக இருங்கள்

## முள்ளியவளை பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்து

அறிமுகமற்ற நபர்களை வீடுகளுக்குள் அழைத்துச் செல்வது தொடர்பில் பொது மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென முள்ளியவளை பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில், தற்போது உள்ளூர் பிரதேசங்களில் மாங்காய், பலாப்பழங்கள், தேங்காய் போன்ற பல்வேறு பொருட்களை கொள்வனவு செய்து கொண்டு செல்வதற்காக வெளிமாவட்டங்களில் இருந்து தமது சிறிய ரக வாகனங்கள் சகிதம் ஏராளமானவர்கள் வருகை தருகின்றனர்.

அவ்வாறு வருகை தருவோரை தமது தோட்டக் காணிகளுக்குள் மட்டுமல்லாது வீடு வரையும் சிலர் தாராளமாக அனுமதிக்கின்றனர். இதனை சாதகமாகப் பயன்படுத்தும் சில விசமிகள் வீட்டின் நிலைமைகள் தொடர்பில் அவதானித்து விட்டு, தமது கொள்வனவு தேவைகளை நிறைவு செய்து கொண்டு சென்று விடுகின்றனர்.

அதன்பின்னர் தாம் அவதானித்தவற்றை வைத்து திருட்டு வேலைகளில் ஈடுபடுகின்றனர். எனவே பொதுமக்கள் பொருட்களை கொள்வனவு செய்ய வருவோர் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (2-310)




# தனியார் பேருந்துகள் இன்று முதல் வட மாகாணத்தில் பணிப்பகிஷ்கரிப்பு

## முன்திட்டமிடலுடன் செயற்படுமாறு பயணிகளுக்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

பயணிகளின் பாதுகாப்பான பயணத்தை கருத்தில் கொண்டு தனியார் போக்குரத்துச் சேவைகள் இன்று திங்கட்கிழமை முதல் வடக்கு மாகாண ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்ள வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்விடயம் குறித்து வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளது.

குறித்த துண்டுப்பிரசுரங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தனியார் பேருந்திற்கு 60 வீதமும், இலங்கை அரச போக்குவரத்துச் சேவை பேருந்திற்கு 40 வீதமும் என்ற விகிதாசாரத்தில் கடந்த 3 வருட கால முயற்சியின் பின் இணைந்த நேர அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கை அரச போக்குவரத்துச் சேவை இதற்கு ஒத்துழைப்பு வழங்காத நிலையில் அத்துமீறிய சேவையினை மேற்கொண்டு வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக மத்திய அரசுடனும், மாகாண அரசுடனும் சந்திப்புக்களை ஏற்படுத்தியும் எதுவித பலனும் இதுவரை எமக்கு எட்டப்படவில்லை. இதனால் எமது பயணிகளின் பாதுகாப்பான பயணத்தினை கருத்தில் கொண்டு இன்று திங்கட்கிழமை தொடக்கம் எமக்கு தீர்வு கிடைக்கும் வரை வடக்கு மாகாணம் முழுவதும்பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்ளவுள்ளோம் என வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றைய தினம் வடக்கு மாகாண ரீதியில் முன்னெடுக்கப்படும் போராட்டத்தை கருத்திற்கொண்டு பயணிகள் அனைவரும் முன் திட்டமிடலுடன் செயற்படுமாறும் அறிவு றுத்தப்பட்டுள்ள அதேவேளை, இந்த பகிஷ் கரிப்பினால் பயணிகள் பெரும் பாதிப்பினை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4-60)

## விவசாயம் செய்யாத நிலங்கள்

# பறிமுதல் செய்யப்பட்டு வேறு இடங்களிலுள்ள விவசாயிகளுக்கு குத்தகையின்றி வழங்கப்படும்

புழுதியாற்று ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தில் விவசாய நடவடிக்கையில் ஆர்வம் இல்லாமல் உள்ள விவசாயிகளின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, விவசாயத்தில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு வழங்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சபையின் 32 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்ட புழுதியாற்றிலிருந்து கிளிநொச்சி மாயவனூர் பகுதிக்கான ஏற்று நீர்ப்பாசனத் திட்டம், விவசாயிகள் விவசாயம் செய்யாமல் இருப்பதால் செயலற்று இருக்கின்றது.

இதனை மீண்டும் செயற்படவைப்பது தொடர்பிலான கூட்டம் மாயவனூர் பொது நோக்கு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில், வடமாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் வே.பிறேம்குமார், கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் எம்.சுதாகரன், இரணைமடு நீர்ப்பான பொறியியலாளர் என்.செந்தூரன், மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செவ்வராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மீண்டும் ஏற்று நீர்ப்பாசனத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இறுக்கமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி தொடக்கம் இந்த ஏற்றுநீர்ப்பாசனத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால், இந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தில் விவசாயம் செய்ய இங்குள்ள விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. 100 ஏக்கர் நிலப்பரப்பில் 115 விவசாயிகள் விவசாயம் செய்யும் நோக்குடன் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் இங்கு 14 விவசாயிகள் மட்டும் விவசாயம் செய்கின்றனர்.

ஏற்றுநீர்ப்பாசன வயல்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு 10 லீற்றர் எரிபொருள் செலவாகின்றது. அனைத்து விவசாயிகளும் விவசாயம் செய்தால் இது பயனுடையதாக அமையும்.

இருந்தும், குறைந்த விவசாயிகள் செய்வதால், இதன் நட்டத்தன்மையைக் கருத்திற்கொண்டு, கடந்த 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தொடக்கம் ஏற்றுநீர்ப்பாசனம் கைவிடப்பட்டது.

இந்த ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் விவசாயம் செய்ய வேண்டும். பற்றை மண்டியுள்ள வயல் நிலங்கள் துப்புரவு செய்யப்பட்டு, விவசாய நடவடிக்கையில் ஈடுபடவேண்டும்.

அதற்கு காலஅவகாசம் வழங்கப்படும். அதற்குள் விவசாயம் செய்யாத விவசாயிகளின் நிலங்கள், பிரதேச செயலர் ஊடாக பறிமுதல் செய்யப்பட்டு, விவசாயம் செய்ய ஆர்வமாகவுள்ள வேறு இடங்களின் விவசாயிகளுக்கு எவ்வித குத்தகைகளும் பெறப்படாமல் வழங்கப்படும் என இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (2)

# 16 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள்



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் புதுக்காட்டு குடியிருப்பு, மாவடியம்மன் வட்டக்கட்சி கிளிநொச்சியை சேர்ந்த 16 குடும்பங்களுக்கு 32 ஆயிரத்து 96 ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி மக்களால் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் விடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கு அமைவாக இக் கிராமத்தில் உள்ள 16 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை நேற்று முன் தினம் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் வழங்கியுள்ளது மேற்படி கிராம மக்கள் சங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ள விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளதாவது,

தமக்கு எந்தவொரு அரசியல்வாதிகளோ வெளிநாட்டு நிறுவனங்களோ வேறு துறை சார் நிறுவனங்களோ உதவிகள் செய்ய முன்வரவில்லை. தமது பிரதேசத்துக்கு வந்து தமது குறைகளை கேட்பதும் இல்லை. எமது குடியிருப்பு பகுதியில் கிணறு மற்றும் மலசலகூட வசதிகள் கூட இல்லை. தாம் தமது காலை கடன்களை காட்டுப் பகுதியிலேயே கழித்து வருகின்றோம். இங்கு உள்ளவர்கள் அன்றாடம் கூலி வேலை செய்யும் கூலிதொழிலாளர்கள். நாங்கள் தற்காலிக குடிசைகளிலேயே எமது வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றோம். எமக்கு சீரான தொழில் கிடைப்பதில்லை. எமக்கு இதுவரை எந்த நிவாரணப் பொருட்களும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கிராமத்து மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச சபை உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இம் மக்களின் குறைகள் சிலவற்றையேனும் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து பிரதேசத்தை பார்வையிட்டு உதவிகள் செய்ய முன்வர வேண்டும் என்று புதுக்காட்டு குடியிருப்பு மக்கள் சார்பாகவும் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)



புனர்வாழ்வு பெற்ற விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளி வெற்றிச்செல்வி எழுதிய ஏழாவது நூலான பெண் போராளிகளின் பம்பைமடு தடுப்பு முகாம் வாழ்வு தொடர்பான ஒரு வரலாற்றுப் பதிவுகளைக் கொண்ட ‘‘ஆறிப்போன காயங்களின் வலி’’ எனும் நூல் வெளியீடு அண்மையில் மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியை தனலட்சுமி கிருஸ்துராஜன் தலைமையில் இடம்பெற்ற போது... (படங்கள்:- உ.சாளின்)


# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 7 சந்தேகநபர்கள் கைதாகினர்

பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையதாகக் கூறப்பட்டு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 7 சந்தேக நபர்கள் முள்ளியவளைப் பொலிஸாரினால் கடந்த 25 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை இன்று திங்கட்கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டுள்ளதாக முள்ளியவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கைது செய்யப்பட்டவர்கள் நீண்ட நாட்களாக பிடியாணை பிறப்பிக் கப்பட்டிருந்த போதும் தலைமறைவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-310)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



வவுனியா, அல். அக்சா மகா வித்தி யாலய அதிபர் ஜனாப் எம்.சேகு ராஜீது செட்டிகுளம் மத்தியஸ்தர் சபையின் தவிசாளராக இரண்டாவது தடவையாக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அகில இலங்கை சமாதான நீதவானாக நீதிபதி ஜனாப் ரி.எல். ஏ.மனாவ் முன்னிலையில் சத் தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் மன்/செட்டிகுளம் மகாவித்தியால யம், மன்/ எருகலம்பிட்டி மத்திய கல்லூரி, மன்/அல்.அஸ்கர் தேசிய பாடசாலை ஆகியவற் றின் பழைய மாணவனும், சர்வ தோய அமைப்பின் நீண்ட கால உறுப்பினரும், வடக்கு மாகாண பொலிஸ் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவரும், காந்தீய அமைப்பின் முன்னாள் உறுப்பினரும் ஆவார். சிறந்த மத்தியஸ்தர், சிறந்த அதிபர் ஆகியவற்றுக்காக ஜனாதிபதி விருதும் பெற்றுள்ளார். (2-250)

## புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்வு நாவற்குழியில்

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நாவற்குழி மேற்கு பிரதேச மற்றும் நாவற்குழி ஐயனார் கோயிலடி மக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த வியாழக் கிழமை 'சான்றோர் சன சமூக நிலையத்தில்' நடைபெற்றது.

சாவகச்சேரி பிரதேச செயலாளர் திருமதி. அ.சாந்த சீலனின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் சட்ட ரீதியற்ற போதைப்பொருள் பாவனை தொடர்பில் 1984 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு பிரச்சினைகளை முறையிட்டு அதற்கு தீர்வு காண முடியும் என்பதோடு பாதிக்கப்பட்ட நபர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கும் அனுப்ப முடியும். மேலும் அப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பாடசாலை மட்டத்திலும் கிராம மட்டத்திலும் நடத்தி அதனை குறைப்பதற்கான செயற்பாட்டை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்விற்கு வாழ்வின் எழுச்சி முகாமையாளர் இ.அன்ரனி சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் செல்வி ந.நிஸாந்தினி, நாவற்குழி மேற்கு கிராம சேவையாளர் ந.தனபாலசிங்கம், வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் க.யோகநாதன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.நகுலேசுகன், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. கமலலோஜினிதேவி. உள வளத்துணை உதவியாளர் த.மயூரிகா, மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலைய மாவட்ட இணைப்பாளர் கோடீஸ்வரன் மற்றும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் யாழ். மாவட்ட உள வளத்துணையாளர் அ.எட்வின் றொஜர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். (இ-9)



## கண்ணுக்குமுன் தமது காணி இருந்தும் செல்ல முடியவில்லை என மக்கள் ஏக்கம்

கண்ணுக்கு முன்னால் எமது காணி இருந்தும் அங்கு செல்வதற்கு முடியவில்லை என்பது வேதனை அளிக்கிறது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்றே கூறமுடியும் என வலிவடக்கில் தமது காணிகளை அடையாளப்படுத்த வந்த மக்கள் சிலர் ஏமாற்றத்துடன் தெரிவித்துள்ளனர்.

கடந்த 26 வருடங்களுக்கு பிறகு சிறுசிறு பகுதிகளாக எமது காணிகளை விடுவித்து வருகின்றனர். ஆனால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை எமது கண்ணுக்கு முன்னால் எமது வீடு இருக்கும் போது அவற்றை சென்று பார்பதற்கு முடியவில்லை. இது மிகவும் வேதனையாகவுள்ளது.

அடுத்த வருடம் எமது காணிகளை விடுவிப்பதாக கூறியிருக்கிறார்கள் அதை நினைத்து மிகவும் சந்தோசமாக உள்ளோம். எமது காணி கிடைக்கும் என எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம்.

ஒரு வருடம் வரை காத்திருக்காமல் நாம் நிம்மதியாக வாழ ஜனாதிபதி வழி செய்ய வேண்டும்.


இப்பிரச்சினையை மனிதாபிமானத்துடன் அணுகி தீர்த்து வைப்பார் என நம்பிக்கையுடன் உள்ளோம்.

வாடகை வீட்டில் பல இன்னல்களை சந்தித்து எமது வாழ்க்கையை கொண்டு செல்கிறோம். எமது இடங்களை பார்க்கும் போது மிகவும் சந்தோசமாக உள்ளது. வீட்டை விட்டு செல்ல மனம் இல்லை.

எமது காணிகளை மிக விரைவில் விடுவிக்க வேண்டும் என தாழ்மையுடன் கோரிக்கை விடுகிறோம் என தெரிவித்துள்ளனர். (இ-9)







போதைப்பொருள் பாவிப்பதால் ஏற்படும் விளைவுகள் மற்றும் சிறுவர் ,பெண்களின் பாதுகாப்பு எனும் தொனிப்பொருளில் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் விழிப்புணர்வு செயற்றிட்டம் நடைபெற்ற போது... (படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)

## போதைப்பொருள் பாவனையின் விளைவுகள் கிளிநொச்சியில் விழிப்புணர்வு செயற்றிட்டம்

போதை பொருள் பாவிப்பதால் ஏற்படும் விளைவுகள் மற்றும் சிறுவர் பெண்களின் பாதுகாப்பு தொனிப்பொருளில் விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்று கிளிநொச்சியில் நடைபெற்றது

கிளிநொச்சி பாரதிபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை அமைப்பான துளிர் அமைப்பின் ஏற்பாட்டிலும் காவேரிகலா மன்றத்தின் அனுசரணையிலும் நடைபெற்றது.

இவ்விழிப்புணர்வு செயற்பாட்டு நிகழ்வை சமூகசேவை அமைப்பான துளிர் அமைப்பின் தலைவர் ஏற்று நடத்தி இருந்தார். இவ் விழிப்புணர்வு செயற்றிட்டத்தில் பாடசாலை மாணவர்கள் ,பெற்றோர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அத்தோடு வளவாளர்களாக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், உளவளத்துணை உத்தியோகத்தர், சட்ட உதவி ஆணைக்குழு உத்தியோகத்தர், சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு விரிவுரைகளை வழங்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-312)



யாழ் .எயிட் நிறுவனத்தினால் அண்மையில் புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்புடன் புதுக்குடியிருப்பு மற்றும் உடையார் கட்டைச் சேர்ந்த விசேட தேவையுடைய முன்னாள் போராளிகள் மற்றும் சிறுவர்களுக்கு கற்றலுக்கான உதவிகள், மருத்துவ தேவைக்கான உதவிகள் என்பன வழங்கப்பட்டன. (படம்:-அராலி செய்தியாளர்)

## முறிகண்டி குளம் புனரமைக்கப்படாமையால் 50 ஏக்கர் விவசாய நடவடிக்கை பாதிப்பு



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள குளம். முறிகண்டி குளமாகும். முறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்கும், கொக்காவில் பகுதிக்கும் நடுவில் ஏ-9 வீதியில் அமைந்துள்ள குளம் புனரமைக்கப்படாமையால் தொடர்ந்து வருடா வருடம் வெள்ள பாதிப்புக்குள்ளாவதாக் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த குளம் யுத்தகாலத்தில் சேதமடைந்துள்ளதாகவும், குளத்தினை புனரமைப்பதற்கு அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்க வில்லை என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறித்த குளத்தினை பயன்படுத்தி 50 ஏக்கர்களிற்கு மேல் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும்,• தற்போது விவசாயம் செய்ய முடியாதுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

காலபோக நெற்செய்கை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த குளத்தில் தேக்கப்படவேண்டிய நீர் பயிர்களை அழித்து செல்வதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இதே வேளை அளவிற்கதிகமான நீர் கட்டுப்பாடின்றி வெளியேறுவதனால் குறித்த குளத்தின் கீழ் உள்ள முறிகண்டி, வசந்த நகர், செல்வபுரம், இந்துபுரம் ஆகிய நான்கு கிராமங்களில் வெள்ளப்பாதிப்புகளிற்கு வருடாவருடம் முகம் கொடுப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வடமாகாணத்தை சேர்ந்த இரண்டு அமைச்சர்கள் உள்ளதாகவும், விவசாயம், நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்கும் நோக்குடன் குளத்தினை புனரமைப்பு செய்து தரவில்லை என குற்றம் சாட்டுகின்றனர்.

குறித்த குளத்தினை புனரமைப்பு செய்து விவசாயம், மற்றும் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்கவும், வெள்ள பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கவும் சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)

## பயங்கரவாதத் தாக்குதலில் 8 ராணுவத்தினர் உயிரிழப்பு

### பாக்.தூதர் கருத்தால் சர்ச்சை

பயங்கரவாத தாக்குதலில் 8 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். இது தொடர்பாக கருத்து தெரிவித்த இந்தியாவிற்கான பாகிஸ்தான் தூதர் இப்தாரை கொண்டாடுவோம் என்று கூறியுள்ளார்.

காஷ்மீரில் பேருந்தில் சென்ற பாதுகாப்பு படை வீரர்கள் மீது நேற்றுக் காலை பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 8 பேர் பரிதாபமாக உயிர் இழந்தனர். 21 பேர் படுகாயம் அடைந்தனர். பயங்கரவாதிகளின் தாக்குதலில் படுகாயம் அடைந்த பாதுகாப்பு படை வீரர்கள் 21 பேரும் சிகிச்சைக்காக சிறிநகர் இராணுவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பதிலடித் தாக்குதலில் 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக கருத்து தெரிவித்த இந்தியாவிற்கான பாகிஸ்தான் தூதர் அப்துல் பாசீத் பேசுகையில், "இது ரமழான் மாதம். இந்த இப்தார் நிகழ்ச்சியில் கவனம் செலுத்துவோம். ஜம்மு காஷ்மீர், இந்தியா- பாகிஸ்தான் இடையில் பிரச்சனையில் உள்ள விவகாரம். இது தீர்க்கப்பட வேண்டிய விவகாரம். இவ்விவகாரம் தொடர்பாக அமர்ந்து ஆலோசனை நடத்துவோம் என்று நாங்கள் நம்புகிறோம். இப்தாரை கொண்டாடுவோம்." என்று கூறியுள்ளது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

# ஆசிய வங்கியிடம் 20,000கோடி கடன்

## திட்டங்களின் பட்டியலை தயாரித்து வருகிறோம்-ஜேட்லி

*(டில்லி)*

*எந்தெந்த திட்டங்களுக்காக ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடம் (ஏஐஐபி) நிதியுதவி பெறுவது என்பதை இந்தியா விரைவில் முடிவு செய்யும் என்று நிதியமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்தார். 200 கோடி டொலர் முதல் 300 கோடி டொலர் வரை மதிப்பிலான (இந்திய மதிப்பில் சுமார் ரூ.13,000 கோடி முதல் ரூ.20,000 கோடி வரை) ரயில்வே, விமான சேவை, துறைமுகம் போன்ற திட்டங்களைப் பரிந்துரை செய்வது குறித்து பட்டியல் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)*

## காஷ்மீர் பம்போரா தாக்குதலுக்கு லஷ்கர்-இ-தொய்பா பொறுப்பேற்பு



ஜம்மு - காஷ்மீர் மாநிலம் பம்போரே பகுதியில் நேற்றுக் காலை நிகழ்ந்த தீவிரவாத தாக்குதலுக்கு லஷ்கர் - இ - தொய்பா தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

காஷ்மீர் மாநிலம் புல்வாமா மாவட்டத்தின் ஸ்ரீநகர் ஜம்மு தேசிய நெடுஞ்சாலையில் பம்போரா பகுதியில் மத்திய ரிசர்வ் பொலிஸ் படை வீரர்கள் 30 இற்கும் மேற்பட்டோர் வீதி ரோந்து பணிக்காக ஒரு பேருந்தில் சென்று கொண்டு இருந்தனர்.

அவர்களது பேருந்து ஸ்ரீநகரில் இருந்து 14 கி.மீ. தொலைவில் உள்ள பிரிஸ்தாபல் என்னும் இடத்தில் சென்ற போது அப்பகுதியில் மறைந்திருந்த பயங்கரவாதிகள், பேருந்தை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர்.

எதிர்பாராத இந்த தாக்குதலில் மத்திய ரிசர்வ் பொலிஸ் படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் உள்பட 5 வீரர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிர் இழந்தனர். 24 பேர் பலத்த குண்டுக் காயம் அடைந்தனர்.

சுதாகரித்துக் கொண்ட பாதுகாப்பு படையினர் பயங்கரவாதிகளை நோக்கி துப்பாக்கியால் சுட்டு பதிலடி கொடுத்தனர். இதில் 2 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 2 பயங்கரவாதிகள் உள்ளூர் வாசிகளின் உதவியுடன் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றனர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு கூடுதலாக பாதுகாப்பு படையினர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், இந்த தாக்குதலுக்கு லஷ்கர் - இ - தொய்பா தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் தற்கொலைப் படை பிரிவை சேர்ந்தவர்களாக இருக்கலாம் என கூறப்படுகிறது. (இ-5)

## பம்போரா தாக்குதலுக்கு ராஜ்நாத் சிங் கண்டனம்

### பிரதமர் மோடி இரங்கல்



ஜம்மு காஷ்மீர் மாநிலம் பம்போரா பகுதியில் நேற்றுக் காலை தீவிரவாதிகள் சி.ஆர்.பி.எப். வீரர்கள் சென்ற வாகனம் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்திற்கு உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

காஷ்மீரில் பேருந்தில் சென்ற பாதுகாப்பு படை வீரர்கள் மீது பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 8 பேர் பரிதாபமாக உயிர் இழந்தனர். 21 பேர் படுகாயம் அடைந்தனர். பதிலடி தாக்குதலில் 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பம்போரா தாக்குதல் தொடர்பாக, உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது,

தீவிரவாதிகள் நடத்திய இந்த தாக்குதல் கோழைத்தனமாகும். படுகாயம் அடைந்த வீரர்கள் விரைவில் உடல்நலம் பெற வேண்டும். தீவிரவாதத்தை ஒடுக்க கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் இவ்வாறு அவர் கூறினார்.

இந்த சம்பவம் குறித்து பிரதமர் மோடி டுவிட்டரில் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியிருப்பதாவது,

பம்போரா தாக்குதலில் உயிரை தியாகம் செய்த வீரர்களுக்கு தலைவணங்குகிறேன். இந்த சம்பவம் மனதளவில் பாதிக்கச் செய்துள்ளதாகவும் பிரதமர் மோடி டுவிட்டர் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ளார். (இ-5)

## வீதிகளில் தேங்கிய வெள்ளத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



மும்பையில் அடை மழை காரணமாக நேற்று முன்தினம் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அடுத்த 2 நாட்களுக்கு கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துளளது.

பருவமழை

மராட்டியத்தில் பருவ மழை தீவிரமடைந்துள்ளது. இதன் காரணமாக நேற்று முன்தினம் மும்பையில் அடை மழை கொட்டித்தீர்த்தது. வீதியில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது.வீட்டிற்குள் மழை நீர் புகுந்தது.

மழை தொடர்ந்து பெய்து கொண்டே இருந்ததால் மிகுந்த சிரமத்திற்கு மத்தியிலேயே மும்பைவாசிகள் தங்கள் பணிகளில் ஈடுபட்டனர். அதிகளவில் மக்கள் வந்து செல்லும் காய்கறி சந்தைகள், புகையிரத நிலையங்கள் சேறும், சகதியுமாக காணப்பட்டன. (இ-5)

## எட்டு மாதக் குழந்தையை கருணைக் கொலை செய்ய நீதிமன்றில் பெற்றோர் மனு

ஆந்திராவில் நுரையீரல் பாதிப்பால் அவதிப்பட்டு வரும் 8 மாத குழந்தையின் மருத்துவ செலவை அரசே ஏற்கும் என முதல்வர் சந்திர பாபு நாயுடு அறிவித்துள்ளார்.

ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்தை சேர்ந்த தம்பதியினர் ரமணப்பா- சரஸ்வதி. இவர்களுக்கு ஞானசாய் என்ற 8 மாத பெண் குழந்தை யுள்ளது, பிறந்ததில் இருந்தே குழந்தை நுரையீரல் நோயால் அவதிப்பட்டு வந்துள்ளது.

எனவே குழந்தையை காப்பாற்ற வேண்டுமானால் அறுவை சிகிச்சை செய்ய 50 இலட்சம் ரூபா வரை செலவாகும் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மிகவும் கஷ்டப்படும் நிலையில் உள்ள ரமணப்பாவால் குழந்தை யின் மருத்துவ செலவுகளை கவனிக்க முடியவில்லை. குழந்தை யின் உடல்நலமும் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே போனது.

இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளான தம்பதியினர், குழந்தையை கருணைக்கொலை செய்ய அனுமதிக்குமாறு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர்.

இந்த விடயம் ஊடகங்களில் வெளியாகவே, குழந்தையின் மருத் துவ செலவுகளை அரசே ஏற்கும் என முதல்வர் சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார்.

இந்நிலையில் குழந்தைக்கு சென்னையில் அறுவை சிகிச்சைகள் நடத்த தீவிரமான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (இ-5)

# ரஷ்ய வான்வழி தாக்குதலில் பொது மக்கள் 31 பேர் பலி!

## 12 பேர் படுகாயம்



(பெய்ரூட்)

**சிரியாவின் கிழக்கே ஜிகாதிகளின் பிடியில் உள்ள நகர் மீது நேற்றுக் காலை ரஷ்யா நடத்திய வான்வழித் தாக்குதலில் பொதுமக்கள் 31 பேர் கொல்லப்பட்டனர். 12 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.**

சிரியாவின் டெய்ர் எஸ் சார் மாகாணம் எண்ணெய் வளம் மிக்கது. இங்குள்ள அல்-குரியா நகர் ஐ.எஸ். குழுவின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது.

இதன் மீது ரஷ்ய படையினர் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளனர் என சிரியா நாட்டின் மனித உரிமைகளுக்கான கண்காணிப்பகம் கூறியுள்ளது.

இது பற்றி அதன் தலைவர் ரமி அப்தில் ரகுமான் கூறும்பொழுது, வேறு 16 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆனால் அவர்கள் பொதுமக்களா அல்லது ஐ.எஸ். போராளிகளா என்பது உடனடியாக தெளிவாகத் தெரியவில்லை எனத் தெரிவித்தார். (இ-5)

# அணுசக்தி ஒப்பந்தத்தை ஆதரிக்க இந்தியாவிடம் பணம் பெற்றாராம்

## ஹிலாரி மீது டிரம்ப் பரபரப்பு குற்றச்சாட்டு



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் களம் சூடு பிடித்து வருகிறது. இந்த தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டனும், குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்டு டிரம்பும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில்டொனால்டு டிரம்ப், 35 பக்கங்களை கொண்ட சிறிய புத்தகம் ஒன்றை வெளியிட்டுள்ளார். ஹிலாரியைப் பற்றிய 50 உண்மைகள் என்று கூறி வெளியிடப்பட்டுள்ள தகவல்களில் பலவும், இந்த வாரம் நியூயோர்க்கில் நடந்த கூட்டத்தில் டிரம்ப் விரிவாக கூறியவைதான். ஹிலாரி கிளின்டன் மீது டிரம்ப் பல் வேறு குற்றச்சாட்டுகளை கூறி இருந்தாலும், அவற்றில் பல, பல்லாண்டு காலமாக கூறப்பட்டு வந்துள்ளவை தான். அவற்றை ஹிலாரியும் மறுத்து வந்துள்ளார்.

அதில் மிக முக்கியமான குற்றச்சாட்டு, இந்திய-அமெரிக்க சிவில் அணுசக்தி ஒப்பந்தத்தை ஆதரிப்பதற்கு இந்திய அரசியல் தலைவர்களிடமும், நிறுவனங்களிடம் இருந்தும்ஹிலாரிகிளின்டன் பணம் பெற்றார் என்பதாகும். கிளின்டன் அறக்கட்டளைக்கு சமாஜவாடி கட்சியின் மூத்த தலைவர் அமர்சிங் 10 இலட்சம் டொலரிலிருந்து 50 இலட்சம் டொலருக்குள் வழங்கினார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, "அமர்சிங் 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம், சிவில் அணுசக்தி ஒப்பந்தத்துக்கு ஆதரவு தேடுவதற்கு அமெரிக்கா வந்தார். அப்போது அவரிடம் ஜனநாயக கட்சி எம்.பியாக இருந்த ஹிலாரி கிளின்டன், தனது கட்சியினர் சிவில் அணுசக்தி ஒப்பந்தத்துக்கு முட்டுக்கட்டை போடமாட்டார்கள் என உறுதி அளித்தார்" என குறிப்பிடப்பட்டுள்ளது.



2008 ஆம்ஆண்டுகிளின டன் அறக்கட்டளைக்கு இந்திய தொழில் கூட்டமைப்பு 5 இலட்சம் டொலர் முதல் 10 இலட்சம் டொலருக்குள் நிதி வழங்கியது எனவும் கூறப்பட்டுள்ளது. (இ-5)

# தாய்வானுடனான தொடர்பை திடீரெனத் துண்டித்தது சீனா

## பதற்றம் அதிகரிப்பு




(பீஜிங்)

தாய்வான் தனி நாடாக இயங்கி வந்தாலும், அதைத் தன்னிடம் இருந்து பிரிந்து சென்ற மாகாணமாகத்தான் சீனா பார்க்கிறது. தாய்வானில கடந்த மாதம் ஜனாதிபதியாக சாய் இங்க் வென் பதவி ஏற்றார். அவர் ஆக்கபூர்வமான பேச்சு நடத்த சீனாவுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் சீனா தன் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை.

ஒரே சீனா என்ற கொள்கையை தாய்வான் மதிக்கவில்லை. அங்கீகரிக்கவும் இல்லை என சீனா கருதுகிறது. அது மட்டுமின்றி முழு சுதந்திரம் பெறுவதற்கான நடவடிக்கையில் சாய் இங்க் வென் ஈடுபடுவார் எனவும் சந்தேகிக்கிறது.

இந்த நிலையில் தாய்வானுடனான தகவல் தொடர்பினை சீனா முறித்துக் கொண்டு விட்டதாக நேற்று முன் தினம் திடீரென அறிவித்தது. இதனால் இரு நாடுகள் இடையேயான பதற்றம் அதிகரித்துள்ளது. (இ-5)

# 2 மகள்களைக் கொன்ற தாய் சுட்டுக்கொலை

(நியூயோர்க்)

அமெரிக்காவில், தன் இரண்டு மகள்களை, துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த தாயை, பொலிஸார் சுட்டுக் கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில், ஹூஸ்டன் புறநகர் பகுதியான புல்ஷியரின் ஒரு குடியிருப்பில், கடந்த வெள்ளிக்கிழமை துப்பாக்கி குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது. அந்த குடியிருப்பில், ஒரு வீட்டில் வசித்து வந்த பொலிஸ் அதிகாரி ஒருவர், அந்த இடத்துக்கு வேகமாக ஓடினார். அங்கு, 20 வயதுக்குட்பட்ட, இரண்டு பெண்கள், இரத்த வெள்ளத்தில் கிடப்பதையும், 45 வயது பெண் ஒருவர், கையில் துப்பாக்கியுடன் நிற்பதையும் பொலிஸ் அதிகாரி பார்த்தார். குண்டு பாய்ந்து, இரத்த வெள்ளத்தில் கிடந்த பெண்களை, மீண்டும் சுடுவதற்கு, அந்த பெண் முயற்சித்தார்.

அதிர்ச்சியடைந்த அந்த பொலிஸ் அதிகாரி, அந்தப் பெண்ணை, துப்பாக்கியால் சுட்டார் இதில் குண்டு பாய்ந்து, அந்தப் பெண் இறந்தார். பொலிஸ் அதிகாரியால் சுடப்பட்டு இறந்த பெண், தாய் எனபதும, குடும்ப பிரச்சினையில், தன் இரண்டு மகள்களையும் அவர சுட்டுள்ளதும் தெரிந்தது. படுகாயம் அடைந்திருந்த இரணடு பெண்களையும்பொலிஸார், வைத்தியசாலையில் சேர்த்தனர். ஆனால், இருவரும், ஏற்கனவே இறந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். (இ-5)

# அரசுப் படை - கிளர்ச்சிப் படை ஏமனில் மீண்டும் கடும்சண்டை

## 33 பேர் உயிரிழப்பு



அரசுப் படையினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே ஏமனில் நேற்று முன்தினம் மீண்டும் சண்டை தீவிரமடைந்தது. இதில் 22 கிளர்ச்சியாளர்களும், 11 அரசுப் படையினரும் உயிரிழந்ததாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். ஏற்கனவே போர் ஒப்பந்தம் அமுலில் இருக்கும் நிலையில் ஜாஃப் மாகாணத்தின் அல்-முதூன் மாவட்டத்தில் அரசு ஆதரவுப் படையினர் மீது கிளர்ச்சி யாளர்கள் தாக்குதல் நிகழ்த்தினர்.

அதை யடுத்து, சவுதி கூட்டுப் படை யின் வான்வழித் தாக்குதலின் உதவியுடன் அரசுப் படையினர் கிளர்ச்சியாளர்கள் மீது எதிர் தாக்குதல் நிகழ்த்தினர். (இ-5)

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## கணக்கீடு பகுதி-I

Teacher: K.B. KAJAN, B.COM (Jaf), H.N.Dip in-Acc (ATI), Dip in Edu (OUSL), M.Com (Acc), (St. Partick's College, Jaffna)

**01) பின்வரும் கூற்றுக்கள் கணக்கீட்டுப் பாடம் கற்கும் மாணவர் ஒருவரினால் கூறப்பட்டவை.**

A-கடந்தகால நிகழ்வொன்றினால் தோன்றி வணிகத்தினால் கட்டுப்படுத்தக்கூடிய வணிகத்தின் உட்பாய்கின்ற பொருளாதார நன்மை சொத்துக்கள் எனலாம்.

B-உரிமையாளரின் பற்றுதல் இன்றி தேறிய சொத்தில் ஏற்படும் குறைவு செலவீனம் எனலாம்.

C-கொடுப்பனவின் போது வளங்களில் வெளிப்பாய்ச்சலினை ஏற்படுத்தும் கடந்த கால கொடுக்கல் - வாங்கல் நிகழ்வு பொறுப்புக்கள் எனலாம்.

D-உரிமையாளரின் மேலதிக மூலதனமின்றி வளங்களின் உட்பாய்ச்சலையும் உரிமை யாண்மையில் அதிகரிப்பினையும் ஏற்படுத்துதல் வருமானம் எனலாம்.

**அம் மாணவர் கூறிய கூற்றுக்களில் சரியானது/ சரியானவை?**

1. A மட்டும் 2. A,D மட்டும் 3. B, C, D மட்டும்
4. A, C, D மட்டும் 5. A, B, C, D எல்லாம்

**02) கணக்கீட்டுச் செயன்முறையில் கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகளில் சரியான ஒழுங்கு வரிசை முறை யாது?**

A-மூடும்பதிவுகளைத் தயாரித்தல்

B-கொடுக்கல் வாங்கல்களைப் பேரேட்டுக்கு மாற்றுதல்.

C- கொடுக்கல் வாங்கல்களை நாட்குறிப்புக்களில் பதிவிடுதல்

D- நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்

1. C,A,B,D 2. D,C,A,B 3. B,A,D,C 4. C,B,A,D 5. C,B, D, A

**03) 2016.03.01 இல் மதுசா தனிவியாபார நிறுவனத்தின் பிரித்தெடுக்கப்பட்ட நிதிநிலைமைத் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

| | (ரூபா.000) |
|---|---|
| மொத்தச்சொத்துக்கள் | 400 |
| மொத்த உரிமையாண்மைகள் | 300 |

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் 2016.03.31 இல் முடிவடைந்த மாதத்திற்கானதாகும்.

| | (ரூபா.000) |
|---|---|
| பற்றுக்கள் | 150 |
| அறிமுகப்படுத்திய புதிய மூலதனம் | 50 |
| காசாகச் செலுத்திய செலவீனம் | 120 |
| பெற்ற வங்கிக்கடன் | 60 |

2016.03.31 இல் பின்வருவனவைகளில் எது கீழ்வரும் சமன்பாட்டினை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது.

| மொத்தச்சொத்துக்கள் | - | மொத்தப்பொறுப்புக்கள் | = | உரிமையாண்மை |
|---|---|---|---|---|
| 1.240000 | - | 160000 | = | 80000 |
| 2.240000 | - | 60000 | = | 180000 |
| 3.380000 | - | 160000 | = | 220000 |
| 4.40000 | - | 100000 | = | 300000 |
| 5.620 000 | - | 100000 | = | 520000 |

04) நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் எண்ணக்கரு சட்டகத்திற்கு அமைய நிதிக்கூற்றுக்களின் அடிப்படை எடுகோள்/ எடுகோள்கள்

1. அலகுசார் மட்டும் 2. அட்டுறு மட்டும் 3. அலகுசார், அட்டுறு ஆகிய இரண்டும்
4. தொடர்ந்து இயங்குதல் மட்டும் 5. பண அளவீடு, கால அளவீடு

**05) நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் நோக்கம்/ நோக்கங்களை பின்வருவனவற்றில் எது/ எவை வெளிப்படுத்தும்**

A- விளங்கிக் கொள்ளுதலை உறுதிப்படுத்துவதற்கு

B- குறித்த வழிகாட்டல்களை வழங்குவதற்கு

C-தகவல்களின் பொருத்தப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு

1. A மாத்திரம் 2. A, B ஆகியன மாத்திரம் 3. A,C ஆகியன மாத்திரம்
4. B, C ஆகியன மாத்திரம் 5. A, B, C ஆகியன எல்லாம்

**06) குறித்த வணிகமொன்றின் நிதிநிலைமைக் கூற்றில் முன்கூட்டியே பெற்றுக் கொள்ளப்பட்ட விற்பனை ஒப்பந்தத்தின் மூலமாக காசுப் பெறுவனவு பொறுப்பாக வெளிப்படுத்தப்பட்டது. இந் நடைமுறையினை பின்பற்றுவதற்கு அடிப்படையை வழங்கிய எண்ணக்கருக்களில் சரியானவை?**

A-இணைத்தல் B-தொடர்ந்து இயங்குதல்

C- தேறல் D-அட்டுறு

1. A மாத்திரம் 2. C மாத்திரம் 3. A, D மாத்திரம்
4. A, B, C மாத்திரம் 5. C, D மாத்திரம்

**07)சபேசன் தனிவியாபார நிறுவனத்தின் 2016.03.31 இல் எடுக்கப்பட்ட தகவல்கள்**

| | (ரூபா 000) |
|---|---|
| கடன் கொள்வனவு | 6200 |
| வெளித்திரும்பல்கள் | 120 |
| கடன் கொடுத்தோரால் விதித்த வட்டி | 30 |
| பெற்ற கழிவு | 150 |
| எதிரேடு | 60 |
| கடன் கொடுத்தோர் மீதியில் ஏற்பட்ட குறைவு | 200 |

2016.03.31 இல் முடிவடைந்த வருடத்தில் கடன் கொடுத்தோருக்குச் செலுத்திய காசு

1. ரூபா 6040 000 2. ரூபா 6100 000 3. ரூபா 6220 000
4. ரூபா 5820 000 5. ரூபா 5700 000

**08) அஜந்தன் வணிகத்தின் 31.03.2016 இல் வரைபு நிதிக்கூற்றுக்களைத் தயாரித்ததன் பின்பு பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.**

1. விற்பனைத் திரும்பல் ரூபா 50 000 விற்பனைக் கணக்கில் வரவில் பதியப்பட்டது.
2. வெளித்திரும்பல் ரூபா 20 000 கொள்வனவுக் கணக்கில் செலவில் பதியப்பட்டது.
3. கடன் கொள்வனவு ரூபா 100 000 கொள்வனவு நாளேட்டில் ரூபா 10000 எனப்பதியப்பட்டது.

**இவ் வழுக்களைச் சீராக்குவதனால் நிறுவனத்தின் இலாபம் எவ்வளவு தொகையால் அதிகரிக்கும்/ குறையும்.**

1. ரூபா 70 000 குறையும் 2. ரூபா 90 000 குறையும் 3. ரூபா 110 000 குறையும்
4. ரூபா 90 000 அதிகரிக்கும் 5. ரூபா 60 000 குறையும்

◆ **வினா இலக்கம் 9ஆம், 10ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல் களைப் பயன்படுத்துக. விதுசா வணிகமொன்றின் இருப்பு உருப்படி தொடர்பானது**

| திகதி | விபரங்கள் | அலகுகள் | மொத்தப்பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| 2016.03.01 | மீதி | 9000 | 900000 |
| 2016.03.07 | கொள்வனவுகள் | 11000 | 2200000 |
| 2016.03.15 | கொள்வனவுகள் | 10000 | 1700000 |

மார்ச் 16 தொடக்கம் மார்ச் 31 திகதி வரை 27000 அலகுகள் அலகொன்று ரூபா 300 விலையில் விற்பனை செய்யப்பட்டன.

09) இருப்பு வழங்கலின் போது நிறையளிக்கப்பட்ட சராசரி முறையைப் பயன்படுத்தியிருப்பின் 2016 மார்ச் மாதத்திற்கான விற்பனைக் கிரயம்.

1. ரூபா 4290000 2. ரூபா 4800 000 3. ரூபா 8100 000
4. ரூபா 4320 000 5. ரூபா 5400 000

**10) இருப்பு வழங்கலின் போது முதல் உள்ள முதல் வெளியே முறையைப் (F1F0) பயன்படுத்தி 2016 மார்ச் மாதத்திற்கான மொத்த இலாபம்**

1. ரூபா 3300000 2. ரூபா 3780 000 3. ரூபா 3680 000
4. ரூபா 7590 000 5. ரூபா 3810 000

◆ **11 ஆம் 12 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு நிறுவனமொன்றின் மோட்டார் வாகனங்கள் தொடர்பான பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

| | (ரூபா 000) |
|---|---|
| 31.03.2016 இல் உள்ளவாறான முன்கொண்டு செல்லும் தொகை | 5000 |
| 31.03.2015 இல் உள்ளவாறான முன்கொண்டு செல்லும் தொகை | 6000 |
| 31.03.2016 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு | 400 |
| 31.07.2015 இல் விற்ற மோட்டார் வாகனத்திலிருந்து பெற்ற தொகை | 3000 |
| விற்ற மோட்டார் வாகனத்தின் 01.04.2015 இல் உள்ளவாறான முன்கொண்டு செல்லும் தொகை | 2250 |
| விற்ற மோட்டார் வாகனத்தின் வருடாந்த பெறுமானத்தேய்வு | 750 |

அனைத்து மோட்டார் வாகன கொள்வனவுகளும் காசுக்குச் செய்யப்பட்டன.

**11) 2016.03.31 இல் முடிவடைந்த ஆண்டு காலத்தில் மோட்டார் வாகனத்தைக் கொள்வனவு செய்கையில் ஏற்பட்ட காசு வெளிப்பாய்ச்சல்**

1. ரூபா 800000 2. ரூபா 1000000 3. ரூபா 1400000
4. ரூபா 19000000 5. ரூபா 2400000

**12) இம் மோட்டார் வாகன அகற்றலினால் எழுந்த இலாபம்**

1. ரூபா 250000 2. ரூபா 50000 3. ரூபா 750000
4. ரூபா 1000000 5. ரூபா 1500000

**13) சந்தோஸ் விளையாட்டுக் கழகத்தின் 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டு தொடர்பில் கொள்ளல் கொடுத்தல் கணக்கில் பதியப்பட்ட சந்தாப் பெறுவனவு பின்வருமாறு,**

| | (ரூபா 000) |
|---|---|
| 2014/15 நிலுவை தொடர்பாக | 150 |
| 2015/16 முடிவடைந்த ஆண்டு தொடர்பானது | 1250 |
| 2016/17 முடிவடையும் ஆண்டுக்கானவை | 120 |
| | 1520 |

**மேலதிக தகவல்கள்:**

1) 31.03.2015 முடிவடைந்த ஆண்டு நிலுவை தொடர்பாக கிடைக்கப் பெறாத சந்தா ரூபா 50000; 31.03.2016 வரை கிடைக்கப் பெறாமையால் பதிவழிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

2) 31.03.2016 இல் உள்ளபடி நிலுவைச் சந்தா மீதி 100000 ஆகும்.

31.03.2016 இல் மேற்படி கழகத்தின் திரண்ட நிதியில் சந்தா கணக்கு தொடர்பில் ஏற்பட்ட அதிகரிப்பு

1. ரூபா 1300 000 2. ரூபா 1250000 3. ரூபா 1450 000
4. ரூபா 1350 000 5. ரூபா 105000

**14) மது,தனு, பானு ஆகியோர் இலாபநட்டத்தைச் சமனாகப் பங்கிட்டு பங்குடமையொன்றை நடத்தி வருகின்றனர். 2016 மார்ச் 31 இல் மது பங்குடமையிலிருந்து இளைப்பாறினார். இத்தினத்தில் வியாபாரத்தின் நன்மதிப்பு மூலதனக்கணக்கின் ஊடாகச் சீராக்கப்பட்டது. தனுவும், பானுவும் வியாபாரத்தைத் தொடர்ந்தும் கொண்டு நடத்தத் தீர்மானித்தனர்.**

| மூலதனக் கணக்கு மீதிகள் | தனு (ரூபா) | பானு (ரூபா) |
|---|---|---|
| சீராக்கத்திற்கு முன்னரான நன்மதிப்பு | 2000000 | 1500000 |
| சீராக்கத்திற்கு பின்னரான நன்மதிப்பு | 1600000 | 1400000 |

மது பங்குடமையில் இருந்து இளைப்பாறும் போது பங்குடமையின் மொத்த நன்மதிப்புத் தொகை என்ன?

1. ரூபா 100000 2. ரூபா 25000 3. ரூபா 500 000
4. ரூபா 750000 5. ரூபா 1500000

**15) சண்முகா, விதுஷா ஆகியோர்களின் பங்குடைமை உடன்படிக்கையில் மூலதன மீதிகளுக்கான வட்டி தவிர இலாபப் பகிர்வு தொடர்பில் எதுவித உடன்படிக்கைகளும் இருக்கவில்லை. 2016 மார்ச் 31 இல் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.**

| | | ரூபா 000 |
|---|---|---|
| வருடத்திற்கான இலாபம் | | 400 |
| வருடத்திற்கான மூலதன வட்டி | -சண்முகா | 80 |
| | -விதுஷா | 120 |
| வருடத்திற்கான பற்றுக்கள் | -சண்முகா | 50 |
| | -விதுஷா | 40 |
| 2015.04.01 இல் நடைமுறைக்கணக்கு மீதிகள் | | |
| | -சண்முகா | 60 |
| | -விதுஷா | 100 |
| 2016.03.31 இல் மூலதனக் கணக்கு மீதிகள் | | |
| | -சண்முகா | 800 |
| | -விதுஷா | 1200 |

2016 மார்ச் 31 இல் விதுஷாவின் நடைமுறைக்கணக்கு மீதியும் இத் தினத்தில் பங்குடமை வியாபாரத்தின் மொத்த உரிமையாண்மையும் முறையே

1. ரூபா 140000, ரூபா 2000000 2. ரூபா 1600000, ரூபா 2160000
3. ரூபா 180000, ரூபா 2270000 4. ரூபா 280000, ரூபா 2470000
5. ரூபா 300000, ரூபா 2560000

**16) வரையறுக்கப்பட்ட மதுசன் பொதுக் கம்பனியின் 31.03.2016 முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் கம்பனியின் இயக்குநர்களினால் 15.05.2016 இல் அதிகாரமளிக்கப்பட்டுள்ளன. கம்பனியின் வருடாந்த பொதுக்கூட்டமானது 31.05.2016 இல் இடம்பெறும். பின் வரும் நிகழ்வுகள் 31.03.2016 இற்குப் பின்னர் கம்பனியில் இடம்பெற்றுள்ளன.**

A.30.03.2016இல்சாதாரணபங்கொன்றிற்குரூபா6இறுதிப்பங்குலாபமாகப்பிரகடனப்படுத்தப்பட்டது.

B.31.03.2016 இற்கு முன்னர் கம்பனிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குத் தொடர்பாக 01.05.2016 நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டு நட்டஈடு செலுத்தப்படல் வேண்டும்.

C.31.03.2016 இல் ரூபா 800000 தர வேண்டிய கடன்பட்ட ஒருவர் 20.06.2016 இல் முறிவடைந்தவராக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்.

D. 31.03.2016 இல் ரூபா 400000 கிரயமுடைய இருப்பினை 10.05.2016 இல் ரூபா 360000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.

கம்பனியின் 31.03.2016 இல் முடிவடையும் நிதிக்கூற்றுக்களில் LKAS 10 (அறிக்கையிடல் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள்) இன்படி மேலே காணப்படும் எந்த நிகழ்வுகள் சீராக்கம் செய்யப்படத் தேவையில்லை.

1.A,C மாத்திரம் 2. B, D மாத்திரம் 3.A, B, C மாத்திரம்
4. B,C,D மாத்திரம் 5.A, B, C, D ஆகிய எல்லாம்.

17) LKAS 37 (ஏற்பாடுகள், நிகழ்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழ்தக்க சொத்துக்கள்) இற்கமைய கம்பனியொன்றின் நிதிநிலைமைக் கூற்றில் ஏற்பாடாக எது இனங்காணப் படுவதில்லை?

A-விற்பனை உத்தரவாதக் கோரிக்கைக்கான ஏற்பாடு
B-நடைமுறை அல்லாத சொத்துக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு
C- ஐயக்கடனுக்கான ஏற்பாடு
D- ஊழியர்களினால் கோரப்படும் இழப்பீட்டுத் தொகையொன்றுக்கான ஏற்பாடு
1. A,B ஆகியன மாத்திரம் 2. B, C ஆகியன மாத்திரம் 3.C,D ஆகியன மாத்திரம்
4. B,C,D ஆகியன மாத்திரம் 5. A, B, C, D ஆகியன எல்லாம்.

18) 31 மார்ச் 2016 முடிவடைந்த ஆண்டுக்கு ஆதனம், பொறி, உபகரணம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு,

| | கிரயம் | திரண்டதேய்வு |
|---|---|---|
| | (ரூபா 000) | (ரூபா 000) |
| தொடக்கமீதி | 250 | 120 |
| சேர்த்தல் | 150 | 40 |
| அகற்றல் | (100) | (80) |
| இறுதி மீதி | 300 | 80 |

புதிய ஆதனம், பொறி, உபகரணம் காசிற்கு கொள்வனவு செய்யப்பட்டது. அத்துடன் ரூபா 20000 இலாபத்தில் ஆதனம், பொறி, உபகரணமொன்று விற்பனை செய்யப்பட்டது. LKAS 7 இற்கமைய காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் காட்டப்படும் தேறிய காசுப்பாய்ச்சல் எவ்வளவு?

1. ரூபா 90000 வெளிப்பாய்ச்சல் 2. ரூபா 110000 வெளிப்பாய்ச்சல்
3. ரூபா 130000 உட்பாய்ச்சல் 4. ரூபா 150000 உட்பாய்ச்சல்
5. ரூபா 110000 உட்பாய்ச்சல்

19) பின்வரும் தகவல்கள் சரண்யா பொதுக்கம்பனியொன்றின் 31.03.2016 இல் முடிவடைந்த ஆண்டுடன் தொடர்பானவை

| | (ரூபா 000) |
|---|---|
| மொத்த வருமானம் (மோட்டார் வாகனம் அகற்றலின் போது ஏற்பட்ட ரூபா 500000 இலாபம் உட்பட) | 8000 |
| வருட இறுதியிலுள்ள இருப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு | 1500 |
| வருட இறுதியிலுள்ள கடன்பட்டோரில் ஏற்பட்ட குறைவு | 2000 |
| வருட இறுதியில் கடன்கொடுத்தோரில் ஏற்பட்ட அதிகரிப்பு | 2500 |

31.03.2016 இல் முடிவடைந்த ஆண்டுக்கான செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் எது?

1. ரூபா 500000 2. ரூபா 1500 000 3. ரூபா 5500 000
4. ரூபா 6000 000 5. ரூபா 6500 000

20) வரையறுக்கப்பட்ட தர்சிகா பொதுக்கம்பனியொன்றின் 2016.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஆதனம், பொறி, உபகரணம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு,

| | (ரூபா 000) |
|---|---|
| இயந்திர விற்பனை இலாபம் | 1800 |
| காணி மீள் மதிப்பீட்டு மிகை | 1200 |
| ஆதனம், பொறி, உபகரணத்திற்கான தேய்வு | 2400 |

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் காணியை மீள் மதிப்பீடு செய்த போது ரூபா 800000 நட்டம் ஏற்பட்டு அக்காலப்பகுதிக்கான வருமானக்கூற்றில் செலவீனமாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி கொடுக்கல் வாங்கல் மற்றும் நிகழ்வுகள் காரணமாக 2016.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் ஆண்டுக்கான இலாபத்திலும், ஆண்டுக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானத்திலும் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு

| | ஆண்டுக்கான இலாபம் (ரூபா) | ஆண்டுக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் (ரூபா) |
|---|---|---|
| 1. | 600000 | 600000 |
| 2. | 200000 | 600000 |
| 3. | 600000 | 1200000 |
| 4. | 1800000 | 800000 |
| 5. | 200000 | 12000000 |

21) வரையறுக்கப்பட்ட சாரங்கன் பொதுக்கம்பனியொன்றின் 2016.03.31 இலும் 2015.03.31 இலும் எடுக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு

| | 2016.03.31 | 2015.03.31 |
|---|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 9400 | 8400 |
| நிறுத்தி வைத்த வருமானம் | 1400 | 700 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 600 | ---- |

◆2016.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டில் 10000 சாதாரண பங்குகள் பங்கொன்று ரூபா 100 விலையில் உரிமை வழங்கல் செய்து பணம் பெறப்பட்டது.
◆சாதாரண பங்குதாரருக்கு இடைக்கால பங்கு இலாபமாக ரூபா 120000 செலுத்தப்பட்டது.
◆ஆதனம், பொறி, உபகரணங்கள் முதல் தடவையாக கடந்த ஆண்டில் மீள் மதிப்பீடு செய்த போது ரூபா 200000 நட்டம் ஏற்பட்டு வருமானக்கூற்றில் ஒரு செலவீனமாக காட்டப்பட்டுள்ளது. அத்துடன் அதே சொத்தினை மீண்டும் மீள் மதிப்பீடு செய்த போது ஏற்பட்ட மிகையே மீள் மதிப்பீட்டு ஒதுக்கமாகக் காட்டப்பட்டுள்ளது. இது ஏற்கனவே சரியாகப் பதியப்பட்டுள்ளது.
கம்பனியின் 2016.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டில் மொத்த முற்றும் அடங்கிய வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு யாது?

1. ரூபா 1420000 2. ரூபா 600000 3. ரூபா 820000
4.ரூபா 71 0000 5. ரூபா 1220000

22) வரையறுக்கப்பட்ட தீபிகா பொதுக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களிலிருந்து கணிக்கப்பட்ட கணக்கீட்டு விகிதங்கள் பின்வருமாறு,

A- கடன் உரிமையாண்மை விகிதம்
B- மொத்த சொத்து மீதான வருவாய் வீதம்
C- வட்டிக்காப்பு விகிதம்
D- கடன் விகிதம்
E- உரிமை மீதான திரும்பல் வீதம்
மேற்படி விகிதங்களில் நிதியின் உறுதித்தன்மையினை அளவிடப்பயன்படும் விகிதங்கள் எவை?
1. A, B, C மாத்திரம் 2.A, C, D மாத்திரம் 3. A, C, E மாத்திரம்
4.C, D, E மாத்திரம் 5.A, B, C, D, E எல்லாம்

23) நிறுவனமொன்றின் நடைமுறை விகிதமானது விரைவு விகிதத்தின் இருமடங்காக இருக்கும் போது பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

1. இறுதி இருப்பானது நடைமுறைச் சொத்துக்களின் அரைவாசிக்கு சமன்
2. நடைமுறைச் சொத்தானது நடைமுறைப் பொறுப்புக்களின் அரைவாசிக்குச் சமன்
3. நடைமுறைப் பொறுப்புக்களானது நடைமுறைச் சொத்துக்களின் இரண்டு மடங்காகும்.
4. நடைமுறைச் சொத்துக்களானது நடைமுறைப் பொறுப்புக்களின் இரண்டு மடங்காகும்.
5. இறுதி இருப்புநீங்கலான நடைமுறைச் சொத்துக்கள் இறுதி இருப்பின் இரண்டு மடங்காகும்.

24) வரையறுக்கப்பட்ட சந்தோஸ் உற்பத்திக் கம்பனியொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தகவல்கள் பின்வருமாறு

| | (ரூபா 000) |
|---|---|
| நேர் மூலப்பொருள் | 180 |
| நேர்க்கூலி | 220 |
| பாதிப்பட்ட மேந்தலைக்கிரயம் | |
| உற்பத்தி திணைக்களம் | 240 |
| சேவைத் திணைக்களம் | 120 |

◆உற்பத்தி செய்த அலகுகளின் எண்ணிக்கை 50000 அலகுகள்
◆பாதிக்கப்பட்ட இயந்திர மணித்தியாலயங்கள் 60000
◆அலகொன்றுக்கான பாதிப்பட்ட இயந்திர மணித்தியாலம் 4 மணித்தியாலம்
இயந்திர மணித்தியாலமொன்றுக்கான மேந்தலை உறிஞ்சுதல் வீதமும், அலகொன்றுக்கான உற்பத்திக் கிரயமும் பின்வருவனவற்றுள் எது?

| | இயந்திர மணித்தியாலமொன்றுக்கான மேந்தலை உறிஞ்சுதல் வீதம் (ரூபா) | அலகொன்றுக்கான உற்பத்திக்கிரயம் (ரூபா) |
|---|---|---|
| 1 | 4 | 24 |
| 2 | 9 | 44 |
| 3 | 24 | 104 |
| 4 | 6 | 32 |
| 5 | 24 | 32 |

25)உற்பத்தி பொருளொன்றின் முதன்மைக் கிரயமானது பின்வருவனவற்றுள் எவற்றின் கூட்டுத்தொகைக்குச் சமனாகும்?

1.நேர்க்கிரயம் மற்றும் உற்பத்தியல்லா மேந்தலைகள் 2.நேர்க்கிரயம் மற்றும் நேரில் கிரயம்
3. உற்பத்தி மேந்தலை நீக்கிய உற்பத்திக்கிரயம்
4. பயன்படுத்திய மூலப்பொருள் மற்றும் உற்பத்தி மேந்தலை
5.நேர்க்கிரயம் நீக்கிய உற்பத்திக்கிரயம்

26) உருப்படியொன்றின் உற்பத்தித் தொகையானது ( Q ) அதிகரிக்கும் போது அதன் அலகொன்றுக்கான நிலையான கிரயமானது.

1) மாறாதிருக்கும் 2) குறைவடையும்
3) நிலையான தொகையொன்றினால் அதிகரிக்கும்
4) நிலையான தொகையொன்றினால் குறைவடையும் 5) அதிகரிக்கும்

27) சிக்கன கட்டளைத் தொகையினைத் (EOQ) தீர்மானிக்கும் கிரயங்கள் பின்வருவனவற்றுள் எது/ எவை?

A-நிலையான கிரயம் B-மாறும் கிரயம் C-அரைப்பகுதி மாறும் கிரயம்
C-கட்டளைக்கிரயம் E-இருப்புவைத்தல் கிரயம்
1.A மாத்திரம் 2.B மாத்திரம் 3.A,B,C மாத்திரம் 4. C, D, E மாத்திரம் 5.D,E மாத்திரம்

28)உற்பத்தி நிறுவனமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தொடர்பான தகவல்கள் (31.03.2016 முடிவடைந்த ஆண்டுக்கானது)

| | |
|---|---|
| மொத்த உற்பத்திக்கிரயம் | ரூபா 400000 |
| குறைவேலை இருப்பில் குறைவு (31.03.2016 இல்) | ரூபா 45000 |
| பயன்படுத்திய மூலப்பொருட்கிரயம் | ரூபா 25 0000 |

உற்பத்தி மேந்தலைக்கிரயத்தில் 50% நேர்க்கிரயமாகும். 31.03.2016 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முதன்மைக்கிரயம், உற்பத்தி மேந்தலைக்கிரயம் என்பன முறையே

1. ரூபா 285000, ரூபா 70000 2. ரூபா 35000, ரூபா 70000
3.ரூபா 25000, ரூபா 7000 4. ரூபா 28500, ரூபா 355000
5. ரூபா 285000, ரூபா 355000

29) பின்வரும் தகவல்கள் X என்ற பொருளுடன் தொடர்புபட்டவை ஆகும். இதன் எதிர்பார்த்த விற்பனையில் மொத்தப்பங்களிப்பு யாது?

நிலையான மேந்தலைகள் ரூபா 400000
பாதுகாப்பு எல்லைப் பெறுமதி ரூபா 200000
பங்களிப்பு விற்பனை 40%

1. ரூபா 200000
2. ரூபா 240000
3. ரூபா 400000
4. ரூபா 480000
5. ரூபா 600000

30) வரையறுக்கப்பட்ட NEC பொதுக்கம்பனி புதிய மோட்டார் வாகனமொன்றை கொள்வனவு செய்யத் தீர்மானிக்கின்றது. இவ் மோட்டார் வாகனத்தினை கொள்வனவு செய்யப் படுமாயின் பாவனையிலுள்ள மோட்டார் வாகனத்தினை ரூபா 400000 இற்கு விற்பனை செய்ய முடியும். புதிய மோட்டார் வாகனத்தின் பயன்தரு ஆயுட்காலம் 4 வருடங்களாகும். இது தொடர்பான மற்றைய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| | (ரூபா 000) |
|---|---|
| மோட்டார் வாகனத்தின் கொள்விலை | 1200 |
| நிர்மாணிப்புக்கிரயம் | 100 |
| 4 ஆம் வருட முடிவில் எஞ்சிய பெறுமதி | |
| ஆரம்பத்தில் தேவைப்படும் தொழிற்படு மூலதனத்தில் அதிகரிப்பு | 200 |
| வருடாந்தம் எதிர்பார்க்கப்படும் காசு உட்பாய்ச்சல் | 480 |

(பழைய மோட்டார் வாகனத்தின் தொழிற்படு மூலதனம் ரூபா 100000 ஆகும். தொழிற்படு மூலதனம் முழுவதும் ஆயுட்கால முடிவில் தேறும் எனக் கொள்க)
மேற்கூறிய தகவல்களின் அடிப்படையில் ஆரம்ப முதலீடு, 4 ஆம் வருடத்திற்கான மொத்தக் காசு உட்பாய்ச்சல் முறையே

1. ரூபா 1100000, ரூபா 1020000 2.ரூபா 1000000, ரூபா 10200000
3. ரூபா 1100000, ரூபா 920000 4.ரூபா 1020000, ரூபா 1100000
5.ரூபா 1000000, ரூபா 1120000

◆31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைப் புள்ளிக் கோடுகளில் எழுதுக.

31)பின்வரும் கூற்றுக்கள் நிறுவனமொன்றின் நிதிக்கணக்கீட்டின் தொடர்புடைய தாயின் சரி எனவும் தொடர்பற்றதாயின் பிழை எனவும் குறிப்பிடவும்.

| | கூற்றுக்கள் | சரி/பிழை |
|---|---|---|
| A | இது நிறுவன உள்ளக, வெளியக கட்சியினர் தீர்மானம் எடுப்பதற்கான தகவல்களை வழங்குகின்றது. | |
| B | இது நிறுவனத்தின் நிகழ்கால, எதிர்காலத்தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. | |
| C | பணரீதியாக அளவிடக்கூடிய கொடுக்கல்வாங்கல்கள் மட்டுமே நிறுவனத்தின் புத்தகங்களில் பதியப்படும். | |
| D | இக் கணக்கீட்டின் அடிப்படையிலேயே குறித்த நோக்கம் கொண்ட நிதிக் கூற்றுக்கள், பொது நோக்கம் கொண்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றது. | |

32) 2016.04.01 இல் டினேஸ் வணிக வியாபாரம் ரூபா 300000 மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. ஏப்ரல் மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் 2016.04.30 இல் உள்ளபடி நிலைமை பின்வருமாறு,

| | ரூபா |
|---|---|
| தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு | 84000 |
| பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு | 36000 |
| ஏப்ரல் மாதம் உழைக்கப்பட்ட மொத்த வருமானம் | 260000 |

ஏப்ரல் மாதத்தில் உரிமையாளர் மேலதிக மூலதன மிடுதலோ, பற்றுதலோ எவையும் இடம்பெறவில்லை.
அ.ஏப்ரல் மாத வருமானத்தை உழைப்பதற்கான மொத்தச் செலவுகள்--------------
ஆ.2016.04.30 இல் உள்ளபடி மொத்தச் சொத்துக்கள்------------------------

(மிகுதி நாளை வெளிவரும்)








# சிறுவர் அரங்கம்

1467

## கிளி என்ன சொல்லிச்சு!



ஒரு தென்னை மரத்தில் காகம் ஒன்று அமர்ந்து, "கா, கா" என்று உற்சாகமாகக்கத்திக் டிருந்தது. காகத்தின் அருகே ஒரு பஞ்ச வர்ணக்கிளி சென்று அமர்ந்தது. "என்ன காக்கையாரே! உமது இறக்கையைப் பார்க்கும்போது எனக்குச் சிரிப்புதான் வருகிறது. இவ்வளவு அழகில்லாத அருவருப்பைத் தரக் கூடிய இறக்கையை நீர் பெற்றிருக்கிறீரே, உமக்கு வெட்கமாக இல்லையா?" என்று கிளி ஏளனமாகக் கேட்டது.

"நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? கருப்பு நிறம் சிறப்பானதுதான். மற்ற நிறங்கள் எவ்வளவு உயர்ந்தவை என்பதை ஒப்பு நோக்கிப் பார்ப்பதற்காகத்தான் கருப்பு நிறத்தைக் கடவுள் உண்டாக்கியிருக்க வேண்டும். இப்போது எனது இறக்கையால் உமது இறக்கையின் அழகு சிறப்பு பளிச்சென்று தெரிகிறது அல்லவா?" என்று தன் இறகின் அழகைத் தானே பாராட்டிக் கொண்டது காகம்.

அந்தச் சமயத்தில், ஒரு புறா அந்தப் பக்கமாக வந்து அவர்கள் அருகே அமர்ந் தது.

"என்ன நீங்கள் இரண்டு பேரும் ஏதோ சர்ச்சையில் ஈடுபட்டு இருக் கிறீர்கள் போலிருக்கிறதே!" என்று புறா கேட்டது.

"நல்ல நேரத்தில் நீங்கள் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். எங்கள் இரு வருடைய இறக்கையின் அழகைப் பாருங்கள். எங்கள் இருவரில் யாருடைய இறக்கை அழகாக இருக்கிறது? நீங்களே தீர்ப்பளியுங்கள்!" என்று புறாவைக் கேட்டுக் கொண்டது பஞ்சவர்ணக்கிளி.

"உண்மையில் கொஞ்சம்கூட அறிவுக்குப் பொருத்தமில்லாத சர்ச்சை இது. கடவுள் உலகத்தில் உயிரினங்களுக்கான எந்த உறுப்பையும் பயன் இல்லாமல் சிருஷ்டிப்பதில்லை. ஒவ்வொருவருடைய உடல் உறுப்புக்களும் ஒவ்வொரு வகையில் சிறந்தனவாக, அழகானவைகளாகவே இருக்கும். பஞ்சவர்ணக் கிளியே! உனது இறக்கை பார்க்க அழகாக இருக்கலாம். ஆனால், காகம் போன்று அவ்வளவு விரைவாகவும், ஒரே சமயத்தில் நீண்ட தூரம் பறக்கவும் உன்னால் முடியாது. "கோடை நாளில் உன் இறக்கைகள் உனக்கு அதிகப்பயன் தருவதாக இருக்கக்கூடும். குளிர், மழைக் காலத்திலோ, காக்கையின் இறக்கைகள் தாம் மிகவும் பயனுடையதாக இருக்கும். உயிரினங்களின் உறுப்பு அழகைப் பற்றி மட்டுமே பேசக்கூடாது. அவற்றின் பயன்பற்றித்தான் பேச வேண்டும். பயன் இல்லாதவை என்று உலகத்தில் எதுவுமே இல்லை. அவ்வாறு பயன் உள்ள உறுப்புகளை நமக்கு அளித் தமைக்காக நாம் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும்!" என்று புறா கூறிற்று. அதைக் கேட்டதும் புத்தி தெளிந்து தன் ஆணவத்தை விட்டொழித்தது பஞ்சவர்ணக்கிளி.

06.2016
27

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1358 - துப்ரோவ்னிக் குடியரசு அமைக் கப்பட்டது.
- 1709 - ரஷ்யாவின் முதலாம் பியோத்தர் பொல்டாவா என்ற இடத்தில் சுவீடனின் பன்னிரண்டாம் சார்ல்சின் படைகளை வென்றான்.
- 1801 - கெய்ரோ நகரம் பிரித்தானியப் படையின ரிடம் வீழ்ந்தது.
- 1806 - புவனஸ் அயரசை பிரித்தானியர் கைப்பற்றினர்.
- 1896 - ஜப்பான், சன்ரிக்கு என்னுமிடத்தில் நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை கார ணமாக 27,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1950 - கொரியப் போரில் பங்கு பற்றவென ஐக்கிய அமெரிக்கா தனது படைகளை அனுப்ப முடிவு செய்தது.
- 1954 - இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.
- 1954 - உலகின் முதலாவது அணுக்கரு ஆற்றல் உற்பத்தி மையம் மொஸ்கோவுக்கு அருகில் ஒப்னின்ஸ்க் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டது.
- 1957 - லூசியானா, மற்றும் டெக்சாசில் நிகழ்ந்த சூறாவளியில் 500 பேருக்கு மேல் கொல்லப பட்டனர்.
- 1967 - உலகின் முதலாவது ஏடிஎம் (ATM) லண்டன் என்ஃபீல்டில் அமைக்கப்பட்டது.
- 1974 - அமெரிக்க அதிபர் ரிச்சார்ட் நிக்சன் சோவியத் ஒன்றியத்துக்கு பயணம் மேற் கொண்டார்.
- 1977 - சிபூட்டி பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1979 - முகமது அலி குத்துச்சண்டையில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
- 1991 - சுலோவீனியா தனது விடுதலையை அறிவித்த இரண்டாம் நாளில் யுகோஸ் லாவியா அதன் மீது படையெடுத்தது.
- 1998 - கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டது.
- 2007 - டோனி பிளேர் பிரதமர் பதவியைத் துறந்ததைத் தொடர்ந்து கோர்டன் பிறௌன ஐக்கிய இராச்சியத்தின் பிரதமரானார்.

### பிறப்புகள்

- 1880 - ஹெலன் கெல்லர், அமெரிக்கப் பெண் எழுத்தாளர். (இ. 1968)
- 1922 - அகிலன், தமிழில் ஞானபீட விருது பெற்ற முதல் எழுத்தாளர்.
- 1927 - டொமினிக் ஜீவா, ஈழத்தின் எழுத் தாளர், இதழாசிரியர்.

### இறப்புகள்

- 1999 - ஜோர்ஜ் பப்படபவுலஸ், முன்னாள் கிரேக்க அரசுத் தலைவர் (பி. 1919)
- 2007 - டி. எம். தியாகராஜன், கருநாடக இசைக் கலைஞர். (பி: 1923)
- 2009 - **இ. முருகையன், ஈழத்துக் கவிஞர்.** (பி. 1935)

## இ.முருகையன்



இ. முருகையன் ஈழத்தின் முன்னணிக் கவிஞர்களுள் ஒருவர். 1950 முதல் கவிதை எழுதும் முருகையன் ஏராளமான கவிதை கள், சில காவியங்கள், மேடைப் பாநாடகங் கள், வானொலிப் பாநாடகங்களை எழுதி யுள்ளார். திறனாய்வுக் கட்டுரைகள், கவிதை மொழிபெயர்ப்பு என்பவற்றிலும் ஈடுபட்டுள்ளார். 1964 - 1965 காலப் பகுதியில் வெளிவந்த நோக்கு என்ற காலாண்டுக் கவிதை இதழின் இணை யாசிரியராகவும் பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாண மாவட்டம், தென்மரா ட்சியில் கல்வயல் கிராமத்தில் தமிழாசிரியர் இராமுப்பிள்ளைக்கும் செல்லம்மாவுக்கும் மூத்த புதல்வனாகப் பிறந்தவர் முருகையன். முருகையன் தனது ஆரம்பக் கல்வியை கல்வயல் சைவப்பிரகாச வித்தி யாசாலையிலும், இடை நிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூ ரியிலும், யாழ் இந்துக் கல்லூரியிலும் கற்றார். வித்துவான் க. கார்த்தி கேசுவிடம் தமிழ் கற்ற முருகையன் உயர் கல்வியை இலங்கைப் பல் கலைக்கழகத்தில் கொழும்பு வளாகத்தில் பயின்று 1956 ஆம் ஆண்டில் விஞ்ஞானப் பட்டதாரியானார். பின்னர் 1961 ஆம் ஆண்டில் இலண் ட னில் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றார், 1985 இல் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவரது இலக்கியப் பணியைப் பாராட்டி முனைவர் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் 1956 இல் விஞ்ஞான ஆசிரியப் பணியைத் தொடங்கிய முருகையன், அரச மொழித் திணைக்களத்தில் மொழி பெயர்ப்பாளராகவும், பாடநூல் வெளியீட்டுத் திணைக்களத்தில் முதன்மைப் பணிப்பாளராகவும், கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக்கல்லூரியில் விரிவுரையாளராகவும், முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப் பாண மாவட்டங்களில் கல்விப் பணிப் பாளராகவும் பணியாற்றினார். இறுதியாக, 1986 இல் யாழ். பல் கலை க்கழ்கத்தில் முதுதுணை பதிவாளராகப் பணியாற்றி 1995 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். தேசிய கலை இலக்கியப்பேரவையின் தலை வராயிருந்த இ.முருகையன் அப்பேரவையின் தொடக்க காலத்தி லிருந்தே பங்கெடுத்து வந்ததுடன் தேசிய கலை இலக்கியப் பேரவையின் சஞ்சிகையான தாயகம் இதழின் ஆசிரி யர் குழுவில் அங்கம் வகித்தார். இலங்கை அரசினால் எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் அதிஉயர் விரு தான சாகித்திய இரத்தினம் விருது 2007 ஆம் ஆண்டில் வழங்கபபட்டது.

### பொறுப்புக்கூறல் விடயத்தில் தொடர்ந்து

# ஐ.நாவின் அழுத்தத்தை எதிர்பார்க்க முடியாது

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜெனிவாவில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ.நா. சபையோ, சர்வதேச சமூகமோ இலங்கை அரசுக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கும் என எதிர்பார்க்க முடியாதிருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜெனிவாவில் தெரிவித்துள்ளார்.**



சர்வதேச சமூகம் ராஜபக்ஷவையோ ஒரு கொடூரமானவராகப் பார்த்தது. அவரது ஆட்சி மாற்றத்தைத்தான் சர்வதேசம் விரும்பியது.

தமிழர் பிரச்சினையை அடிப்படையாக வைத்தே இலங்கை அரசு மீது அப்போது அழுத்தம் கொடுக்கப்பட்டது. இப்போது அந்த நிலை மாற்றமடைந்து விட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 32 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை குறித்த மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் வாய்மூல அறிக்கை வெளியிடப்படவுள்ள நிலையில் ஜெனிவா சென்றுள்ள கஜேந்திரகுமார், அங்கு இடம்பெறும் பக்க நிகழ்வுகளில் கலந்து கொள்வதுடன், மனித உரிமை அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு ஹியூமன் ரைட் வோச் அமைப்பின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்திய கஜேந்திரகுமார், "சர்வதேச சமூகம் மகிந்த ராஜபக்ஷவையே ஒரு கொடூரமானவராகப் பார்த்தது.

அவர் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நிலை வந்திருந்தாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய பதில் கொடுக்கப்படவில்லை.

முழுமையான பொறுப்புக்கூறலும், நிரந்தரமான அரசியல் தீர்வும்தான் இன்று அவர்களுக்குத் தேவை" எனச் சுட்டிக்காட்டினார்.

இதன் அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷ அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. ஆனால், ஆட்சி மாறிய பின்னர் அவ்வாறான அழுத்தம் கொடுக்கப்படவில்லை.

ஆனால், இதுவரையில் முழுமையான பொறுப்புக்கூறலுக்கான ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. அரசியல் தீர்வுக்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஐ.நா. செயற்படும் என எதிர்பார்க்க முடியாதுள்ளது. மேற்கு நாடுகளின் அரசுகள் அவ்வாறு செயற்படும் நிலைப்பாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை.

அரச சார்பற்ற நிறுவனங்களும் மனித உரிமை அமைப்புக்களுமே இந்தப் பிரச்சினையை இப்போதும் முன்னெடுத்து வருகின்றன எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விளக்கியிருக்கின்றார்.

இதேவேளையில், நாளை செவ்வாய்க்கிழமை ஜெனிவாவில் நடைபெறவுள்ள பக்க நிகழ்வு ஒன்றில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.


இதில் கஜேந்திரகுமாரும் பங்குகொள்வார் எனத் தெரிகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கை நாளை மறுதினம் புதன்கிழமை வெளிவரவுள்ளது. (இ-5)

# சஜின் மற்றும் மலிக் ஆகியோருக்கு பாதுகாப்பு வழங்கியமை அம்பலம்

மலிக் சமரவிக்ரம, சஜின் வாஸ் குணவர்தன மற்றும் அவரது மனைவிக்கு, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் பொலிஸ்பாதுகாப்பு வழங்கியது தற்போது அம்பலமாகி உள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

சஜின்வாஸ் குணவர்த்தன, முன்னைய ஆட்சியின் போது பல மோசடி மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளுடன், மத்திய வங்கி ஆளுநர்





அர்ஜுன் மகேந்திரன் தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொண்ட போதே இந்த விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சஜின் வாஸுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கி, பிணையில் விடுதலை செய்ய ஜனாதிபதியும் முயற்சித்துள்ளார் என பிரதிநிதிகளில் ஒருவர் கலந்துரையாடலின் போது தெரிவித்தார்.

இதை வன்மையாக கண்டித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உடனடியாக பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிற்கு அழைப்பினை ஏற்படுத்தி எவ்வாறு பொலிஸ்பாதுகாப்பு வழங்க முடியும் என கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து விரைவில் விசாரணைகள் மேற்கொள்ள இருப்பதாக பிரதி பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

# இலங்கையின் கடல் வலயம் 2020ம் ஆண்டில் அதிகரிக்கும்

இலங்கைக்கு சொந்தமான கடல் வலயம் 2020ம் ஆண்டளவில் மேலும் அதிகரிக்கப்படும் என கடற்றொழில் அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. சர்வதேச கடற்பரப்பிற்கு சொந்தமான கடல் பகுதி இலங்கைக்கு சொந்தமாகவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையை போன்று 60 மடங்கு வரையான கடற்பரப்பு தற்போது இலங்கைக்குச் சொந்தமாக உள்ளது எனவும், எதிர்காலத்தில் மேலும்இலங்கையைப்போன்று 23 மடங்கு கடற்பரப்பு சொந்தமாகும் எனவும் அமைச்சு கூறியுள்ளது.

இந்த விடயம் குறித்து அரசாங்கம், ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருவதாகவும், அந்த கலந்துரையாடல் வெற்றியளித்துள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த நடவடிக்கை எதிர்வரும் இரு வருடங்களுக்குள் நிறைவடையும் எனவும் கடற்றொழில் அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.(இ-5)

## இன்று ஒரு தகவல்

### உங்களைப் பார்த்துப் பொறாமைப் படுகிறார்களா?

மற்றவர்கள் பொறாமைப்படும் அளவிற்கு நாம் வளர வேண்டும் என்பதுதான் பெரும்பாலானவர்களின் விருப்பம்.

நியாயப்படி நம்மைப் பார்த்து பிறர் பொறாமைப்படுவது என்பது நம் கண்கூடான வளர்ச்சியை அல்லது ஏற்கனவே இருக்கும் நல்ல நிலையைக் காட்டுகிறது. இதற்காக நாம் பெருமைப்பட வேண்டும்.

அதேநேரத்தில் மற்றவர்கள் ஏன் அப்படிப் பொறாமைப்படுகிறார்கள் என்பதை ஆராயவும் வேண்டும்.

முன் பின் தெரியாதவர்கள் நம்மைப் பார்த்துப் பொறாமைப்படுவது பற்றிக் கவலையில்லை. ஆனால் சுற்றியிருக்கும் மிக வேண்டிய நண்பர்களை பொறாமைப்பட்டால் அதைப் பற்றிச் சிறிதேனும் சிந்திக்க வேண்டியது அவசியம். முடிந்தால் அவர்களது பொறாமையின் வீரியங்களைக் குறைக்கவேனும் சற்று முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதாவது,

நம் வளர்ச்சியின் அல்லது இருக்கின்ற நிலைமையின் மறுபக்கத்தை அவர்களுக்கு புலப்படுத்த வேண்டும். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் , நாம் படும் கஷ்ட, நஷ்டங்கள், பிரச்சினைகள் ஆகியவற்றை எடுத்துச் சொல்லி நம் நிலைமை தூரத்துப் பச்சை தான் என்பதை சமயம் வரும் போதெல்லாம் உணர்த்த வேண்டும். இந்த நிலைமைக்கு நம் நிலைமை தேவலை போலிருக்கிறது என்பதை அவர்கள் உணர ஆரம்பித்தால் நம்மைச் சுற்றியுள்ளவர்கள் நம்மைப் பார்த்து ஏன் பொறாமைப்படப் போகிறார்கள்?

என்னோடு படித்த நண்பர் ஒருவர் என் வளர்ச்சியைப் பற்றி மிகத் தவறான அபிப்பிராயங்களைப் பரப்பி வருவதைக் கேள்விப்பட்டேன். நம்மோடு படித்தவன் இன்று நான்கு பேர் அறியும் வகையில் இருக்கிறானே என அவரால் மகிழ்ச்சி கொள்ள முடியவில்லை. ஏன் எனச் சிந்தித்தேன். நான் என் வளர்ச்சி வேகத்தில் அவரை மறந்து விட்டேன் எனவும்,நம்மை இவன் மதிக்கவில்லை எனவும் அவராகக் கற்பனை செய்து கொண்டிருக்கிறார்.

ஒரு நாள் அவர் வீட்டிற்குப் போனேன். அவரால் நம்ப முடியவில்லை. பழைய விடயங்களையெல்லாம் புதுப்பித்தபடி பேசிக் கொண்டிருந்தேன். எனக்கும் அவருக்கும் குறுக்கே பெருந்தடையாகவும், சுவராகவும் இருப்பது நேரமே தவிர, செல்வமோ செல்வாக்கோ அல்ல என்பதைத் தெளிவுபடுத்தினேன்.

இப்போது அவர் என்னுடைய விடயத்தில் அடியோடு மாறிவிட்டார். என் காதுக்கு எட்டும்படியாகவே என்னைப் பற்றித் தேவையில்லாமல் புகழ்ந்து தள்ளுகிறார்.

நம் வளர்ச்சியைப் பார்த்து நம்மைச் சுற்றியிருப்பவர்கள் பொறாமைப்படுவதற்குப் பதிலாக பெருமைப்பட வேண்டுமென்றால், நாம் அவர்களுக்குரிய முக்கியத்துவத்தை தர வேண்டும். வளர்ச்சி காரணமாகத் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாகவோ, உதாசீனப்படுத்தப்படுவதாகவோ அவர்களுக்குத் தோன்றும் போது தான் அவர்கள் நம்மீது பொறாமைப்பட ஆரம்பிக்கிறார்கள்.

என்ன செய்தும், எப்படி நடந்தும் பயனில்லை என்று சொல்லும் வகையில் சில பொறாமைப் பேய்கள் நம்மைச் சுற்றி உலவுகின்றன.

இவர்களைப் பற்றிக் கவலையே வேண்டாம். அவர்கள் இரத்தத்தின் ஒவ்வோர் அணுவிலும் பொறாமைத் திசு குடி கொண்டிருக்குமானால் அவர்களைத் திருத்த நாம் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் பயனில்லை.

தங்களுக்குள் தீயை வளர்த்துக் கொண்டு தினம் தினம் கணம் கணம் தங்களைத் தாங்களே தண்டித்துக் கொள்ளும் அவர்களுக்கு நாம் வேறு தண்டனைகளைத் தர வேண்டியதில்லை.

மாறாக, அவர்களுக்காகப் பரிதாபப்படுவோம்.

**லேனா தமிழ்வாணன்**

# பிரிட்டன் விரைவாக வெளியேற வேண்டும்

## ஐரோப்பிய ஆணையம் வலியுறுத்தல்

ஐரோப்பிய யூனியன்-பிரிட்டன இடையிலான பிரிவு சுமுகமானதாக இருக்காது என்றாலும், அது விரைவாக நிகழவிரும்புவதாக ஐரோப்பிய ஆணையத் தலைவர் ஜான்-கிளாட் ஜங்கர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் ஜெர்மன் வானொலியில் கடந்த வெள்ளிக் கிழமை இரவு கூறியதாவது:

ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேற வேண்டும் என்று பொதுவாக்கெடுப்பில் மக்கள் தீர்ப்பளித்த பின்னரும் அதன் செயலாக்கத்தை ஒக்டோபர் மாதம வரை பிரிட்டன் தள்ளி வைத்துள்ளது ஏன் என்று புரியவில்லை.

இந்தப் பிரிவினை சுமுகமானதாக இருக்கப்போவதில்லை.

இருந்தாலும், அது அதிக வலியை ஏற்படுத்தாமல் மிகத் துரிதமாக நிகழ்ந்துவிட வேண்டும் என்பதே என் விருப்பம்.

“பிரெக்ஸிட்”டுக்கு ஆதரவாக பிரிட்டன் மக்கள் வாக்களித்த நாள் ஐரோப்பிய யூனியனுக்கும், பிரிட்டனுக்கும் மிக மோசமான நாள் என்றார் அவர்.

பிரிட்டனில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற பொது வாக்கெடுப்பில், ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேறுவதற்கு ஆதரவாக பிரிட்டன் மக்கள் வாக்களித்தனர்.

இந்த முடிவு வெள்ளிக் கிழமை வெளியானதையடுத்து, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் வரும் ஒக்டோபர் மாதம் பதவி விலகுவதாக அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பொறுப்பேற்கவிருக்கும் புதிய பிரதமர் ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார் எனவும் கமரூன் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இந்திய பிரஜைகள் இருவர் கைது

சட்டவிரோதமான முறையில் மதுபான போத்தல்கள் மற்றும் சிகரெட்டுக்கள் கொண்டு வர முற்பட்ட இரண்டு நபர்களை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் இந்திய பிரஜைகள் என பொலிஸார் தெரிவிதனார்.

சந்தேகநபர்களிடம் இருந்து 72 மதுபான போத்தல்கள் மற்றும் 2100 சிகரெட்டுக்களை மீட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்திய பிரஜைகள் இருவரையும் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 80 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 700 | 700 | 550 | 600 | 1000 | 700 |
| தக்காளி | 280 | 300 | 230 | 200 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 70 | 100 | 80 |
| கோவா | 180 | 300 | 100 | 200 | 160 | 180 |
| கரட் | 250 | 400 | 180 | 160-300 | 300 | 200 |
| பூசணி | 80 | 120 | 90 | 80 | 100 | 70 |
| புடோல் | 120 | 100 | 60 | 70 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 120 | 150 | 200 | 90 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 170 | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 250 | 600 | 180 | 250 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 220 | 100 | 70 | 120 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 140 | 200 | 100 | 120 | 160 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 110 | 150 | 160 | 120 |
| லீக்ஸ் | 160 | 300 | 110 | 140 | 160 | 200 |
| பீற்றூட் | 140 | 200 | 130 | 140 | 200 | 150 |
| கறிமிளகாய் | 350 | 400 | 250 | 240 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 400 | 800 | 600 | 700 |
| போஞ்சி | 250 | 250 | 200 | 180 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 50 | 60 | 60 | — |
| கீரை - 1பிடி | 30 | 50 | 10 | 30 | 20 | 15 |
| தேசிக்காய் | 200 | 300 | 180 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 25 | 40 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 150 | 300 | — | — | 200 | 160 |
| வெங்காயப்பூ | 300 | 300 | — | 250 | 240 | 300 |
| முள்ளங்கி | 80 | 200 | — | 100 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 15 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 100 | 40 | 60 | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## அரசு–விடுதலைப்புலிகள் சமரசப்பேச்சில் முட்டுக்கட்டை 213

### நோர்வே தூதுக்குழு விலகல்

இதற்கிடையே நோர்வே தூதுக்குழுவினர் 5 நாட்களாக நாட்டில் தங்கியிருந்தனர். ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் ஆகியோரை அவர்கள் தனித்தனியே சந்தித்துப் பேசினார்கள்.

நாட்டில் அரசியல் பிரச்சினை நீடிக்கும் வரை சமரச முயற்சி பயன் அளிக்காது என்று நோர்வே தூதுக்குழு கருதியது. இதனால் சமரச முயற்சியில் இருந்து விலகுவதாக 14.11.2003 அன்று அறிவித்தது.

நோர்வே தூதுக்குழுவில் இடம் பெற்றிருக்கும் வெளியுறவு துணை அமைச்சர் விதாஹெல் கேசன் இதுபற்றி கூறும்போது நட்பு அரசியல் சூழ்நிலையில் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது இயலாத காரியம் நாங்கள் நாடு திரும்புவோம் என்றார்.

### பணிந்தார்

நோர்வே தூதுக்குழுவின் இந்த முடிவால், விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற சமரச முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டது. இதனால் ஜனாதிபதி சந்திரிகா தனது பிடிவாதத்தைத் தளர்த்தினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இராணுவ அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள அவர் தயாராக இருப்பதாகச் சந்திரிகாவின் ஆலோசகர் மனோடிட்ட வெல்லா அறிவித்தார்.

அமைதி நடவடிக்கை போர் நிறுத்த நடவடிக்கை போன்ற அனைத்து இராணுவ நடவடிக்கைகளிலும் பிரதமருடன் ஜனாதிபதி நேரடியாக பங்கெடுத்துக்கொள்ள விரும்புகிறார் அமைதிக்கான முயற்சிகள் தொடர வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார் என்றும் அவர் சொன்னார்.

### மாறி இருக்கிறார்கள்

இதற்கிடையே ஜனாதிபதி சந்திரிகா, ஆங்கிலப்பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், 2ஆண்டுகளாக நோர்வே தூதுக்குழு மேற்கொண்ட சமரச முயற்சியால், ஒரு சாதகமான சூழ்நிலை உருவாகி இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டார். விடுதலைப்புலிகள் பற்றி சந்திரிகா குறிப்பிடும்போது, அவர்கள் மாறவில்லை என்று நான் செல்லவில்லை. விடுதலைப்புலிகள் ஏற்கனவே சிறிது தங்களது போக்கை மாற்றிக்கொண்டு பொறுப்புடன் நடந்து வருகிறார்கள் என்றும் வெளிப்படையாகக் கூறினார்.

### சந்திப்பு

நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி குறித்து ஜனாதிபதி சந்திரிக்காவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சந்தித்துப் பேசினார்கள்.

18-11-2003 அன்று இரு தலைவர்களும் மீண்டும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள். அப்போது ஆலேசகர்களும் உடன் இருந்தனர். ஜனாதிபதி சந்திாிகாவின் வீட்டில் இந்தப் பேச்சுவார்த்தை 90 நிமிடங்கள் நடந்தது. இந்தப் பேச்சுவார்த்தையிலும் முக்கிய முடிவுகள் எடுக்கப்படவில்லை.

### ஜனாதிபதி குழு

கூட்டமுடிவில், இரு தலைவர்களின் செயலாளர்கள் வெளியிட்ட அறிக்கையில் கூறி இருந்ததாவது,

ஜனாதிபதி - பிரதமர் இடையே உள்ள பிரச்சினைகள் பற்றி ஆய்வு செய்ய அதிகாரிகள் மட்டத்தில் குழு அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டு உள்ளது. இவர்கள் தேசிய பிரச்சினைகள் பற்றியும், அடுத்தகட்ட பேச்சுவார்த்தைக்கான முன்னோடி பணிகளையும், பேச வேண்டிய பொருள் பற்றியும் ஏற்பாடு செய்வார்கள்.

நாட்டில் உள்ள அரசியல் நெருக்கடியைப் பிரதமரும் ஜனாதிபதியும் பேசி தீர்த்துக் கொள்ள வசதியாக இவர்கள் செயற்படுவார்கள். அதிகாரப் பகிர்வு பற்றியும் இவர்கள் ஆய்வுசெய்வார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது.

### சந்திரிக்கா சமரசம்

இந்த நிலையில் ஜனாதிபதி சந்திரிகா தயாரித்த சமரசத் திட்டம் 28-11-2003 அன்று வெளியிடப்பட்டது.

இந்தச் சமரசத் திட்டத்தின் படி பாதுகாப்பு அமைச்சை மீண்டும் விக்ரமசிங்கவிடம் ஒப்படைப்பது, மேலும் சில அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது என்று குறிப்பிட்டிருந்தது.

பாதுகாப்பு அமைச்சர் பெயரைப் பிரதமர் ரணில் விக்ரம சிங்கே அறிவிக்கலாம், அமைதி பேச்சுவார்த்தை தொடரலாம் என்றும் சமரசத் திட்டத்தில் சந்திரிகா குறிப்பிட்டிருந்தார்.

### ஏற்க மறுப்பு

ஜனாதிபதி சந்திரிக்காவின் இந்தச் சமரசத்தைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் ஏற்க மறுத்துவிட்டார்.

பாதுகாப்பு அமைச்சை அரசிடம் ஒப்டைத்தாலும் ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அமைச்சில் அதிகாரம் உண்டு என்பதால் அந்தச் சமரத்தை ஏற்க விக்ரமசிங்க மறுத்துவிட்டார்.

பாரளுமன்றத் தேர்தலையடுத்து லட்க்ஸ்மன் கதிர்காமர் பிரதமராகப் பதவி ஏற்க இருந்தார். ஆனால் அவர் தமிழர் என்பதால் சிங்களவ ர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதன் காரணமாக, மகிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவி ஏற்றார்.

### பாராளுமன்றம் கலைப்பு

நாட்டில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், ரணில்விக்கிரமசிங்கவுக்கு இடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டி காரணமாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 02-04-2004 அன்று நாட்டில் பாராளுமன்றத் தேர்தல் நடந்தது.

இந்தத் தேர்தலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சியும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியும் களம் இறங்கின.





(தொடரும்)

# அமெரிக்காவின் அச்சுறுத்தலை சமாளிக்கவே அணுஆயுதங்கள்

## வடகொரியா அறிவிப்பு

(பியாங்யாங்)

**அமெரிக்காவின் அச்சுறுத்தல்களை எதிர்கொள் வதற்காகவே அணு ஆயுத பலத்தைப் பெருக்கி வருவதாக வடகொரியா தெரிவித்துள்ளது**

இதுகுறித்து வட கொரிய வெளியுறவுத் துறை அமைச் சகத்தின் அமெரிக்க விவ காரங்களுக்கான பிரிவுத் தலைவர் ஹன் சாங் ரியோல் தெரிவிக்கையில்,

அணு ஆயுதங்களைத் தயாரிப்பதிலும், அணு குண்டு களை வீசுவதற்கான ஆயு தங்களை மேம்படுத்துவதி லும் வட கொரியா தீவிரமாக ஈடுபட்டுள்ளதற்குக் காரணம் அமெரிக்காதான்.

இராணுவ அச்சுறுத்தல், பொருளாதாரத் தடை போன்ற மிரட்டல்களைக் கைவிடாமல், வட கொரியா ஆயுதப் பரிசோதனைகளை நிறுத்த வேண்டும் என்று கூறுவது தலையில் துப்பாக் கியை வைத்து அடிபணியச் சொல்வது போன்றது.

அண்மையில், அணு குண்டுகளை வீசும் திறன் கொண்ட நீர்மூழ்கிக் கப் பல்களையும், போர் விமா னங்களையும் வடகொரிய எல்லையில் அமெரிக்கா நிறுத்தியது.

மேலும் தென்கொரியா வுடன் இணைந்து, வட கொரியா மீது துல்லியமான தாக்குதல் நிகழ்த்துவதற்கான இராணுவப் பயிற்சியை அமெரிக்கா மேற்கொண்டது.


இதுபோன்ற அச்சுறுத் தல்களை எதிர்கொள்ள, அணு ஆயுதங்களையும், அவற்றை அமெரிக்க நிலை களின் மீது வீசக்கூடிய ஏவுகணைகளையும் வட கொரியா உருவாக்கு வதில் எந்தத் தவறும் இல்லை என அவர் மேலும் தெரிவித் தார்.

சர்வதேச நாடுகளின் கடும் எதிர்ப்பினையும் பொருட் படுத்தாது வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றது.

அதேவேளை சர்வதேச நாடுகளின் தடைகளையும் எதிர்கொண்டுள்ளது. (இ-5)

## நாட்டை காட்டிக் கொடுக்க அனுமதிக்கவே முடியாது!

### விமலவீர திஸாநாயக்க தெரிவிப்பு



நாட்டைக் காட்டிக் கொடுப் பதற்கு அனுமதிக்க முடியாது என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன் றுக்கு அளித்த நேர்காண லில் அவர் இதனைத் தெரி வித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் ஆளும் கட்சி யில் இணைந்து கொள்ளப் போவதாக வெளியாகும் தக வல்களில் உண்மையில்லை.

ஆறுமுகன்தொண்டமானோ அல்லது டக்ளஸ் தேவானந் தாவோ இணைந்து கொண் டால் அது கூட்டு எதிர்க்கட்சி இணைந்து கொண்டதாக அமையாது.

ஏனெனில் அவர்கள் கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர் கள் அல்ல, கூட்டு எதிர்க் கட்சியின் செயற்பாட்டு உறுப் பினர்கள் எவரும் இணைந்து கொள்ளமாட்டார்கள்.

புதிய கட்சி அமைப்பதா? இல்லையா? என்பது பற்றி தற்போதைக்கு கருத்து வெளி யிடமுடியாது.

எனினும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் இரா சம்பந்தன் அரசாங்கமொன்றை அமைக்க மாட்டார் என்பது அனைவருக்கும் தெளிவாக விளங்கும் ஓர் விடயமாகும்.

எனவே கூட்டு எதிர்க் கட்சியே இந்த அரசாங்கத் திற்கு எதிரான மாற்று அர சியல் சக்தியாகும்.

மீன் ஏற்றுமதி தடை நீக் கம், ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை பெற்றுக் கொள்ளல் போன்றன நல்லது என்ற போதிலும், மேற்குலக நாடு களுக்கு அடி பணிந்து நாட் டைக் காட்டிக் கொடுக்கக் கூடாது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினாலும் இவ்வாறு சலுகைகளைப் பெற்றுக்கொண்டிருக்க முடி யும்.


எனினும் அவர் அவற் றைப் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை என விமல வீர திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 762

ஈசன்




விதுஷன் லொலிப்பப்




அருள்ராஜ்

பணம் மரத்தில்
காய்க்குமானால்
மனிதன் கோட ரிக்கு
பதிலாக ஏணியை தேர்வு
செய்திருப்பான்...

சஜீ




தர்மா




ராதை




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அர்ஜுன மகேந்திரனும் ரகுராம் ராஜனும்



இலங்கையிலும் இந்தியாவிலும் மத்திய வங்கிகளின் ஆளுநர்களின் பதவிக்காலங்களை நீடிப்பது தொடர்பான விவகாரம் ஏக காலத்தில் பெரிய அரசியல் சர்ச்சைகளாக மாறியிருப்பது உண்மையிலேயே ஒரு விசித்திரமான நிகழ்வுப் பொருத்தமாகும்.

கடந்த வருடம் ஜனவரியில் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தமையையடுத்து அப்போது இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த அஜித் நிவார்ட் கப்ரால் பதவி விலகியபோது அவரின் இடத்திற்கு அர்ஜுன மகேந்திரன் புதிய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டார். பதவிக்கு வந்த மிகக் குறுகிய காலத்துக்குள்ளாகவே பெப்ரவரியில் இடம் பெற்ற மத்திய வங்கியில் முதலாவது பிணைமுறி ஏலத்தில் அர்ஜுனா மகேந்திரனின் மருமகனுக்கு சொந்தமான கம்பெனி தகாத முறையில் அனுகூலம் அடைந்ததாக குற்றச் சாட்டுக்கள் கிளம்பின. இதனை அடுத்து புதிய ஆளுநர் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் பதவி விலக வேண்டும். அல்லது பதவி விலக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் எழுந்தன.

அவருக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுப்பதில் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு விசுவாசமான அரசியல் சக்திகள் தீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருந்தன.

இப்போது பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மத்திய வங்கி ஆளுநருக்கு எதிரான பிரசாரங்கள் உச்ச நிலையில் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அஜித் நிவாட் கப்ராலின் எஞ்சியிருந்த 18 மாத பதவி காலத்திற்கே அர்ஜுன மகேந்திரன் நியமிக்கப்பட்டிருந்தார். அந்த பதவிக்காலம் இம்மாதம் 30 ஆம் திகதியுடன் பூர்த்தியாகின்றது. அதற்குப் பிறகு அவருக்கு பதவி நீடிப்பு வழங்கக் கூடாது என்பதில் எதிரணியின் குறிப்பிட்ட சில சிவில் சமுக அமைப்புக்களினதும் விடாப்பிடியான கோரிக்கையாக இருக்கின்றது. மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை தொடர்ந்து வகிப்பதால் தனக்கு ஆர்வம் இருக்கின்றதா இல்லையா என்பது குறித்து அர்ஜுன மகேந்திரன் எதையுமே கூறுவதாக இல்லை.

ஆனால் அவரைப் போன்றே சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கும் இந்திய மத்திய வங்கியின் ஆளுநர் ரகுராம் ராஜன் எதிர்வரும் செப்டம்பரில் தனது தற்போதைய பதவிக்காலம் முடிவடையும்போது பதவியில் இருந்து இறங்குவதற்கு தீர்மானித்திருப்பதாக அறிவித்து விட்டார்.

இரண்டாவது பதவிக் காலத்தில் தனக்கு நாட்டம் இல்லை என்று அவர் அறிவித்திருப்பதை மிகவும் மோசமான சூழ்நிலையில் இருந்து வெளியே வருவதற்கு அவர் மேற்கொண்ட ஒரு சிறந்ததும் கௌரவமானதுமான முடிவு என்று இந்தியாவின் முன்னணிப் பத்திரிகைகள் பாராட்டியிருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. ரகுராம் ராஜனின் தீர்மானத்திற்கு கொழும்பில் சில பத்திரிகைகள் பெரும் முக்கியத்துவம் கொடுத்திருப்பதன் மூலமாக அர்ஜுன மகேந்திரனுக்கு அவை கூற வரும் செய்தி என்ன என்பதை புரிந்து கொள்வதில் எவருக்கும் சிரமம் இருக்க முடியாது. எதிர்வரும் செப்டம்பர் 4 ஆம் திகதி தனது பதவிக்காலம் முடிவடையும் போது மத்திய வங்கி ஆளுநர் பதவியில் இருந்து விலகி மீண்டும் கல்வித் துறையில் பணியாற்றுவதற்கே செல்லப்போவதாக ரகுராம் ராஜன் மேற்கொண்ட தீர்மானம் துரதிஷ்ட வசமானது என்று பெரும்பாலான இந்திய தேசிய பத்திரிகைகள் வர்ணித்திருக்கின்றன. அவர் ஆளுநராக பதவி ஏற்ற போது உலகின் ஐந்து வலுவற்ற பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்கியதாகவும் அவர் முன்னெடுத்த தீர்மானங்களும் கொள்கை முன்னெடுப்புக்களும் பொருளாதார மீட்சிக்கு வழி வகுத்தன என்றும் அப்பத்திரிகைகள் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

இலங்கையில் அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக பிரதானமாக எதிரணியைச் சேர்ந்த அரசியல் சக்திகளே பிரசாரங்களைத் தீவிரப்படுத்தியிருக்கின்றன. ஆனால் ரகுராம் ராஜனுக்கு எதிராக பழிதூற்றும் பிரசாரத்தை ஆளும் பாரதிய ஜனதாவுக்குள் இருக்கும் சக்திகளே முன்னின்று செய்கின்றன. குறிப்பாக பாரதி ஜனதாவின் எம்.பியும் தான்தோன்றித்தனமாகப் பேசுவதில் பேர் எடுத்தவருமான சுப்பிரமணிய சுவாமியே இப்பிரசாரத்திற்கு தலைமை தாங்குகிறார். அவர் ரகுராம் ராஜனை காங்கிரஸ் கட்சியின் கையாள் என வர்ணித்திருக்கிறார். அத்துடன் இந்துத் தீவிர வாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ். ரகுராம் ராஜனுக்கு எதிராக செய்யும் பிரசாரங்களை பாரதிய ஜனதா ஆதரிப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. பிரதமர் நரேந்திர மோடிக்கு மிகவும் நெருக்கமான அமைச்சர்களில் ஒருவரான நிர்மலா சீதா ராமன் இந்திய பொருளாதாரம் பற்றி ரகுராம் ராஜன் தெரிவித்த ஒரு கருத்தை பகிரங்கமாக கண்டனம் செய்திருக்கிறார்.

இத்தகைய ஆரோக்கியமற்ற அரசியல் சூழ்நிலைகளே பதவியில் இறங்கும் முடிவை அவர் எடுப்பதற்கு நிர்ப்பந்தித்து இருக்கின்றது. நேர்மையற்ற விமர்சனங்களுக்கு எதிராக ரகுராம் ராஜனைப் பாதுகாப்பதற்கு மத்திய அசாங்கம் முன்வரவில்லை என்பது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதொரு அம்சமாகும்.

ரகுராம் ராஜனுக்கான இரண்டாவது பதவிக்காலம் குறித்து கேள்விகள் கேட்கப்படும் போதெல்லாம் பிரதமர் மோடி நழுவல் போக்கான பதில்களையே கூறி வருகிறார். இந்த விவகாரத்தில் இந்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லியும் பகிரங்கமாகக் கருத்துக்களைக் கூறுவதை தவிர்ப்பதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. இந்திய மத்திய வங்கியின் ஆளுநரின் விவகாரம் இவ்வாறு இருக்கையில் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் விவகாரம் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் தலைமையிலான தேசிய ஐக்கிய அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுக்கு அச்சுறுத்தலைத் தோற்றுவிப்பதாக அமைந்திருந்தது.

அர்ஜுன மகேந்திரன் ஐக்கிய நாடுகள் சபைக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் சார்லி மகேந்திரினின் புதல்வராவார். சார்லி மகேந்திரன் இலங்கை ராஜதந்திரி சேவையில் நீண்ட காலம் பணியாற்றியவர். சீன, தென்கொரிய போன்ற நாடுகளிலும் வசித்திருக்கிறார் அர்ஜுன மகேந்தி ரன். சர்வதேச வங்கித்துறை யில் மிகவும் பிரகாசமான செயற்பாடுகளை வெளிக்காட்டியிருந்தவர் என்ற போதிலும் கடந்த வருடம் ஜனவரியில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக இவர் நியமனம் செய்யப்பட்டபோது அதை அங்கீகரித்து நியமனக் கடிதத்தில் கையெழுத்திடுவதில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன பல வாரங்கள் தாமதித்தார் என்பது கவனிக்கத்தக்கது.

முன்னைய அரசாங்கத்துடன் குறிப்பாக கொழும்புபங்குச்சந்தையில் கொடுக்கல் வாங்கல்களில் சந்தேகத்திற்கு இடமான தொடர்புகளைக் கொண்டிருப்பதாக கூறப்படும் கம்பெனி ஒன்றில் பணிப்பாளராக அர்ஜுன மகேந்திரனின் மருமகன் இருந்ததே அவரின் நியமனம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் ஐயுறவுகளுக்கு காரணம் என்று கூறப்பட்டது. இறுதியில் இப்போது கடந்த வருடம் இடம் பெற்ற மத்திய வங்கி பிணைமுறி ஏலத்தில் அர்ஜுன மகேந்திரனின் மருமகனின் கம்பெனி தகாத முறையில் பெரும் அனுகூலம் அடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களே அவரின் பதவி தொடர்பில் பெரும் அரசியல் சர்ச்சைக்கு வழி வகுத்திருக்கின்றது.

கடந்த வருடம் ஆரம்பத்தில் மத்திய வங்கி பிணைமுறி ஏல முறைகேடு தொடர்பில் அரசியல் அரங்கில் குற்றச் சாட்டுக்கள் எழுந்த போது அவை குறித்து விசாரணை செய்வதற்கு பிரதமர் விக்கிர சிங்க மூன்று சட்டத்தரணிகளைக் கொண்ட குழு ஒன்றை நியமித்தார். இந்தச் சட்டத்தரணிகள் ஆளும் கட்சிகளுக்கு நெருக்கமானவர்களது எதிரணியினால் குற்றம் சாட்டப்பட்டது. என்றாலும் அந்தக் குழு அர்ஜுன மகேந்திரனை குற்றம் சாட்டுவதைத் தவிர்த்து பிணைமுறி ஏல விவகாரத்தில் அவரின் மருமகனின் கம்பெனி செயற்பட்டிருக்கக் கூடிய முறை வழமைக்கு மாறானது என்று சுட்டிக் காட்டி அது தொடர்பில் மேலதிக விசாரணை செய்யப்பட வேண்டும் என்று விதந்துரைத்தது.

### ஜனாதிபதியின் ஆட்சேபனை

இந்நிலையில் பாராளுமன்ற தேர்தலுக்கான அறிவிப்பு வந்தது. தேர்தலுக்கு முன்னதாக மத்திய வங்கி ஆளுநர் தொடர்பில் பகிரங்கமாகவே கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, அர்ஜுன மகேந்திரன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்று எந்த அமளியும் இன்றி பதவியில் இருந்து விலக வேண்டும் என்று கூறியிருந்தார்.

இதற்கு முன்னதாக மத்திய வங்கி பிணை முறி ஏலத்தை எதிர்த்த சிவில் சமுக செயற்பாட்டாளர்கள் சிலர் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்தனர். அந்த வழக்கை அந்த நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அர்ஜுனா மகேந்திரனை நியாயப் படுத்துவதற்கு ஒரு பெரிய சான்றாக இந்த வழக்குத் தள்ளுபடியை ஐக்கிய தேசிய கட்சி தூக்கிப் பிடித்தது.

பிணைமுறி சர்ச்சை தொடர்பாக விசாரணை செய்த அரசாங்க நிறுவனங்கள் தொடர்பான பாரளுமன்ற குழுவும் 2015 ஜுனில் அறிக்கை சமர்ப்பித்தது. ஆனால் அந்த மாதமே பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால் அந்த அறிக்கை சபையில் தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்படவில்லை.

மூன்று சட்டத்தரணிகள் கொண்ட குழுவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்ட காலகட்டத்தில் மாத்திரம் ஆளுநர் பதவியில் இருந்து விலகியிருந்த அர்ஜுன மகேந்திரன் தொடர்ந்தும் பதவி வகித்துக் கொண்டேயிருக்கிறார். நாட்டின் வங்கி முறையின் ஒழுங்கமைப்பாளர் என்ற வகையில் அவரின் பதவிக்காலம் ஊழல் தொடர்பிலான சர்சைகள் நிறைந்ததாகவே இருக்கின்றது. மத்திய வங்கியின் பணத்தை தனது ஆடம்பர வாழ்க்கை முறைக்காக அவர் வீணே விரயம் செய்கிறார் என்ற குற்றச்சாட்டு வேறு வந்திருக்கிறது.

2015 இல் பாராளுமன்ற தேர்தலுக்குப் பிறகு புதிதாக நியமிக்கப்பட்ட (ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹிந்து நெட்டி தலைமையிலுள்ள) அரசாங்க நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற குழு(கோப்) அர்ஜுன மகேந்திரனின் பதவிக் காலத்தில் மத்திய வங்கியின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை ஒன்றை தயாரிக்கும் பணியில் இறங்கியிருக்கின்றது. அர்ஜுன மகேந்திரனுக்கு பதவி நீடிப்பு வழங்க வேண்டும் என்பதே ஐக்கிய தேசிய கட்சி உயர் மட்டத்தின் விருப்பம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் பிணை முறி ஏல முறைக்கேடு தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் காரணமாக ஆளுநருக்கு எதிராக கூட்டமைக்கபட்டிருக்கும் மக்கள் மத்தியலான அபிப்பிராயங்கள் காரணமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெரும் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறார்.

அதனால் இவர் சுனில் ஹிந்து நெட்டி தலைமையினாலான பர்ராளுமன்ற குழுவின் அறிக்கை வெளியிடப்படும் வரை அர்ஜுன மகேந்திரனுக்கு பதவி நீடிப்பு வழங்குவது தொடர்பில் முடிவெடுப்பதை இடைநிறுத்தியிருப்பதாக சிவில் சமூக அமைப்புகளுக்கு உறுதியளித்திருக்கிறார்.

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# இலங்கை பொருளாதாரம் பின்னடைவை சந்திக்கும்

MOODY'S

இலங்கையின் வரி இலக்குகள் தொடர்ந்தும் பின்னடைவை சந்திக்கும் என்ற எதிர்வுகூறலுக்கு அமைவாக இலங்கையில் பொருளாதாரம் எதிர்காலத்தில் பின்னடைவை சந்திக்குமென மூடிஸ் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிங்கப்பூரை தளமாகக் கொண்டு இயங்கும் மூடிஸ் முதலீட்டு சேவை இலங்கையின் வெளிநாட்டு செலாவணி மற்றும் முறிகள் தரப்படுத்தலை B1 ஆக தரப்படுத்தியுள்ளது.

இது குறித்து அந்நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கையின் முறிகள் தொடர்பிலான நம்பிக்கை குறைவடைந்துள்ளமையினால் இலங்கையின் பொருளாதாரம் எதிர்காலத்தில் பின்னடைவை எதிர்கொள்ளவுள்ளது.

இவ்வாறான பின்னடைவிற்கு முக்கியமான 2 விடயங்களை அந்நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் வரி இலக்குகள் தொடர்ந்தும் பின்னடைவை எதிர்நோக்கும் என்ற எதிர்பார்ப்பு அதற்கான முதல் காரணமாகும்.

அத்துடன் வரித்திருத்தம் ஊடாக பெற்றுக்கொள்ள முடியுமான அடைவுகள் தொடர்பிலுள்ள அரசாங்கம் தற்போது வைத்துள்ள எதிர்பார்ப்பு குறைவடைந்துள்ளமை மற்றைய காரணமாகும். இவ்வாறான நிலையில் இலங்கை அரசாங்கத்தின் கடன் சுமை தொடர்ந்தும் அதிகரிக்கலாம் எனவும் மூடிஸ் முதலீட்டு சேவை நிறுவனம் எதிர்வுகூறியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால், கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வற்கு இலங்கையின் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையைக் குறைக்க வேண்டும் எனவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அதனால் சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச நிறுவனங்களால் கிடைக்கவுள்ள நிதி போதுமானதாக அமையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## பிரிட்டன் தந்த அதிர்ச்சி

# உலகம் முழுவதும் ஒரேநாளில் 2 லட்சம் கோடி டொலர் இழப்பு?




ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் வெளியேறியதன் காரணமாக கருப்பு வெள்ளி என்று அழைக்கப்படுகிற கடந்த 24-ம் திகதி சர்வதேச சந்தைகளில் 2 லட்சம் கோடி டொலர் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. தவிர பவுண்ட் நாணய மதிப்பு 31 வருடங்களில் இல்லாத அளவுக்கு சரிந்திருக்கிறது. 1985-ம் ஆண்டுக்கு பிறகு அதிக சரிவை இப்போது பவுண்ட் சந்தித்திருக்கிறது.

ஐரோப்பிய சந்தைகளில் கடும் சரிவு இருந்தது. பிரான்ஸ் பங்குச் சந்தை 8 சதவீதமும், ஜெர்மனி சந்தை 7 சதவீதமும், இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளின் சந்தையும் கடும் சரிவை சந்தித்தன. லண்டன் எப்டிஎஸ்இ சந்தை 3.2 சதவீதம் சரிந்தது. அமெரிக்க சந்தையான டவ் ஜோன்ஸ் கடந்த வெள்ளிக்கிழமை 3 சதவீதம் அளவுக்கு சரிந்தது.

சர்வதேச அளவில் பங்குச் சந்தைகள் சரிவு காரணமாக முதலீட்டாளர்கள் தங்கம் மற்றும் அரசு பத்திரங்களில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் வெளியேறியதன் காரணமாக குறுகிய காலத்துக்கு பங்குச் சந்தைகளில் ஏற்ற இறக்கம் இருக்கும் என்று சந்தை வல்லுநர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

பங்குச் சந்தையில் ஒவ்வொரு முறையும் ஏற்படும் நிச்சயமற்ற தன்மை, முதலீடு செய்வதற்கான வாய்ப்பு என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பல நிறுவனங்களின் வர்த்தகம் லேசாக பாதிக்கும் என்பது மட்டும் உறுதி சர்வதேச நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்துள்ள நிறுவனங்கள் தங்களின் வர்த்தகம் பாதிக்கும் லாபம் கையை கடிக்கும் என்று அஞ்சுகின்றனர்.

சூரியன் மறையாத பேரரசு' என்று ஒரு காலத்தில் மார்தட்டிய பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறிவிட துடித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ஐரோப்பிய கூட்டமைப்பிலிருந்து பிரிட்டன் விலகினால் அதனால் பலவீனமடையப் போவது ஐரோப்பிய ஒன்றியம் மட்டுமல்ல பிரிட்டனும்தான்.


சாதகங்கள்?: ஐரோப்பிய கூட்டமைப்பில் உறுப்பு நாடாக இருப்பதால் இதில் இடம் பெற்றுள்ள 28 நாடுகளுக்கும் தனது பொருள்களை எந்தவித வரிவிதிப்பும் இல்லாமல் பிரிட்டனில் விற்க முடிகிறது. அந் நாடுகளுக்கு பிரிட்டிஷ் குடிமக்கள் செல்வதற்கு 'விசா' அவசியமில்லை. அத்துடன் இந் நாடுகளில் பிரிட்டிஷார் கல்வி பயிலவும் தொழில், வர்த்தகம் செய்யவும் முடிகிறது.

பாதகங்கள்?

சாதகங்கள்தான் என்றால் பிரிட்டன் வெளியேறத் துடிப்பானேன் என்ற கேள்வியும் எழுகிறது. எது ஒன்றுக்கும் ஐரோப்பிய கூட்டமைப்பு மூலம் தான் பேசவோ, செயல்படவோ முடிகிறது என்று பிரிட்டன் நினைக்கிறது. தன்னுடைய உலக ஞானம், ராணுவ பலம், நாடாளுமன்ற நடைமுறையில தனக்கு இருக்கும் பெரும் பலம் யாவும ஐரோப்பிய கூட்டமைப்பு என்ற திரைக்குள் அமுங்கிப் போகிறதே என்பது பிரிட்டனின் மனக்குறை.

அதைவிட முக்கியம் பிற ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் வேலை தேடி பிரிட்டனுக்கு - அதிலும் குறிப்பாக லண்டனுக்கு - வருவது அதிகமாக இருக்கிறது. இதனால் லண்டன் முழுக்க விதேசிகளாகவே சுற்றித் திரிவது பிரிட்டிஷாருக்கு உறுத்தலாக இருக்கிறது. அவர்கள் குறைந்த சம்பளத்துக்கு வேலையில் அமர்வதால் தங்களுக்குரிய வேலைவாய்ப்பும் பறிபோவதாக நினைக்கின்றனர்.

# சிக்கலான உலகில் வாழ எளிய விதிகள்?




செயல்களை எளிதாக்கு ஆனால் நீ எளியவனாக வாழாதே- அல்பர்ட் ஐன்ஸ்டீன என்ற மேதையின் மேற்கோளோடு சிக்கலான உலகில் வாழ்வதற்கு எளிதான விதிகளை SULL & EISENHARDT என்ற நூலாசிரியர்கள் சுவைபட கூறியுள்ளார்கள். எல்லோருக்கும் எல்லாமும் கிடைப்பதில்லை ஆனால் கிடைக்கும் வாய்ப்புகளை எளிமையான முறையில் பயன்படுத்தி எளிமையான செயல்முறைகளால் மேலதிக பயனை பெறுபவர்கள் பெருவெற்றி பெற்றவராக கருதப்படுகிறார்கள். அதேபோல எளிதான விதிகள் என்று நூலாசிரியர்கள் கீழ்கண்டவைகளை கூறுகிறார்கள்.

வளங்களை சேமித்தல் (நேரம் மற்றும் சக்தி)
சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் சரி செய்து கொள்ளுதல்
குழப்பங்களை தவிர்த்து பிறகு ஏற்படும் தயக்கங்களை தாண்டிவருதல்
எல்லைக்கோட்டை வரைந்து எல்லைகளுக்குள் சிறப்பாக செயல்படுதல்
நெருக்கடியான நேரங்களில் மென்மையாக இணைந்து செல்லும் பாங்கை கையாளுதல்

இந்த ஐந்தும் இருந்தால் சிக்கலான உலகில் சிறப்பாக வாழலாம்.

நாளொன்றுக்கு குறைந்த பட்சம் 8,500 செய்திகளை நாம் எதிர்கொண்டு நம் கவனத்திற்கு போட்டி வைக்கின்றோம். அந்த போட்டியில் நெருக்கடிகளும், சிக்கல்களும் மேலோங்கி நிற்கும். அதுபோன்ற நேரங்களில் ஐந்தில் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைகளையோ இணைத்து செயல்பட்டால் எளிதாக வாழ முடியும்.

அறுபது ஆண்டுகளுக்கு முன் வாரன் வேவர் என்ற ஆய்வாளர் பிரச்சினைகளை அறக்கட்டளைக்காக மேற்கொண்ட ஆய்வில் இன்றைக்கும் பொருந்துமாறு முடிவுகளை சேர்த்திருக்கிறார். எளிதான மற்றும் நிரந்தரமில்லாத பிரச்சினைகளை எளிதில் தீர்க்க முடியும். இன்றைய மிகப் பெரிய கேள்வியே சிக்கலான பிரச்சினைகளை எளிதான செயல்முறைகளால் எவ்வாறு தீர்ப்பதே ஆகும்.

மாற்றத்தை ஏற்படுத்தும் மாற்ற முனைவர்கள் மாற்றம் என்பதை பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது தான் மிகப்பெரிய கேள்வி இந்த புத்தகத்தை இரண்டு மிகப்பெரிய பிரிவுகளாக பிரித்துக் கொள்ளலாம். முதல் பகுதி (பக்கம் 7 முதல் 82) குழப்பங்களை எவ்வாறு எதிர்க்கொள்ளுதல், வரையறை செய்தல், விதிகளை தூக்கி எறிதல் போன்றவை பற்றி விளக்கமாகக் கூறுகிறார்கள்.

இரண்டாம் பகுதி (பக்கம் 99 முதல் 227) சிக்கலான உலகில் எவ்வாறு வாழ்ந்துக் காட்டுவது என்பது பற்றி ஆறு தலைப்புகளில் சுருக்கமாக கூறியுள்ளனர். குறிப்பாக பக்கம் 173 முதல் 227 வரை மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளையும், விதிகளை திரும்ப எழுதும் செயல்பாடுகளும், எளிமைக்கு எதிரான தடைகற்களையும் மிக அழகாக குறிப்பிட்டுள்ளனர்.

மேலே சொன்ன பக்கங்களில் எளிமையான விதிகள் எவ்வாறு ஏற்படுத்தப்படுகின்றன என்பதை பற்றியும் அவற்றை எவ்வாறு செயல்முறைபடுத்துவது என்பது பற்றியும் சிக்கலான உலகில் அவைகளை எதிர்கொண்டு பிரச்சினைகளை தீர்ப்பது பற்றியும் விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

### எப்படி பின்பற்றுவது?

உதாரணமாக, காலநிலை மாற்றம் என்பது ஒரு கட்டுக்கதை. உலகமயமாக்கல் என்பது கெட்ட செயல் போன்றவைகளை நவீன வாழ்க்கை முறையில் எளிதாக ஏற்றுக்கொண்டு அடுத்ததை தேடி ஓட ஆரம்பிக்கிறார்கள். அப்பொழுது உலகமயமாக்கலின் நல்ல பயனை இழந்து கால நிலை மாற்றங்களால் ஏற்படும் விரும்பத்தகாத விளைவுகளை எதிர்கொண்டு வாழ்க்கையை நகர்த்துகிறார்கள். எளிதான விதிகள் இது போன்ற சச்சரவுகளில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.

பெரிய நிறுவனங்களில் எளிமையான வழிமுறைகளை செயல்படுத்துவது சில நேரங்களில் கடினமாக தோன்றலாம். ஆனால், முறைகளையும், செயல்பாடுகளையும் முனைந்து ஏற்படுத்தியிருக்கும் பெரிய நிறுவனங்கள் எளிதில் பிரச்சினைகளை தீர்க்கலாம். சிறிய நிறுவனங்கள் குறைந்த அளவிலான நபர்களை பணி அமர்த்தியிருக்கும் சூழ்நிலையில் பெரும்பான்மையான செயல்கள் எழுதப்படாத சட்டங்களாக தான் பின்பற்றபடுகின்றன. அது போன்ற நேரங்களில் குழப்பமான, சிக்கலான சூழ்நிலைகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தடைக்கற்களாக மாறுகின்றன.

### மாற்றம் தேவை?

பிரச்சினைகள் அதிகமாகும்பொழுது சில நேரங்களில் விதிகளும் சட்டங்களும் மாற்றி அமைக்க வேண்டியிருக்கும். நிறுவனங்களின் தொலைநோக்கு திட்டமிடுதல் பாதிக்கப்படலாம். இதுபோன்ற சூழ்நிலைகளில் எளிமையான செயல்பாடுகளையும் வழிமுறைகளையும் வகுத்துக்கொள்வது சிறுநிறுவனங்களுக்கு வெற்றியை தேடித்தரும். அது போன்ற சூழ்நிலைகளில் நிறுவனங்கள தகுதியான திறமையான தலைவர்களை எதிர்பார்த்து காத்திருக்கும். தகுதியான திறமையான தலைவர்கள் நிறுவன முழுமையையும் இடியாப்ப சிக்கலில் சிக்க விடாமல் எளிதான பயன்பாடுகளால் முன்னேற்றத்தைவரையறை செய்து கொண்டு நிறுவனத்தை மேலும் உயர்த்துகிறார்கள்.

### எளிமைப்படுத்து?

எளிமையான விதிகளை எல்லோராலும் ஏற்படுத்தி எல்லா சூழ்நிலைகளிலும் பயன்படுத்த முடியாது. எளிமையான வழிமுறைகளை கண்டறிவது ஒரு கலை, அதைக் காட்டிலும் அவ்வாறு கண்டறிந்த எளிமையான விதிமுறைகள் நமக்கு எவ்வாறு பயன்தரும் என்பதை அறிந்துக் கொள்வதாகும். இயற்கையான தேர்ந்தெடுத்தல் முறையில் ஒரு பிரச்சினையை தேர்ந்தெடுத்து விஞ்ஞான அறிவை உள்செலுத்தி எளிமையான விதிமுறைகளை படிப்படியாக எவ்வாறு பிரச்சினைகளை தீர்ப்பது என்று கண்டறிவது விவேகம். அவ்வாறு விதிமுறைகளை வரையறை செய்யும்பொழுது ஏதேனும் எதிர்ப்புகளோ குறைபாடுகளோ தவிர்க்க முடியாத காரணங்களால் தவறுகளோ ஏற்படலாம், அவ்வாறு ஏற்படுவதை தடுத்து தடைகளை தாண்டி வெற்றி பெறுவதற்கு எளிதான விதிமுறைகள் பெரிதும் உதவும். மேலே கூறிய வட்டமான தொடர் நிகழ்வுகளை ஒவ்வொரு பிரச்சினைக்கும் இணைத்து பார்த்தால் விடையும் எளிது, வெற்றியும் உறுதி.

பயனற்ற செயல்களாக இருந்தால் மறந்து விடுங்கள். ஏனென்றால், போலியான வழிமுறைகள் தடைகளை தாண்ட உதவாது. குழிகளில் பதுங்க முடியாது. அவ்வாறு எளிதான விதிமுறைகளை எவ்வாறு வடிவமைப்பது, எவ்வாறு மேம்படுத்துவது, மாற்றங்களை ஏற்படுத்துவது, தடைகளை தகர்த்து புதியதோர் வழிசெய்தல் மற்றும் எளிதான வழிகளுக்கு முட்டுக்கட்டைகளை தகர்த்து எரிதல் போன்றவைகளை பற்றி பக்கம் 173 முதல் 227 வரை ஆசிரியர்கள் வெகு தெளிவாக, அழகாக எளிமையான முறையில் எழுதியிருக்கிறார்கள்.

எண்ணற்ற வாய்ப்புகளை ஒருவர் எதிர்க்கொள்ளும் பொழுது குழப்பமான, கடினமான வழிமுறைகளை பின்பற்றி னால் வெற்றி எட்டாக்கனியாகும். மாறாக, முழுமையான பலமான வழிகாட்டுதலின்படி எளிமையான விதிமுறைகளை வகுத்துக் கொண்டு பிரச்சினைகளை எதிர் நோக்குபவர்கள் வெற்றியை தவிர வேறு எதையையும் அடைய முடியாது. எட்டாக்கனிக்கு உத்திகளை உருவாக்கி தோல்வியில் துவளுவதா? எட்டும் கனியை பறித்து சுவைத்து மகிழ்வதா? இப்பொழுதும் எளிதான வழிமுறைகள் உங்கள் வசமே உள்ளன. மாறுங்கள். மாற்றுங்கள் பயன்படுத்துங்கள்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,465.99 | 6,370.11 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,402.21 | 3,341.65 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 2,510.228

***உயர்வடைந்த பங்குகள்(ரூ)*** சிலோன் பிறின்டேர்ஸ்(110.00), பொகவந்தலாவ(10.70), சிங்கர் இன்ட்(186.20), பரஹன்(58.00), தப்ரபேன்(4.40).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** ஜே.கே.எச்(7.60), சிலாவ் பினான்ஸ்(18.90), மக்வூட்ஸ் எனர்ஜி(3.00), ரீ சிமோல் ஹோல்டர்(25.20), சிற்றி ஹவுஸிங்(9.30).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 145.01 | 148.81 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 191.17 | 209.03 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 155.00 | 169.48 |
| சுவிஸ் பிராங் | 148.20 | 155.41 |
| கனேடிய டொலர் | 110.62 | 116.03 |
| அவுஸ்திரேலிய டொலர் | 105.04 | 112.31 |
| சிங்கப்பூர் டொலர் | 106.20 | 111.06 |
| ஜப்பான் யென் | 1.41 | 1.48 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.15 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.54 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தமிழ் சினிமா வரலாறு

192

## மக்களைப் பெற்ற மகராசியில் கொங்கு தமிழில் பேசி நடித்தார்

**ஜெமினிகணேசனுடன் முதல் படம்**

பெண்ணின் பெருமையில் சிவாஜியும், ஜெமினி கணேசனும் இணைந்து நடித்தனர். இருவரும் சேர்ந்து நடித்த முதல் படம் இது.

இதில்,ஜெமினிகணேசன் அண்ணன். சிவாஜி தம்பி.

மனநோயாளியாக இருந்து, குணம் அடையும் குணச்சித்திர வேடம் ஜெமினிக்கு. சிவாஜிக்கு வில்லன் வேடம். சாவித்திரிதான் கதாநாயகி.

ஜெமினிகணேசனுக்கு, நடிப்பதற்கு நிறைய வாய்ப்புக்கள் குணச்சித்திர வேடம் என்பதால், அவர் நடிப்பு இப்படத்தில் கொடிகட்டிக் பறந்தது.

**சாக்ரடீஸ்**

ராஜா ராணி படத்தில் சிவாஜியும், பத்மினியும் இணைந்து நடித்தனர். கதை-வசனம் மு.கருணாநிதி.

இதில் சேரன் செங்குட்டுவன் நாடகத்தில் கவிதை நடையில் கருணாநிதி எழுதிய நீண்டவசனத்தை ஒரே மூச்சில் பேசி நடித்தார்., சிவாஜி. ஒரே ஷாட்டில் அக்காட்சி படமாக்கப்பட்டது.

சாக்ரடீஸ் வேடத்தில், சாக்ரடீசாகவே வாழ்ந்து காட்டினார்.

**நடிப்புப்போட்டி**

ரங்கூன் ராதா, மேகலா பிக்சர்ஸ் தயாரிப்பு. அண்ணாவின் கதைக்கு, கருணாநிதி வசனம் எழுதினார்.

இதில் சிவாஜியும், பானுமதியும் போட்டி போட்டு



அற்புதமாக நடித்தனர். படத்தின் கதாநாயகன் சிவாஜிதான் என்றாலும், வில்லன் போன்ற கதாபாத்திரம். சிரமமான வேடத்தை சிறப்பாக நடித்து பாராட்டுதல் பெற்றார்.

அந்த ஆண்டின் சிறந்த நடிகர் விருதை சிவாஜியும், சிறந்த நடிகை விருதையும், பானுமதியும் ரங்கூன் ராதா மூலமாகப் பெற்றனர்.

நகைச்சுவை நடிப்பிலும் சிவாஜிக்கு உள்ள வல்லமையை தெனாலிராமன் புலப்படுத்தியது.

நல்லவீடு, டி.எஸ்.பாலையா எம்.எல்.பதி ஆகியோர் சேர்ந்து தயாரித்த படம் இதில் ஒரு அதிசயம்.

ஆர். எஸ். மனோகர் கதாநாயகன், சிவாஜி வில்லன்!

சிவாஜி நடித்த வெகு சில தோல்விப் படங்களில் முதல் இடம் பெற்ற படம் இது.

ஆர்.ஆர்.சந்திரன் தயாரித்து அவரே ஒளிப்பதிவு செய்து டைரக்ட் செய்த நானே ராஜா படமும் தோல்வியைத் தழுவியது. ராமாயணத்தை சரித்திரக் கதையாக மாற்றி எழுதியிருந்தார், கண்ணதாசன், ராவணன் போன்ற கதாபாத்திரத்தில் சிவாஜி நடித்தார். ஸ்ரீரஞ்சனிதான் கதாநாயகி.

நல்ல வீடு, நானே ராஜா ஆகிய படங்களைப் பார்த்தவர்கள். சிவாஜி இனிமேல் இந்த மாதிரி படங்களில் நடிப்பதை தவிர்ப்பது நல்லது என்றார்கள்.

**வசனத்தில் புதுமை**

1957ஆம் ஆண்டில், மக்களைப் பெற்ற மகராசி, புதையல், மணமகன் தேவை, வணங்கா, முடி தங்கமலை ரகசியம், ராணி லலிதாங்கி, அம்பிகாபதி, பாக்கியாவதி ஆகிய 8 படங்களில் சிவாஜி நடித்தார்.

மக்களைப் பெற்ற மகராசி ஒரு முக்கிய சாதனை நிகழ்த்திய படமாகும்.

வி.கே. ராமசாமியும், ஏ.பி.நாகராஜனும் சேர்ந்து ஆரம்பித்த ஸ்ரீலட்சுமி பிக்சர்ஸ் பட நிறுவனம் இப்படத்தை தயாரித்தது. கதை-வசனம் ஏ.பி. நாகராஜன், இசை:கே.வி. மகாதேவன்.

மணப்பாறை மாடு கட்டி மாயவரம் ஏரு பூட்டி.. என்று பாடியபடி கட்டுக் குடும்பியுடன் சிவாஜி அறிமுகம் ஆகும் முதல் காட்சியே, ரசிகர்ரளின் கைத்தட்டலைப் பெற்றது. கொங்கு நாட்டு (கோவை வட்டார) தமிழில் அவர் பேசிய வசனத்தைக் கேட்டு, அனைவரும் வியப்படைந்தனர்.

காரணம் அதற்கு முன் எல்லா நடிகர்களும் எல்லாப் படங்களிலும் ஒரே மாதிரியாகத் தான் வசனம் பேசி நடித்தனர். தமிழ் நாட்டில் மட்டுமல்ல அகில இந்தியாவிலும் வித்தியாசமாகப் பேசி நடித்த முதல் நடிகர் சிவாஜிகணேசன்தான்.

(தொடரும்)

# அர்ஜுன மகேந்திரனும் ரகுராம் ராஜனும்



(18 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அர்ஜுன மகேந்திரனின் பதவிக் காலம் எதிர்வரும் 30 ஆம் திகதி முடிவதற்கு முன்னதாக பாராளுமன்றக்குழு அதன் ஆராய்வை முடித்துக் கொண்டு அறிக்கையைபூர்த்திசெய்து விடும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

மத்தியவங்கியின்முறைகேடுகள்தொடர்பான அந்த அறிக்கை கடுமையானதாக இருக்குமானால் அர்ஜுன மகேந்திரனுக்கு பதவி நீடிப்பு வழங்குவதா? அல்லது அவரைவீட்டுக்கு அனுப்புவதா? என்பது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுப்பதில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் நிலை வலிமையானதாக இருக்கும் என்று அரசியல் வட்டாரங்களில் சொல்லப்படுகின்றது.

**நம்பிக்கையில்லாப் பிரேரணை**

கடந்த 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூட்டு எதிரணியால் நிதியமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை அதிக பெரும்பான்மை வாக்குக ளால் தோற்கடிப்பதற்கு வசதியாக தனது தலைமையினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பிக்களின் உச்ச பட்ச ஆதரவை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன உறுதி செய்திருந்தார்.

அர்ஜுனா மகேந்திரன் விவகாரத்தில் ஐக்கிய தேசிய கட்சி விடாப்பிடியான நிலைப்பாடு ஒன்றை எடுப்பதை தவிர்க்கக் கூடிய ஒரு அரசியல் தந்திரோபாய வியூகமாகவே ஜனாதிபதி அவ்வாறு நடந்து கொண்டதாக பேசப்படுகின்றது. அதாவது நிதியமைச்சர் ரவி கருணா நாயக்காவின் பதவியைக் காப்பாற்ற உதவுவதற்கு பிரதி உபகாரமாக அர்ஜுன மகேந்திரனுக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஐக்கிய தேசிய கட்சி தலைமைத்துவம் கடுமையாக வலியுறுத்தக் கூடாது என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு என்று கூறப்படுகிறது.

அர்ஜுனா மகேந்திரனுக்கு பதவி நீடிப்பு வழங்கக் கூடாது என்று சுதந்திக் கட்சியின் மத்திய குழு ஏகமனதாக முடிவெடுத்திருக்கின்றது. அந்த முடிவை அலட்சியம் செய்ய ஜனாதிபதியால் முடியாது. அவ்வாறு அலட்சியம் செய்தால் சுதந்திரக் கட்சிக்குள் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் விசுவாசிகளுக்கு கையோங்குவதற்கு வாய்ப்புக் கொடுத்ததாக அமைந்து விடும்.

அதேவேளை அர்ஜுன மகேந்திரனுக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்க முன்வரவில்லை. இது மகேந்திரன் விவகாரத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் எதிர்நோக்குகின்ற சிக்கலை தெளிவாக வெளிக்காட்டுகிறது.

இன்று எழுகின்ற முக்கியமான கேள்வி அர்ஜுன மகேந்திரனின் விவகாரத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் காணப்படுகின்ற முரண்பாடான நிலைப்பாடுகள் மேலும் குறிப்பாக சொல்வதானால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான முரண்பட்ட நிலைப்பாடுகள் இரு பிரதான கட்சிகளும் சேர்ந்து அமைத்திருக்கும் தேசிய ஐக்கிய அரசாங்கத்தின் இருப்புக்கு அச்சுறுத்தலை தோற்றுவிக்குமா என்பதே ஆகும்.

அத்தகைய அச்சுறுத்தலை தோற்றுவிக்க கூடிய அளவிற்கு அந்த முரண்பட்ட நிலைப்பாடுகளை கூர்மையடைய விடுவதை தாங்கிக்கொள்ள முடியுமா?

**சாத்தியமான விட்டுக்கொடுப்புக்கள்**

விட்டுக்கொடுப்புக்களைச் செய்து இந்தச் சர்ச்சைக்கு ஓர் இணக்க பூர்வமான முடிவைக் காண்பதற்கான முயற்சிகள் திரை மறைவில் முன்னெடுக்கப்படுகின்றன என்று நம்பகமான அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

அர்ஜுன மகேந்திரனுக்கு பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் பதவியைக் கொடுத்து வேறு ஒருவரை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக நியமிப்பது என்பது பரீசீலிக்கப்படுகின்ற மாற்று வழிகளில் ஒன்று என்று கூறப்படுகின்றது. எது எவ்வாறு இருப்பினும் அர்ஜுன மகேந்திரனுக்கு மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை அடுத்த ஆறு வருடங்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்படுமேயானால் தென்னிலங்கை அரசியல் பெரும் கொதி நிலைக்கு உள்ளாகும் என்பதில் சந்தேகமில்லை.

(முற்றும்)

இளஞ்செல்வன்

நம்மிடமுள்ள குறைகளை நீக்கிக்கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிர்ஷ்டமாகும்.
-ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புனரமைக்கப்பட வேண்டும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ் மக்களும் கூட்டமைப்புக்குள் அடங்கியுள்ள அரசியல் கட்சிகளும் வெறுப்புக் கொண்டுள்ளமை வெளிப்படை.

இத்தகைய நிலைமைகளுக்கு காரணம் கூட்டமைப்பின் தலைமை எதுவும் செய்யவில்லை என்பது மட்டுமல்ல; மாறாக தமிழ் மக்களுக்கு எதிராக–இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செயற்படுகிறது என்ற குற்றச்சாட்டும் காரணமாக முப்பது ஆண்டு கால போராட்டத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இன்று அரசியல் ரீதியில் அநாதைகளாக உள்ளனர்.

இருக்கின்றவர்களும் தமிழ் மக்களின் கஷ்டங்களை, துன்பங்களை உளமார உணராதவர்களாக இருப்பதன் விளைவாக அவர்கள் ஆளும் தரப்புடன் ஒத்தூதவே முற்படுகின்றனர்.

இவற்றுக்கு எல்லாம் காரணம் தமிழர்களின் அரசியல் தலைமை என்பது கொழும்பைத் தளமாக –கொழும்பை வாழ்விடமாக–கொழும்பில் பொருளாதார வளத்தைக் கொண்டதாக இருப்பது என்பதுதான் கண்டறியப்பட்ட உண்மை.

எனவே கொழும்பை மையமாகக் கொண்ட தமிழ் அரசியல் தலைமையால் தமிழ் மக்களின் நலன்தொடர்பில் கவனம் இருக்கமாட்டாது.

மாறாக ஆளும் தரப்புடன் சேர்ந்து போவதே தங்கள் சுயநலனுக்கு ஒத்ததாக இருக்கும் என்று அவர்கள் முடிவெடுப்பார்.

இது தவிர கொழும்பை வாழ்விடமாகக் கொண்ட தமிழ் அரசியல் தலைமையை தனது நலனுக்காக பயன்படுத்துவது அரசுக்கும் சுலபமாக இருப்பதால், கொழும்பு தமிழ் அரசியல் தலைமையால் தமிழ் மக்கள் எந்தப் பயனையும் அடைய மாட்டார்கள் என்பது சர்வநிச்சயம்.

எனவேதான் இன்றுவரை தமிழ் மக்களுக்கு எந்த வித விமோசனமும் கிடைக்கவில்லை என்று அறுதியிட்டுக் கூறமுடியும்.

ஆக, தமிழ் மக்கள் இந்த நிலைமைகளை தற்போது மிகத்தெளிவாக அறிந்துள்ளனர்.

எனவே இத்தகைய நம்பிக்கையீனங்கள் தொடராத வகையில் மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளில் முக்கியமான இரண்டு விடயங்கள் உண்டு.

அதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புனர்நிர்மாணம் செய்தல். கூட்டமைப்பை புனர்நிர்மாணம் செய்து அடுத்த ஒரு நல்ல தலைமையை அறிமுகப் படுத்தி, வெளியில் நிற்கக்கூடிய தமிழ்ப் பற்றுள்ளவர்களையும் உள்வாங்கி கொழும்புத் தலைமை என்ற நிலையில் இருந்து மாற்றி தமிழ் மக்களுக்கான அரசியல் தலைமையாக அதனை மாற்றுதல்.

இந்த முயற்சியை செய்யவே முடியாது. கூட்டமைப்புக்குள் இருக்கக்கூடிய ஒரு சிலரை திருத்தவே இயலாது என்று அறுதியாக நம்பினால் கூட்டமைப்புக்குள் இருக்கக்கூடிய தமிழ்ப் பற்றாளர்களையும் உள்ளடக்கியதான புதிய கட்டமைப்பை புதிதாக உருவாக்கவேண்டும்.

இந்த விடயங்களில் ஏதாவது ஒரு விடயத்திற்கு வந்தாவது காலத்தின் கட்டாய அவசியமாகும்.

இதை நாம் செய்யாமல் எங்கள் அரசியல் தலைமைகள் சரியானவை அல்ல என்று குறை கூறுவதால் எந்தப் பிரயோசனமும் ஏற்பட மாட்டா.

அதே நேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தாம் சார்ந்த கூட்டமைப்பில் தவறான வழிநடத்தல்கள் இடம்பெறுகின்றன என்றவுடன் அதனைச் சரிப்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்தியிருக்கவேண்டும்.

எனினும் அவர்கள் தங்களை ஓரம் கட்டுகிறார்கள் என்ற நினைப்போடும் வெளியில் நிற்பதான மனநிலையோடும் இருந்தமையும் கூட்டமைப்பின் பாதை மாறிய பயணத்திற்கு காரணம் எனலாம்.

எதுவாயினும் கூட்டமைப்பின் கூட்டத்தில் நேற்று முன்தினம் அமைக்கப்பட்ட எண்மர் கொண்ட குழுவோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புனரமைக்க முற்படுவது சாத்தியமானதாகும் என நம்பப்படுகிறது.

# இலத்திரனியல் அடையாள அட்டை இரண்டு மாதங்களில் அறிமுகம்

## ஆட்பதிவு திணைக்களம் தகவல்

(கொழும்பு)

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் திட்டத்திற்கு நாடாளுமன்றத்தில் அனுமதி கிடைத்துள்ளதுள்ளதாகவும் அடுத்த இரண்டு மாதங்களில் இந்த திட்டத்தை அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் சரத் குமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்

40 வருட காலமாக இருந்து வந்த பழைய அடையாள அட்டைக்கு பதிலாக புதிய இலத்திரனியல் அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இந்த திட்டத்திற்காக 8 பில்லியன் ரூபாயுக்கும் அதிகமான நிதி செலவிடப்படவுள்ளதுடன் இதற்கான அங்கீகாரம் கடந்த செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள அடையாள அட்டையில், அனைத்து கைவிரல் அடையாளங்களையும் உள்ளடக்கிய உயிரியல் தகவல்கள் மற்றும் ஒளிப்படம் ஆகியன அடங்கிய இருக்கும். இப் புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை இலக்கத்தின் மூலம் சகல தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பாக வாக்குச்செலுத்துதல், வங்கி கணக்கு நடைமுறை, சாரதி அனுமதிப்பத்திரம் பெறல், கடவுச்சீட்டு பெறல், ஈ.பி.எப், ஈ.ரி.எப் (EPF, ETF) மீளப்பெறல், உடைமைகள் மாற்றம செய்தல் போன்ற சேவைகளை இலகுவாக்குவதுடன் ஓய்வூதியம் மற்றும் சமுர்த்தி நன்மைகளை உரியவரைத் தவிர வேறு நபர்கள் பெற்றுக்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த தரவுகள், குடிவரவுத் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைக்கப்படும்.

இப்புதிய அடையாள அட்டைக்கு 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். இதற்கு கிராம சேவகர் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். அத்துடன் இதுதொடர்பாக பிரதேச செயலக அதிகாரிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்படும்

மேலும் 15 ஆண்டுகளுக்கு ஒருமுறை இது புதுப்பிக்கப்பட வேண்டும். இந்த அடையாள அட்டை தொடர்பில் ஏதாவது மோசடிகள் ஏற்படின் 5 இலட்சம் ரூபாய் அபராதமும் சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் அத்துடன் இத் திட்டம் முழுமைப்படுத்த மூன்று வருடங்கள் ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# மின்சார கட்டணத்தை செலுத்த புதிய முறை

மின்சாரம் பயன்படுத்தும் காலத்தின் அடிப்படையில் கட்டணத்தை அறவிடுவதற்கான புதிய முறையொன்றை அறிமுகப்படுத்த பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. ஒக்டோபர் மாதம் முதல் இந்த புதிய திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன் பிரகாரம் காலை 5.30 மணிமுதல் இரவு 10.30 மணிவரை மற்றும் இரவு 10.30 மணிமுதல் காலை 5.30 மணிவரை என இரண்டு காலப்பகுதிகளாக பிரிக்கப்பட்டு மின் கட்டணம் அறவிடப்படும்.

இரவு 10.30 மணிமுதல் காலை 5.30 மணிவரை பாவிக்கப்படும் மின்சாரத்துக்கு அறவிடப்படும் கட்டணம் சாதாரண கட்டணத்தை விட நூற்றுக்கு 40 சதவீதத்தால் குறைவடைந்து காணப்படும் என பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த புதிய முறைக்குள் உள்வாங்கப்பட விரும்பும் பாவனையாளர்கள் 8 ஆயிரம் ரூபாய் மற்றும் அதைவிட குறைந்த கட்டணமொன்றை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

குறித்த திட்டமானது தற்போது பாரியளவில் மின்சாரத்தை பயன்படுத்திவரும் பாவனையாளர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளதாக காஞ்சன சிறிவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, சாதாரண பாவனையாளர்களுக்காக புதிய மின்சார அளவீடுகளை தற்போது தயாரித்து வருவதாகவும்,

மேலும் இத்திட்டத்தின் மூலம் மின்சார உற்பத்திச் செலவுகளை குறைத்துக்கொள்ள முடியுமெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (செ-12)

# யாழ்.மக்களின் பாதுகாப்பிற்கே இராணுவம் நிலைகொண்டுள்ளது

## மேஜர் ஜெனரல் மகேஸ் உரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வாழும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர் என யாழ்.மாவட்ட இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்து உள்ளார்.

காங்கேசன்துறை ரயில் நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் நடைபெற்ற காணி கையளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,


பயங்கரவாதிகளிடம் இருந்து உங்கள் நிலங்களை பாதுகாத்து இன்றைய தினம் உங்களிடம் மீள கையளிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். நல்லிணக்கத்தை மேலும் மெருகூட்டுவதற்காக அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது உங்களது பாதுகாப்புக்காகவும் , இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் மெருகூட்டுவதற்காகவும், உங்கள் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம். அத்துடன் நாங்கள் இங்கே நிலை கொண்டு இருப்பது உங்கள் பாதுகாப்புக்காகவே என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்கே காணப்படும் பல்வேறுபட்ட பிரச்சினைக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய பொறுப்பு எமக்கு நிச்சயமாக உண்டு. நிரந்தரமாகவும் உறுதியாகவும் இந்த பாதுக்காப்பை நாங்கள் உங்களுக்கு வழங்குவோம் என்பதனையும் கூறிக் கொள்கின்றேன்.

கடந்த 30 வருட காலமாக நாட்டில் ஏற்பட்ட யுத்தம் வடக்குக்கு மாத்திரமல்ல, தெற்குக்கு மாத்திரமல்ல, முப்படைகளும இந்த யுத்தத்தை உணர்ந்தவர்கள்தான். எனவே மீண்டும் ஒரு யுத்தம் நாட்டில் ஏற்படாமல் அனைவருக்கும் பாதுக்காப்பு வழங்குமுகமாக எங்கள் சேவைகளை நாங்கள் அர்ப்பணிப்புடன் ஆற்றுகின்றோம். யாழ்.குடாநாட்டில் வாழும் மக்கள் அனைவருக்கும் முற்று முழுதான சுதந்திரம் கிடைத்துள்ளது. உங்கள் கடமைகளை சுதந்திரமாக செய்ய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதேபோன்று சில பகுதிகள் மீள கையளிகப்படுகின்றது என மேலும் தெரிவித்தார். (செ-12)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## கவலை ஏன்?



பொருள், புகழ், செல்வாக்கு, புலனின்பம் என்பனவற்றில் பேராசை கொண்டு, கற்பனையால் சில வரவுகளை எதிர்பார்ப்பார்கள் அல்லது பிறரிடம் இருந்து கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். செயலுக்குத் தக்க விளைவு என்பது இறையாற்றலின் திருவிளையாடலாக இருக்கிறது. இந்த உண்மையறியாமல் செயலின்றிக் கற்பனையால் ஒரு விளைவை எதிர்பார்ப்பதும், கடமைக்குப் உறவுக்கும் பொருந்தாமல் பிறரிடமிருந்து ஒன்றை எதிர்பார்ப்பதே அல்லது ஆசையின் பெருக்கத்தால் அளவுக்கதிகமாக எதிர்பார்ப்பதோ வெற்றியடைவதில்லை. இது இயற்கை நியதி. சிந்தனையின்றி இயற்கையின் நியதிப்படி அமைந்த விளைவுகளை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்பார்த்த ஆசையையும் அப்படியே வைத்துக் கொண்டு, ஏமாற்றத்தையும் ஒப்புக் கொள்ளாமல், ஏற்படும் மனப்பிணக்கு தான் கவலை. இங்கு கடமைகளை ஒட்டி, செயல்களையொட்டித் திட்டமிட்ட விளைவுகளை எதிர்பார்ப்பது தவறாகாது. இது கடமையைச் சார்ந்ததாகும்.

கற்பனை எதிர்ப்பார்ப்பும் நீதியான தோல்வியும் பற்றியே இங்கு சிந்திக்கிறோம். தோல்விதான் இயற்கை நீதியென்று ஒப்புக் கொண்டால் தனது தவறு என்ற கற்பனை எதிர்பார்ப்புக் கலைந்து போகும். இந்த இரண்டையுமே ஒன்றோடு மற்றொன்றைச் சேர்க்காமல் வைத்துக் கொண்டு இரு நினைவுகளுக்கு மத்தியிலே மனதை வைத்துக் கொண்டு வருந்துவது தான் கவலை. எனவே, ஒருவர்படும் கவலையும் உள் ஒன்றிருக்கப்புறம் ஒன்று நினைக்கும் பொருந்தா மன நிலையே. இந்நிலையும் அறிவின் வளர்ச்சியைத் தடுக்கும்.

அறிவின் வளர்ச்சியுடைய உயிர்தான் ஆக்க வாழ்வு பெற முடியும். அறிவின் மதிப்புக் குறையாமல் உயிர் போனாலும் சரி அதை ஏற்றுக் கொள்வோம். அறிவு கெட்டு உயிர் நீடித்துப் பயனில்லையென்பது அறிஞர் கண்ட தெளிவு.

# நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக வல்லவன் உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்

## சென்.அன்ரனீஸ் வெற்றி







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித் துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன்- உதைபந்தாட்ட தொடரில் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனீஸ் வி.க. எதிர்த்து. மயிலங்காடு ஞானகலா வி.க. மோதியது.

போட்டியின் 8 ஆவது நிமிடத்தில் சென்.அன்ரனீஸ் அச்சுதன் மூலமாக முதலாவது கோலினை அடித்ததனை தொடர்ந்து தனது ஆதிக்கத்தினை வெளிப் படுத்தியது.


இரண்டாம் பாதி ஆட்டத்தின் 57 ஆவது நிமிடத்தில் ஞானகலா செந்தூரன் கோலினை அடித்து சமன் செய்ய விளையாட்டினை வேகப்படுத்திய சென்.அன்ரனீஸ் 61,72,75 ஆவது நிமிடங்களில் சுரேஸ், ஆமோஸ், உதயகுமார் ஆகியோர் கோலினை அடித்து வெற்றிக்கு வழிவகுத்தனர். ஆட்ட நேர முடிவில் 4:1 என அந்தோனியார்புரம் சென்.அன்ரனீஸ் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.அன்ரனீஸ் இளம் வீரர் ஆமோஸ் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் வழங்கி கௌரவித்தார். (கு)

# அமரர் சின்னத்துரை நாகரச ஞாபகார்த்த மென்பந்து சுற்றுப்போட்டி


## றொக்கெட் சம்பியன்
















அமரர் சின்னத்துரை நாகரச (புல்டேர்) வின் 6 ஆம் ஆண்டு நினைவாக நடத்தப்படும் மென்பந்து சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் றொக்கெட் வி.க. மற்றும் அச்சுவேலி மத்திய அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற றொக்கெட் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 74/9 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அச்சுவேலி மத்திய அணி 9.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 53 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 21 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது.

போட்டியின் ஆட்ட நாயகனாக டான்சன் தெரிவானார். (கு)

# இன்றைய போட்டிகள்

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தாச்சி சுற்றுப் போட்டி அரியாலை காந்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் நடைபெறும் போட்டியில் நவாலி சென்.றோக் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக்கழகமும் இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலிட்டி பாரதி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

➤➤➤➤➤

அமரர்களான கந்தசாமி, குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்தமாக சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபது-20 கிரிக்கெட் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சைனிங்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து றெயின்போ விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (கு)

# ஹென்றீசியன் சவால் கிண்ணம் பலாலி விண்மீன் வெற்றி



ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் லீக்சுற்று ஆட்டம் புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நடைபெற்ற போட்டியில்மன்னார்பணங்கட்டிகொட்டு சென். ஜோசப் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது.

சென்.ஜோசப் அணி கடந்த போட்டிகளில் சிறப்பாக ஆடியதனால் இலகுவாக போட்டியை வெற்றி கொள்ளும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் விண்மீன் வீரர் காண் டீபன் எல்லோர் எதிர்பார்ப்பினையும் மாற்றி அதிரடியாக இரண்டு கோல்களை அடித்து ஆட்டத்தின் போக்கினை மாற்றினார். ஆட்டத்தின இறுதிப்பகுதியில் விண்மீன் அணி மேலும் ஒரு கோலை அடித்து 3:0 எனும் கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சென்.அன்ரனீஸ் கலைமதி அடுத்த சுற்றுக்கு தகுதி

எவறெஸ்ட் வி.க. நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வரிசையில் 23 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற முதலாவது போட்டியில் நெடியகாடு இளைஞர் வி.கழகத்தை 6:1 என்ற ரீதியில் `யாழ். சென்.அன்ரனிஸ் வெற்றி பெற்றது. அடுத்த போட்டியில் அல்வாய் மனோகராவினை 2:1 என்ற ரீதியில் நவிண்டில் கலைமதி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. (கு)

# சரஸ்வதி சனசமூக நிலைய உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்




அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டுநடத்தப்படுகின்ற அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட தொடரில் அண்மையில் நடைபெற்ற முதலாவது போட்டியில் கலைவாணி வி.க. 0:2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது பாஷையூர் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம். இரண்டாவது போட்டியில் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம். 0:2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது யாழ். பல்கலைக் கழகம். (கு)

## 'கொத்து...

களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடருக்கு முன்னதாக இந்தக் குற்றச்சாட்டு விசமத்தனமாக எழுப்பப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சியும், இதுபோன்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் ஒவ்வொரு ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரின் போதும் எழுப்பப்படுவதாக கூறியிருக்கிறார். (செ-12)

## யாழ்.போதனா...

சுறுத்தியதுடன் வார்த்தை துஷபிரயோகம மேற்கொண்டதனையும் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு எழுத்துமூலம் அறிவித்திருந்தோம். இந் நிர்வாகம் ஒரு கண்துடைப்பு விசாரணையை மேற்கொண்டு தாதி ஒரு சிறுகுற்றம் மாத்திரம் புரிந்துள்ளார் என கூறி அவரை மீண்டும் பணிக்குத் திரும்ப அனுமதித்துள்ள்து.

குறித்த சம்பவத்தை நேரில் கண்ட பல சாட்சிகள் இருந்தும் ஒரு சிலரை மாத்திரமே விசாரித்துவிட்டு இந்த பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பாதிக்கப்பட்ட வைத்தியருக்கு எதுவித நீதியும் இன்றுவரை வழங்கப்படவில்லை.

தாபன விதிக்கோவையின் அடிப்படையில் கடைமையைச் செய்யவிடாது தடுத்தல் (Obstruction of duty) மற்றும் அச்சுறுத்தல் என்பன பாரிய குற்றச் செயலாக குறிப்பிடப்பட்டுள்ளவிடத்து தாதியானவர் சுயகட்டுப்பாட்டை இழந்து பேசியதை மாத்திரம் கருத்தில் கொண்டு அவர் ஒரு சிறுகுற்றம் புரிந்துள்ளார் என குறிப்பிட்டுள்ளது.

இச்சூழ்நிலையில் 25.06.2016 காலை இடம்பெற்ற வைத்தியர்களின் பொதுக்கூட்டத்தில் மீள் விசாரணையை வலியுறுத்தியும், குறிப்பிட்ட தாதி கடைமையில் இருக்கும் போது சத்திரசிகிச்சை கூடத்தை உபயோகிப்பது நோயாளர்களின் உயிருக்கு ஆபத்தான சூழலை தோற்றுவிக்கும் என்பதால் குறித்த தாதியை உடனடியாக இடமாற்றம் செய்யக் கோரியும், பாதிக்கப்பட்ட வைத்தியருக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்யக்கோரியும் வைத்தியர்களாகிய நாம் இன்று திங்கட்கிழமை காலை எட்டு மணியிலிருந்து கால வரையறை அற்ற பணிப் புறக்கணிப்பை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

இப் பணிப் புறக்கணிப்பானது பொதுவாக தாதியர்களுக்கு எதிரான ஒரு நடவடிக்கை அல்ல. ஒரு தனிப்பட்ட தாதியின் நடத்தை சம்பந்தமாக நிருவாகம் சரியான முறையில் செயற்படாததை கண்டித்தே இப் பணிப்புறக்கணிப்பு நடைபெறுகிறது. இந் நடவடிக்கைக்கு வைத்திய நிபுணர்களின் சங்கமும், பல்கலைக்கழக ஆசிரியர்களின் சங்கமும் தமது பூரண ஆதரவை வழங்கியுள்ளது.

பணிப்புறக்கணிப்பால் அவசர சிகிச்சைகளுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாது என்பதனை உறுதிப்படுத்துவதோடு ஏனைய வழிகளில் நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு மிகவும் வருத்தமடைகிறோம் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## நல்லூர் ஆலய...

அங்கிருந்து ஊர்வலமாக கோவில் வீதியில் அமைந்துள்ள யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்துக்கு சென்று மேற்குறித்த விடயம் தொடர்பான கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

இவ் இரு போராட்டங்களிலும் மதத்தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், கட்சி உறுப்பினர்கள், சிவில் அமைப்பினர், பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (செ-9)

### இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான

# ஐ.நா ஆணையாளரின் அறிக்கை இன்று வெளியிடப்பட வாய்ப்பு!

*(ஜெனிவா)*

***இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பிலான ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைனின் வாய்மூல அறிக்கை இன்று திங்கட்கிழமை ஐ.நாவின் இணையத் தளத்தில் வெளியிடப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.***

ஜெனிவாவில் கடந்த 13ஆம் திகதி ஆரம்பமான ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் 32ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பிலான தனது வாய்மூல அறிக்கையை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன் நாளை மறுதினம் 29ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ளார்.

இதன்போது, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் அரசாங்கத்தின் முன்னேற்றங்கள் மற்றும் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் தொடர்பில் அவர் தனது உரையில் குறிப்பிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அமைக்கப்படவுள்ள உள்ளக விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்வாங்கப்படமாட்டார்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உறுதியாக தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜெனிவாவில் முன்வைப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைனின் இந்த வாய்மூல அறிக்கை இணையத்தளத்தில் இன்று வெளியிடப்படலாம் என ஜெனிவாவில் உள்ள இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.



ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைனின் இந்த வாய்மூல அறிக்கையை முன்கூட்டி வெளியிடப்படுவதன் மூலம், அங்கத்துவ நாடுகள் தமது அவதானிப்புகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (செ-12)

# தென்னிலங்கை நிதி நிறுவனத்தை உடனே தடை செய்ய வேண்டும்

### பொலிஸ்மா அதிபரிடம் டக்ளஸ் எம்.பி வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியால் தடை செய்யப்பட்டுள்ள பிரமிட் முறை சார்ந்த தென்னிலங்கை நிதி நிறுவனமொன்று யாழ்.குடாநாட்டில் எமது மக்களில் பலரை பாதிப்படையச் செய்து வருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே, இதனை இனங்கண்டு, இந்த நிறுவனத்தை தடை செய்வதுடன், பாதிப்படைந்துள்ள எமது மக்களுக்கு எவ்வகையில் மீள் நிவாரணம் அளிக்க இயலும் என்பது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, பொலிஸ்மா அதிபருக்கு வலியுறுத்தியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா, பிரமிட் முறை சார்ந்த கட்டமைப்பினைக் கொண்டதான இந்த நிதி நிறுவனமானது கடந்த காலங்களில் தென்பகுதியில் பல்வேறு இடங்களில் தமது செயற்பாடுகளை மேற்கொண்டிருந்த நிலையில், பெருந்தொகையான மக்கள் இதனால் பாதிக்கப்பட்டு, பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை மேற்கொண்டதையடுத்து, மத்திய வங்கி இவ்வகைக் கட்டமைப்பினாலான நிதிசார் நடவடிக்கைகளுக்கு தடைவிதித்தது. அதன் பின்னர், தென்பகுதியில் தலையெடுக்காதிருந்த மேற்படி நிறுவனத்தின் செயற்பாடுகள் சில வருடங்களுக்கு முன்பதாக யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதனால் அப்பகுதியில் பெரும்பாலான மக்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தனர்.

இந்நிலையில் இது பற்றி எமக்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்த நிலையில் இதன் செயற்பாடுகளை நாம் தொடரவிடவில்லை. தற்போது மீண்டும் யாழ்ப்பாணத்தில் இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்வதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த நிறுவனத்தின் செயற்பாடுகளால் குறிப்பிட்ட ஒரு சிலர் நன்மை அடைகின்றனரே தவிர பாரிய அளவிலான மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இது தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து இந்த நிறுவனத்தின் செயற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படியும், அதே நேரம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதேனும் வகையில் உதவக்கூடிய வாய்ப்புகள் குறித்தும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்படியும் பொலிஸ் மா அதிபரிடம் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார். (செ-12)

## எனது வெற்றி...

பொலநறுவை மெதிரிகிரிய பௌத்த மத்திய நிலையத்தில் நடைபெற்ற பௌத்த பீட அங்குரார்ப்பண நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவற்காகவே நான் போரை முடிவுக்குக் கொண்டு வந்தேன் எனவும் ஆட்சிக்காலத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழ் மக்களின் நிலங்களை மீள ஒப்படைக்கத் தொடங்கியிருந்தோம்.

எனினும் என்னால் வெற்றி கொள்ளப்பட்ட போரின் நினைவுகளை மக்கள் மனங்களில் இருந்து அகற்றிவிட மைத்திரி தலைமையிலான அரசாங்கம் விரும்புகின்றது.

ஆனால் மக்கள் சிறந்த தலைவர்களை என்றுமே மறப்பதில்லை.

மேலும் தற்போதுள்ள தேசிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் பசு மாடும் எருமை மாடும் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஒப்பானது. வெறுமனே கடன் சுமையினை காட்டி மக்களை ஏமாற்றுகின்ற இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளில் மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர்.

எனவே இன்று காணப்படுவது நல்லாட்சியா என்பதனை அனைத்து மக்களும் கேள்வி எழுப்ப வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார். (செ-12)

# மாணவி மீது துஷ்பிரயோகம்; 9 பேர் இதுவரையில் கைது

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் வரணி பகுதியில் உள்ள பாடசாலை மாணவி ஒரு வரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய விவகாரத்தில் இதுவரை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் உட்பட 9 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வரணி பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 6இல் கல்வி கற்கும் பதினொரு வயதுடைய மாணவியை துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பாக கடந்த தினங்களுக்கு முன்னர் துஷ்பிரயோகம் புரிந்ததாக சந்தேகிக்கப்படும் ஆசிரியர் மற்றும் சம்பவத்தை மறைக்க முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் அதிபர், ஆசிரியர்கள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் அதே பாடசாலையை சேர்ந்த மேலும் 3 ஆசிரியர்களும் பழைய மாணவர் ஒருவரும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரை இச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 9 பேரையும் எதிர்வரும் ஜுலை முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி துஷ்பிரயோகம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (செ-89).

## சீனிக்கான வரி...

நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனிக்கான வரி அதிகரிக்கப்பட வேண்டும் என தான் முன்னதாக தெரிவித்திருந்த போதும், அது குறித்து பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

எனினும், தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்த இங்கிலாந்து போன்ற நாடுகளில் சீனிக்காக வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மென்பானங்களில் சீனியின் அளவைக் குறிக்கும் வர்ண குறியீடுகளை அறிமுகப்படுத்தும் சட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (செ-12)

## போதைப்பொருள்...

இடத்தில் மட்டகளப்பு மாவட்டமும் காணப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மதுவுக்கு முற்றுப்புள்ளி என்ற அடிப்படையில் நாடளாவிய ரீதியில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்ச்சி திட்டத்தின் ஒரு பகுதியாக நேற்றுக் காலை 10 மணிக்கு நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் மது ஒழிப்பு தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் கூட்டத்தில் ஜனாதிபதி கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (செ-12)

## பாலத்தில்...

வட்டக்கச்சியில் நேற்று பிற்பகல் மூன்று மணியளவில் பன்னங்கண்டியில் இருந்து வட்டக்கச்சி நோக்கி நான்கு பேருடன் சென்று கொண்டிருந்த மோட்டர் சைக்கிள் ஒன்று வட்டக்கச்சி சுவிற்செண்டர் முகமட் முன்பள்ளிக்கு அருகாமையிலுள்ள பாலம் ஒன்றில் மோதியதில் ஒருவர் பலியானதுடன் இருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்

இந்த விபத்தில் பலியானவர் சாந்தபுரம் அம்பாள் நகரை சேர்ந்த 28 வயதான துரைராசா இராமகிஷ்ணன் என கிளிநொச்சி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவரது சடலம் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகினறனர். (செ-312)

## இந்தியா...

அளவிலான நல்லுறவுகளை அரசாங்கம் முன்னெடுக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

காலியில் நேற்று இடம்பெற்ற ஐ.தே. கட்சிக்கு புதிதாக அங்கத்தினர்களை இணைத்துக்கொள்ளும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார். (செ-12)

## நல்லூர் ஆல...

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை வட மாகாண காணாமல் ஆக்கப்பட்ட குடும்ப உறவுகளின் சங்கம், மயிலிட்டி மீள்குடியேற்ற குழு, மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், வலி வடக்கு மீள்குடியேற்றம் புனர்வாழ்வுசங்கம், வலி வடக்கு நலன்புரி நிலையங்களின் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து மேலும் பல சமூக அமைப்புக்கள் முன்னெடுக்கவுள்ளன.

நல்லூர் ஆலய முன்றலில் அணிதிரளும் போராட்டக்காரர்கள் அமைதி ஊர்வலமாக கோவில் வீதியில் அமைந்துள்ள யு.என்.எச.சி.ஆர். அலுவலகம், வரை சென்று மகஜரினை கையளிக்கவுள்ளனர்.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தக் கோரியும் தாம் தொடர்ச்சியாக ஏமாற்றப்படுவதை உலக நாடுகளுக்கு தெரியப்படுத்தும் வகையிலும் காணாமல் ஆக்கப்பட்ட குடும்ப உறவுகளின் சங்கத்தினால் இன்று காலை 10 மணியளவில் நல்லூர் ஆலய முன்றலில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடர் இடம்பெற்று வருகின்ற நிலையில், வடக்கில் தமிழ் மக்கள் நீதிகிடைக்காமல் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை உலக நாடுகளுக்கு வெளிப்படுத்தும் வகையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தக் கோரி வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் போனவர்களின் உறவினர்கள் இன்று அணிதிரளவுள்ளனர்.

23 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ தடுப்பு...

யம் வரையான வீதி பொது மக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

வலி வடக்கு பகுதியில் உள்ள பொதுமக்களின் நிலங்கள் பகுதி பகுதியாக விடுவிக்கப்பட்டுவரும் நிலையில் நேற்று முன்தினம் 201.3 ஏக்கர் காணி பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டதுடன், காங்கேசன்துறை புகையிரத நிலையமும் மக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 26 வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த இப்பகுதியில் மாவட்டபுரத்துக்கு அருகில் இராணுவ தடுப்பு அரண் அமைக்கப்பட்டிருந்தது.

அப்பகுதிக்கு பொதுமக்கள் சுதந்திரமாக செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் குறித்த தடுப்பு அரண் நேற்றைய தினம் முற்றாக அகற்றப்பட்டதுடன் பொதுமக்கள் காங்கேசன் துறை புகையிரத நிலையம் வரை போக்குவரத்து செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை காலமும் தெல்லிப்பழை மற்றும் மாவட்டபுரத்தில் இருந்து சேவையாற்றிவந்த பயணிகள் பேருந்து சேவைகள் நேற்றையதினம் காங்கேசன்துறை வரை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (செ-9)


நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில்
கவர்ச்சிகரமான சம்பளத்துடனான
வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய

O/L உடன் · Business & Hotel Management
UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE >>> English Course

3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.

புதிய பிரிவு ஆரம்பம்
Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798

SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
077 3616 798
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)
(C-5034)



CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.






(C-5028)
CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062



# 2020 இல் நீங்களும் பொறியியலாளராகுங்கள்-பொறியியல் கற்கை அனுமதிகள்

SONA COLLEGE OF TECHNOLOGY
A Grade By NAAC / NBA, Affiliated To Anna University - Tamil Nadu







Dr.A.P.J Abdul kalam inaugurating Satellite live lecture



Microprocessor Lab & Digital IC Lab



Students Discussion Room



Pattern Making and Grading Lab



PG Auditorium



E-Learning Lab



Strength of materials Lab


A/L கணித பாடத்துடன் MATHS,PHYSICS,CHEMISTRY ஆகிய பாடங்களில் 2C,1S அல்லது அதற்கு அதிகமான பெறுபேறுகளை பெற்றுள்ளீர்களா? அப்படி என்றால் நீங்கள் உலகப்பிரசித்தி பெற்ற அண்ணா பல்கலைக்கழகத்தின் பொறியியல் பட்டதாரி ஆகலாம்.

A/L கணிதம் படித்த அனைவருக்குமே ENGINEER ஆக வேண்டுமென்பது கனவு. ஆனால் மிக சொற்ப அளவினரே இலங்கையில் பொறியியலாளராக முடியும் என்பது நடைமுறை. அதனாலென்ன! இலங்கையின் பொறியியல் பீடங்களைவிட சர்வதேச ரீதியில் முன்னிலையில் இருக்கும் அண்ணா பல்கலைக்கழகத்தின் மாணவராவதன் மூலம் உங்கள் கனவை நிறைவேற்றுங்கள்.

எமக்கூடாக SONA COLLEGE ல் கல்வி கற்ற 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் இலங்கை,சிங்கப்பூர்,அமெரிக்கா,அவுஸ்ரேலியா உட்பட சகல மேலைத்தேய நாடுகளிலும் பொறியியலாளர்களாக பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள்.

SONA COLLEGE OF TECHNOLOGY ன் சிறப்பம்சங்கள்

- மிகவும் குறைந்த கல்விக்கட்டணம்
- இந்திய அளவில் மிகச்சிறந்த பொறியியல் கல்லூரி
- சர்வதேச மாணவர்களுக்கு சிறப்புக்கவனம்
- ஆண்கள் ,பெண்களுக்கென தனித்தனி உடற்பயிற்சி கூடங்கள் ,விளையாட்டுக்கள்,நீச்சல் தடாகங்கள்
- ஆண்கள் , பெண்களுக்கென தனித்தனி விடுதிகள்
- நூற்றுக்கு மேற்பட்ட இலங்கை மாணவர்கள் ஏற்கனவே பொறியியல் பட்டம்பெற்று இலங்கையிலும்,வெளிநாடுகளிலும் நல்ல வேலையில் உள்ளனர்
- நீங்கள் விரும்பிய பொறியியல் துறையினை தெரிவுசெய்யும் சுதந்திரம்
- இலங்கையில் அரசாங்க வேலை உட்பட எந்த வேலையிலும்100%அங்கீகாரம்

100% Guaranteed VISA

கனடா நிரந்தர வதிவிட வாய்ப்புக்கள்

SONA கல்லூரியில் எமக்கூடாக சேர்ந்து CIVIL ENGINEERING படிக்கும் மாணவர்களுக்கு இலங்கையிலோ,வெளிநாடுகளிலோ 2 வருட வேலைவாய்ப்புக்குப் பின்னர் கனடாவில் நிரந்தரமாககுடியேற (PERMANENT RESIDENT) வழிவகைகள் செய்து தரப்படும்.

A/L PASS → 4 YEAR CIVIL ENGINEERING → 2 YEAR WORK EXPERIENCE → CANADA PR

SONA COLLEGE OF TECHNOLOGY - COURSES OFFERED

- CIVIL ENGINEERING
- MECHANICAL ENGINEERING
- ELECTRICAL & ELECTRONICS ENGINEERING (EEE)
- ELECTRONICS & COMMUNICATION ENGINEERING (ECE)
- COMPUTER SCIENCE & ENGINEERING (CSE)
- INFORMATION TECHNOLOGY (IT)
- FASHION TECHNOLOGY
- GENARAL ENGINEERING

(C-5032)





VINOTH THEVACHANDRALINGAM
CIVIL ENGINEER (2008-2012)

2008 ம் ஆண்டு கல்லூரியில் சேர்ந்த நான் எனது விருப்பமான தெரிவான CIVIL துறையை தெரிவு செய்தேன். மேலும் A/L ல் 3C பெற்றமையால் கல்லூரி கட்டணத்தில் சிறப்பு சலுகைகளையும் பெற்றுக்கொண்டேன். அதுமட்டுமல்லாது 3 வருடங்களாக கல்லூரி CRICKET கழக தலைவராகவும் இடம் பெற்றமையால் இதற்கான சிறப்பு கட்டண சலுகையையும் பெற்றுக்கொண்டேன். 2012 ல் பல்கலைக்கழக கல்வியை நிறைவு செய்த நான் யாழ்ப்பாணம் தொண்டைமானாற்று பாலத்தினை பூர்த்திசெய்யும் வேலையில் CIVILENGINEER ஆக 6 மாதகால அனுபவத்தினை பெற்றபின்னர் 2013ம் ஆண்டு சிங்கப்பூரில் CIVIL ENGINEER ஆக அடிப்படை சம்பளம் 3 இலட்சத்துடன் வேலைக்குச் சேர்ந்தேன் .இதன் மூலம் நான் நான்கு வருடங்களாக எனது பெற்றோர் எனது படிப்பிற்காக செலவழித்த அனைத்து செலவுகளையும் (கல்விக்கட்டணம்,தங்குமிடம்,சாப்பாடு) ஆறே (6) மாதத்தில்பெற்றுக்கொண்டேன்.MAY 2016 உடன் 3 வருட அனுபவத்தினை பூர்த்தி செய்து பதவி உயர்வினையும் சம்பள அதிகரிப்பினையும் பெற்றுக்கொண்டதோடு அடுத்த வருடம் கனடாவிற்கு அல்லது அவுஸ்ரேலியாவிற்கு குடியகலவும் முடிவுசெய்துள்ளேன். இலங்கையில் பொறியியல் துறைக்கு அனுமதி கிடைக்காத போதும் எனது எதிர் காலத்தைப்பற்றி எந்தவித குழப்பமும் இன்றி சரியாக வழிகாட்டிய V4 EDUCATIONAL CONSULTANCY நிறுவனத்திற்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அனுமதிகளுக்கு - 0768226243 V4 EDUCATIONAL CONSULTANCY 49 A சப்பல் வீதி யாழ்ப்பாணம்




Swimming Pool



Girls Gym



Boys Gym



Billiards



Girls Hostel Room



Conference Hall



Surveying Practice

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.